637
637
1328

நித்தில வாசகம்

ஐந்தாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 JUL 1938
MADRAS
1322

தமிழாசிரியர்
மயிலை-சிவமுத்துக்குமாரசுவாமி முதலியார்
எழுதியது

சென்னை
கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி

நித்தில வாசகம்

ஐந்தாம் புத்தகம்

1322
~~1354~~
474-81986

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 JUL 1938
MADRAS

சென்னை, முத்தியாலுப்பேட்டை உயர்தர கலாசாலைத்
தமிழாசிரியர்

மயிலை - சிவ - முத்துக்குமாரசுவாமி முதலியார்

எழுதியது

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி

சென்னை

பதிப்புரிமை]　　1938　　[விலை அணா 6½

Approved by the Madras Text-Book Committee,
Vide Consolidated List on page 211 dated 10th May, 1938.

The Jupiter Press, 16, Sembudoss Street, Madras.

முகவுரை

குழந்தைகளின் மனோபாவனைகளை நன்குணர்ந்து, அவர்கட்குப் பெரிதும் பழக்கமான நிகழ்ச்சிகளையே ஆய்ந்தெடுத்து, அவைகட்குத் தொடர்பும் பொருத்தமும் காட்டி, அவர்கள் விரும்பிக் கற்கும் வகையில் பாடங்களை வகுத்து, உரை நடையினையும் சொல் வகையினையும் படிப்படியாக உயர்த்திப் புத்தகம் எழுதுதல் வேண்டும் என்பது இக்காலத்து அறிஞர் பலரின் கருத்து.

நித்தில வாசகம் எனப் பெயரிய இந்நூல் வரிசை மேற்கூறிய நலன்கள் பலவும் வாய்ந்து வெளிவருவதாகும். இவ் வரிசையில் வரும் புத்தகங்கள் யாவும் கிராம வாழ்க்கைக்கும் நகர வாழ்க்கைக்கும் இன்றியமையாதனவா யுள்ள உழவு, கைத்தொழில், வாணிபம் ஆகிய இவைகளையே அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. குழந்தைகளின் பிற்கால வாழ்க்கைக்குப் பெரிதும் வேண்டுவனவா யுள்ள பூத பௌதிக ரஸாயன நூல்களின் உண்மைகளும், அறிஞர் பலரின் சரிதங்களும், பிறவும் இவ்வாசகங்களில் அமைந்திருத்தல் நோக்கற் பாற்று. பாட புத்தகத்தின் இறுதியில் உள்ள குறிப்புக்கள் ஆசிரியர்களுக்கு மிகுதியும் உதவி புரியும்.

இவைகளைக் கற்கும் சிறுவர் சிறுமியர் உலக அறிவு, நல்ல பழக்கம், குடும்ப வொற்றுமை, தமிழ்ப் பற்று, தெய்வ பக்தி முதலியவைகளைப் பெறுவதோடு தமிழில் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வல்லுநராவர்.

ஆசிரியத் துறையில் ஏறத்தாழ இருபத்து மூன்று ஆண்டுகளாகப் பழகியும், பாலர் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிற் பாடம் போதித்தும் அடைந்த அனுபவத்தின் பயனால் எழுதப்பட்ட நித்தில வாசகம் என்னும் இப்பாட புத்தகங்களை நான் நம் தமிழுலகிற்கு ஒரு சிறு காணிக்கையாகச் செலுத்துகின்றேன்.

ஆக்கியோன்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 JUL 1938
MADRAS

உள்ளுறை

எண்			பக்கம்
1.	‘வைகறைத் துயிலெழு’	...	1
2.	செல்வ மைந்தன்	...	4
3.	தேகப் பயிற்சி	...	9
4.	நற்குணமுள்ள சிறுவன்—படம்	...	11
5.	நமது நாடு	...	12
6.	இலக்கணப் பாடல் I (திணை, பால், எண், இடம்)	...	16
7.	சிறியோரெல்லாம் சிறியருமல்லர்	...	17
8.	நாலும் இரண்டும்	...	21
9.	விடுமுறைக்கால வேலை	...	22
10.	நாட்குறிப்புப் புத்தகம்	...	27
11.	வேளாண்மை—பழமொழிகள்	...	31
12.	இலக்கணப் பாடல் II (வேற்றுமை)	...	36
13.	திக்கற்ற ஏழைக் கிழவி	...	38
14.	வழக்கினால் வந்த கேடு—படம்	...	44
15.	நாம் செய்யவேண்டுவன	...	45
16.	காப்பிக்கொட்டையின் வரலாறு	...	47
17.	இலக்கணப் பாடல் III (வினையும் காலமும்)	...	53
18.	‘அப்பா, இது என்ன புத்தகம்’	...	54
19.	தமிழ் மொழி வாழ்த்து	...	59
20.	கதைப்படம்—தவளையும் சிறுவரும்	...	60
21.	எறும்புகள் நமக்குக் கற்பிக்கும் நீதிகள்	...	61
22.	பொருள் சேர்க்கும் வழி	...	66
23.	காட்டு மிருகங்கள் I	...	70
24.	,, II	...	76
25.	கட்டுரைப் பயிற்சி I (பழமொழி)	...	80
26.	உலகத்தோடு ஒத்துவாழ்	...	81
27.	புணர்ச்சி இலக்கணம்	...	86

எண்			பக்கம்
28.	தைரியமுள்ள சிறுவன்—படம்	...	87
29.	என் கடற் பிரயாணம்—கடிதம்	...	88
30.	முயற்சி திருவினை ஆக்கும்	...	93
31.	படித்துப் பயிர்த் தொழில் செய்—படம்	...	98
32.	கட்டுரைப் பயிற்சி II (உவமைகள்)	...	99
33.	நன்மணி	...	101
34.	பிழையின்றி எழுதுதல்	...	107
35.	அருந்தமிழ்ச் செய்யுள்	...	111
36.	முறையீடு	...	112
37.	மூதுரையும் நல்வழியும்	...	113
	குறிப்பு	...	115

MADRAS

நித்தில வாசகம்

ஐந்தாம் புத்தகம்



1. ‘வைகறைத் துயில் எழு’

புதிய பதங்கள் : வைகறை, சாளரம்.

அருந்தொடர் : இருட்படலம், மழலைமொழி, பசுமரத்தாணி.

கிழக்குத் திசையிலே வானம் சிறிது வெளுப்பதற்கு முன்பே சேவற் கோழி, ‘கொக்கர-கோ’ எனக் கூவ ஆரம்பிக்கின்றது. ‘கா-கா’ எனக் காகங்கள் கரைகின்றன. குயில்களும், பிற பறவைகளும் தங்கள் இனிய குரலால் பாட்டு இசைக்க ஆரம்பிக்கின்றன. வண்டுகள்

ரீங்காரஞ் செய்துகொண்டு மரஞ்செடிகள்தோறும் பறந்து செல்கின்றன. மலர்கள் தங்கள் இனிய இதழ்களை விரித்து நறுமணத்தினை நாற்புறமும் பரப்புகின்றன.

பிள்ளைகளே, நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? இன்னுமா படுக்கையிற் புரண்டு புரண்டு உறங்குகிறீர்கள்! இப்போதே விழித்துக்கொள்ளுங்கள்; உங்கள் கண்களை நன்ருகத் துடைத்துக்கொண்டு படுக்கை அறையினை விட்டு வெளியே வாருங்கள்; கிழக்குத் திசையில் சூரியன் பொற் பந்தினைப்போலத் 'தக-தக' எனப் பிரகாசிப்பதைப் பாருங்கள்! இருட் படலங்கள் இருந்த இடம் தெரியாமல் ஓடுகின்றன. சூரியன் தன் கிரணங்களாகிய கைகளால் மேகக் கூட்டங்களை விலக்கிக்கொண்டு வெளிவருவதைப் பார்த்து நீங்கள் மகிழுங்கள்.

தோட்ட வேலை செய்பவர் ஏற்றக்கோல் பிடித்து நீர் இறைத்து, மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகின்றனர். உழவர்கள் ஏர் பிடித்து உழுகிருர்கள். வயது சென்ற கிழவிகள்கூட எழுந்து, தங்கள் வீட்டுவேலைகளைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஏணையில் உறங்கும் சிறு குழந்தைகளும் விழித்துக்கொண்டு மழலை மொழிகளால் தங்கள் பெற்ருேரை மகிழ்விக்கின்றன.

படிக்கும் பருவமுள்ள பிள்ளைகளே, நீங்கள் இன்னும் படுக்கையை விட்டு எழுந்திராவிடில், சூரியனுக்குக் கோபம் வந்துவிடும். அவன் சாளரத்தின் வழியாகப் படுக்கையறைக் குள் நுழைந்து, உங்கள் கண்களைச் "சுர்" என்று குத்து வான். நீங்கள் சுளித்த முகத்துடன் எழுந்து கொட்டாவி விடுவீர்கள். அறையை விட்டு வெளியே வருவதற்கு உங்கள் கண்கள் கூசும். உடலோ, சோம்பல் கொண் டிருக்கும். அச் சோம்பலைப் போக்க நீங்கள் உங்கள்

உடலைக் கோணல் கோணலாக நெளிப்பீர்கள். அப்போது உங்களைப் பார்த்துப் பலரும் ஏளனம் செய்வர். அதிகாலை யில் படுக்கை விட்டு எழுகின்றவர்களுக்கு உடம்பு சுறு சுறுப்பாய் இருக்கும்; கண்கள் குளிர்ச்சியாய் இருக்கும்; உள்ளத்தில் ஒருவித மகிழ்ச்சி தோன்றும்; முகம் அழகு பெற்று விளங்கும். அவர்களைப் பார்க்கும் பலரும், 'நல்ல பிள்ளை' என்று சொல்லிப் புகழ்ந்து பேசுவர்.

நாம் அதிகாலையில் விழித்துக்கொள்ள வேண்டும் என்னும் நன்னோக்கத்தினாலேதான் அறிவிற் சிறந்த அவ்வைப் பிராட்டியாரும், "வைகறைத் துயில் எழு," என்று கூறியருளினர். திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை முதலிய பாடல்களும் நாம் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும் என்பதையே அறிவிக்கின்றன. கல்வியில் தேர்ச்சி பெற விரும்பும் மாணவர்கள் சூரியோதயத்திற்கு முன்பே விழித்துக்கொள்வது மிகவும் அவசியம். பகல் முழுதும் வருந்தி உழைத்துக் களைப்புற்றிருக்கும் நம்முடல் இரவில் ஓய்வடைந்திருத்தலின், விடியற்காலையே வாசிப்பதற்குச் சிறந்த காலம். அதிகாலையிலேதான் நம் உள்ளம் தெளிவு பெற்றுத் தூய்மையுடன் விளங்கும். காலைப் பொழுதில் கற்க ஆரம்பித்தால், அவை நமது மனத்தில் பசுமரத்தாணி யென நன்கு பதியும். பேரும் புகழும் பெற்ற பெரியோர் பலரும் அதிகாலையில் எழுந்து கல்வி கற்றவரே யாவர். ஆகையால், நீங்கள் அனைவரும் அதிகாலையில் விழித்தெழும் பழக்கத்தைக் கடைப்பிடியுங்கள்.

கவனிப்பு: சூரியன் + உதயம் - சூரியோதயம்.

வினா: 1. அவ்வைப்பிராட்டியார் செய்துள்ள நூல்களில் இரண்டின் பெயரை எழுது.

2. திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை—இவைகளைப் பாடியவர் யாவர்?



2. செல்வ மைந்தன்

புதியபதங்கள் : தவிர்த்து, தயங்குதல், முற்றம், ஊர்ந்து, இசைதல்.

சிகாமணிக்கு ஆறு வயதுதான் இருக்கும். அவன் பெற்றோர் மிகவும் செல்வந்தர். அன்றியும் அவனைத் தவிர்த்து அவர்களுக்கு வேறு குழந்தைகள் இல்லை. ஆதலால், அச்சிறுவன் கேட்கும் பொருள்களை யெல்லாம் அவர்கள் சிறிதும் தயங்காது வாங்கித் தருவார்கள்.

சிகாமணியின் பெற்றோர் தம் மைந்தனுக்கு விதம் விதமாக ஆடைகள் அணிந்து அழகு பார்ப்பர். அச்சிறுவன் சில சமயம் காதில் குண்டலமும், கைகளில் காப்பும் கொலுசும், கழுத்தில் முத்து மாலையும் கல்லிழைத்த பொற் பதக்கமும், அரையில் பீதாம்பரமுமாக மிக்க அலங்காரத்துடன் வாயில் முற்றத்தில் வந்து உலாவுவான்; மற்றொரு சமயம் ஓர் ஆங்கிலச் சிறுவனைப்போல் உடை அணிந்து, முச்சக்கர வண்டியில் ஊர்ந்து செல்வான்.

அந்தச் செல்வ மைந்தனுன சிகாமணியின் வீட்டுக்கு அருகேயுள்ள குடிசையொன்றில் முனிசாமி என்னும் ஓர் ஏழைச் சிறுவன் இருந்தான். முனிசாமிக்கும் வயது ஆறுக்குமேல் இராது. அச்சிறுவனுக்கு ஒரு தங்கையும் உண்டு. அச்சிறுமிக்கு வயது ஐந்து இருக்கலாம். முனிசாமி தன் தங்கையுடன் சிகாமணியின் வீட்டுக்கு எதிரே நின்று, அவன் உடுத்திருக்கும் உடைகளின் அழகையும், அவன் வைத்து விளையாடும் விநோதப் பொருள்களையும் இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பான். அவன் தங்கையோ, ஏங்கி நின்று, பலவாறு எண்ணி வருந்துவாள்.

ஒரு நாள் சிகாமணியின் தந்தையார் அவனுக்கு அழகிய பதுமை ஒன்றினை வாங்கி வந்தார். அந்தப் பதுமை ஓர் உண்மையான குழந்தையைப் போலவே இருந்தது. சிகாமணி அந்தப் பதுமையைக் கண்டதும் மிகவும் ஆனந்தமடைந்தான். அவன் அந்தப் பதுமையை உட்கார வைத்து அழகு பார்ப்பான்; கிருஷ்ணனைப் போலத் தவழ்ந்துவரச் செய்வான்; கைகளில் ஏந்திக் களிப்பான்; தோளில் தாங்கிக்கொண்டு உலாவுவான்.

முனிசாமியும், அவன் தங்கையும் பழக்கம் போலவே சிகாமணியின் வீட்டு வாயிலில் வந்து நின்றனர்; சிகாமணி வைத்திருந்த பதுமையைக் கண்டதும் அவ்விருவரும் பெரிதும் ஆச்சரிய முற்றனர். முனிசாமியின் தங்கைக்கு அப்பதுமையின் மேல் மிகவும் ஆசையுண்டாயிற்று. தன் கையினுல் அதனைச் சிறிது தொட்டுப் பார்த்தேனும் மகிழ அச்சிறுமி ஆவல் கொண்டனள்.

" அண்ணு-அண்ணு, அந்தப் பொம்மையை எனக்கு வாங்கித் தா. நான் அதைச் சிறிது நேரம் வைத்திருந்து

பிறகு தந்து விடுகின்றேன்,'' என்று அச்சிறுமி முனி சாமியினிடம் மிகவும் ஆவலோடு தெரிவித்தாள்.

முனிசாமி, "தங்கையே, அது நமக்கு வேண்டா. அவர்கள் பணக்காரர்கள். நாம் கேட்டால் கொடுப்பார் களா ?'' என்ருன்.

"அண்ணு, நான் அதை என்ன செய்யப்போகின் றேன் ! சிறிது நேரம் வைத்திருந்து கொடுத்துவிடப் போகி றேன். எதற்கும் நீ கேட்டுப் பார். எனக்கு அந்தப் பொம்மையின்மேல் மிகவும் ஆசையாய் இருக்கிறது,'' என்று அச்சிறுமி தன் அண்ணனைப் பெரிதும் வேண்டிக் கொண்டாள்.

தன் தங்கையின் ஆசையினைத் தீர்க்கும் பொருட்டு முனிசாமி மெதுவாகச் சிகாமணியின் அருகே சென்று, "அப்பா, இந்தப் பொம்மையை என் தங்கை பார்க்க வேண்டுமாம்; தந்தால், பார்த்துவிட்டு உடனே கொடுத்து விடுகிருேம். தருகிருயா ?'' என்று மிகவும் பணிவோடு கேட்டான்.

தான் வைத்து விளையாடும் பதுமையைக் கேட்டதும் சிகாமணிக்கு மிகுதியும் கோபம் வந்து விட்டது. "இந்த ஏழைச் சிறுவனுக்கு இவ்வளவு கர்வமா ?'' என்று அவன் எண்ணி, முனிசாமியின் முதுகில் பளீரென ஓர் அறை கொடுத்தான். முனிசாமிக்குக் கோபம் பெரிதும் உண்டா யிற்று. ஆனுலும், அதை அவன் அடக்கிக் கொண்டு, "அப்பா, நான் உன்னை என்ன செய்தேன் ? என்னை ஏன் இவ்வாறு அடித்தாய்? கொடுக்க முடியாது என்று சொன்னல் நான் போய்விட மாட்டேனு ?'' என்ருன். அப்போது சிகாமணி முன்னிலும் கோபத்துடன் அவனை

உதைத்தும் முதுகில் குத்தியும் அவ்விடத்தை விட்டு அப் புறப்படுத்த முயன்றான்.

அதைக் கண்ட முனிசாமியின் தங்கை, 'ஓ' வென்று கதறி அழ ஆரம்பித்தாள். வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த சிகாமணியின் தாய் இவர்கள் கூச்சலைக் கேட்டு அங்கே ஓடிவந்து பார்த்து, "என் கண்ணே, இந்தக் குழந்தைகளை நாம் துன்புறுத்தலாமா? இந்தப் பது மையை நீ சிறிது நேரம் இவர்களிடம் கொடுத்து வைத்தால் தான் என்ன? இந்தக் குழந்தை இதைப் பார்த்தபின் கொடுத்துவிடாதா?" என்று அன்போடு கூறினாள்.

உடனே சிகாமணி கோபமும் ஆத்திரமும் கொண்ட வனாய்த் தன் அன்னையையும் அடிப்பதற்கு ஆரம்பித்தான்; தனக்கு அருகே இருந்த பொருள்களை எடுத்து நாற்புறமும் வீசி எறிந்தான்; கால்களை உதைத்துக்கொண்டு அழுதான். அப்போது அவன் அன்னை சிறிது நேரம் பேசாமலிருந் தாள். பிறகு அவள், "அப்பா, நற்குணமே உருவான உன் தந்தையின் பெயரை நீ முன்னுக்குக் கொண்டுவர வேண்டாவா? ஏழைகளைக் கண்டால் இரங்கி வருந்தும் குணமுள்ள அவருடைய பிள்ளையாகிய நீ இவ்விதம் இருக்க லாமா? நீ இந்தச் சிறு வயதிலேயே இவ்வாறு இருந்தால் பிறகு பெரியவனானால் எவ்வாறு நற்பெயர் எடுப்பாய்? ஐயோ! நான் என்ன பாவம் செய்தேனோ! என் செல்வக் குழந்தைக்கு ஏழைகளிடத்தில் இரக்கமுண்டாகவில்லையே! கடவுளே, என் செல்வத்துக்கு நல்ல குணத்தைக் கொடுத் தருள்," என்று கூறிக் கடவுளை நோக்கிக் கண்ணீர் வடித்து நின்றாள்.

தன் அன்னையின் செய்கை சிகாமணிக்கு முற்றிலும் புதுமையாகத் தோன்றியது. அவள் அழுவதைக் கண்டு

அவன் மனம் இளகிவிட்டது. ஆதலால், அச்சிறுவன் அந்தப் பதுமையை எடுத்து முனிசாமியினிடம் கொடுத்து, "இதை உன் தங்கையே வைத்துக்கொள்ளட்டும். இதனை எனக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுவதில்லை," என்று அன்போடு கூறினன்.

மிகவும் விலையுள்ள அந்தப் பதுமையை அந்த ஏழைச் சிறுவர்களுக்கே கொடுத்துவிட வேண்டுமென்று சிகாமணியின் அன்னை சிறிதும் எண்ணவில்லை. எனினும், தன் மைந்தனுக்கு உண்டான நல்ல குணத்தைத் தடுக்கக்கூடா தென்று அவளும் அதற்கு இசைந்தாள்.

அப்பதுமையைப் பெற்ற முனிசாமி, இன்னது செய்வ தென்று அறியாமல், சிகாமணியின் அன்னையை நோக்கினன். அப்போது அந்த அன்புள்ள அன்னை, "குழந்தைகளே, என் செல்வ மைந்தன் தருவதை நீங்கள் பெற்று மகிழுங்கள்," என்று கூறிச் சிகாமணி அருகே சென்று, அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டாள்.

கவனிப்பு: பீதம் + அம்பரம் - பீதாம்பரம்.

வேறுபாடு: அரை - அறை; இரங்கி - இறங்கி.

வினா:
1. செல்வ மைந்தன் யார்? சிகாமணியா—முனிசாமியா? காரணம் கூறு.
2. சிகாமணி வைத்து விளையாடும் விநோதப் பொருள்களைக் கண்டபோதெல்லாம் முனிசாமியின் தங்கை ஏங்கி நின்று பலவாறு எண்ணி வருந்துவாள். அவள் என்ன என்ன எண்ணி வருந்தியிருப்பாள்?
3. முனிசாமியின் தந்தை செல்வந்தராக இருந்திருந்தால் முனிசாமியும் அவன் தங்கையும் என்னென்ன ஆபரணங்கள் அணிந்திருப்பார்கள்?
4. இந்தப் பாடத்தின் தலைப்பில் உள்ள படம் இக்கதையில் எந்தச் சந்தர்ப்பத்தை விளக்குகின்றது?



3. தேகப் பயிற்சி

புதிய பதங்கள் : செருக்கு, மேதினி, மல்லர், உரம்.

அருந்தொடர் : செல்வநடை, கூனற்குரங்கு, பொற்குணம், சற்குணம், அல்லும் பகலும்.

வீமனைப் போல்வலு வேண்டும்—நல்ல
வீரமும் தீரமும் வேண்டும்—ரகு
ராமனைப் போல் குணம் வேண்டும்—அந்த
ராவணன் ஆண்மையும் வேண்டும். 1

சேவல் செருக்கினைக் காணீர்—அதன்
செல்வ நடைகண்டு நாணீர்—என்றும்
ஆவ லுடனுழைப் பீரேல்—மிக்க
ஆரோக் கியம்பெறு வீரே. 2

கூனற் குரங்குகள் போலே—உடல்
குன்றி யிருந்திடல் ஆமோ—அவ
மான மிதென்ன விடுப்பீர்—நிதம்
மார்பு நிமிர்ந்து நடப்பீர். 3

கட்டையும் வெட்டுதல் வேண்டும்—அதைக்
கட்டிச் சுமந்திடல் வேண்டும்—சிறு
பெட்டி எடுத்திடக் கெஞ்சும்—ஒரு
பேதையைக் கண்டுல கஞ்சும். 4

பொய்ம்மை புனைந்துரை யாடேர்—இகழ்
பூனைக் குணந்தனைத் தேடேர்—உயர்
மெய்ம்மை யினுக்குண்டு மேன்மை—வேறு
மேதினி யில்இலை ஆண்மை. 5

மல்லர் உடலுரம் வேண்டும்—உயர்
மார்பும் அகன்றிடல் வேண்டும்—மிக
நல்லவர் என்றுல கேத்த—நிதம்
நன்மைகள் நாடிடல் வேண்டும். 6

சற்குணங் கள்பல பெற்றூர்—வித்யா
சாகரர் என்னும்அக் கற்றூர்—அவர்
பொற்குணம் யாவும் பெறுவோம்—புவி
போற்றும் புகழும் உறுவோம். 7

தோள்கள் பருத்திடல் வேண்டும்—உயர்
தூய்மைக் குணங்களும் வேண்டும்—பல
நாள்கள் கழித்திடல் நன்றே—நந்தம்
நாடு செழித்திடல் என்றே ? 8

அல்லும் பகலும் உழைத்தே—பச்சை
அப்பனைப் போலத் தழைத்தே—பல
நல்லறம் நாடிப் புரிவோம்—இந்த
நன்மதி யாவும் மறவோம். 9

கவனிப்பு: பொய்ம்மை × மெய்ம்மை. சற்குணம் × துர்க்குணம்.
நன்மை + அறம் - நல்லறம்.

வினு : 1. இராமபிரானுக்கு உள்ள நற்குணங்கள் யாவை?
2. பூனைக் குணங்கள் யாவை?
3. ஏன் மார்பு நிமிர்ந்து நடக்க வேண்டும்?
4. வித்தியாசாகரர், பச்சையப்பர் இவர்களைக் குறித்து உனக்கு என்ன தெரியும்?
5. படத்தில் காணும் சிறுவன் என்ன செய்கிறுன்? ஏன்?



4. நற்குணமுள்ள சிறுவன்

(படம் பார்த்துக் கதை சொல்லுதலும் எழுதுதலும்)

குறிப்பு : 1. மகன் - தந்தை - காசு தருதல்.

2. சிறுவன் - நண்பன் - கடைக்குச் செல்லுதல்.

3. மாம்பழம் - மூன்று - வாங்குதல்.

4. ஏழைச் சிறுவன் - பசி - ஏங்கி நிற்றல்.

5. சிறுவன் நற்குணம்.

6. நீதி.

கவனிப்பு :

இரக்கம், தயங்குதல், இசைதல் முதலிய பதங்களும், அருமைத் தந்தை, ஆருயிர் நண்பன் முதலிய சொற்றொடர்களும் இக் கதையில் அமைதல் வேண்டும்.





5. நமது நாடு

அருந்தொடர் : பாலாவி, போர்முனை, கண்ணுங்கருத்துமாய்.

பிள்ளைகளே, படத்தைப் பாருங்கள். இதன் பெயர் இந்தியா. இதன் தென்பாகமாகிய தமிழ் நாட்டிலேதான் நாம் வசிக்கிறோம். நம் முன்னோர்களும் இந்த நாட்டிலே தான் பிறந்து வளர்ந்து பேரெடுத்தார்கள். இப்போது தமிழர், தெலுங்கர், மலையாளர், கன்னடர் எனப் பல வகுப்பினராயுள்ள அனைவரும் நெடுங்காலத்துக்கு முன்னே ஒரு வகுப்பினராய் இருந்தே வாழ்ந்து வந்தனர். இவர் அனைவரும் ஒரு பாஷையே பேசிவந்தனர். அக்காலத்தே நமது தமிழ்நாடு சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிந்திருந்தது. அவற்றினைச் சேர சோழ பாண்டியர் என்ற மூன்று பெரிய அரசர் ஆட்சி புரிந்து வந்தனர். இம்மூவரையும் 'தமிழ் நாட்டு

மூவேந்தர்கள்' என ஒன்று சேர்த்துரைத்தே பலரும் பாராட்டிப் புகழ்ந்து வந்தனர். இந்த மூவேந்தர்களும் வீர தீரர்களாகவும், கல்வி கேள்விகளில் மிகுந்தவர்களாகவும், சிறந்த குணநலமுடையவர்களாகவும் விளங்கி வந்தார்கள்.

இப்போதுள்ள அரசர்களுக்கு வெவ்வேறு அடையாளக் கொடிகள் இருத்தல்போன்று இம் மூவேந்தர்கட்கும் வெவ்வேறு அடையாளக் கொடிகள் இருந்தன. சேரநாட்டரசன் விற்கொடி உடையவன்; சோழமன்னன் புலிக்கொடி உடையவன்; பாண்டியன் மீன்கொடி உடையவன். இவர்கள் அணிந்த மாலைகளிலும் வேறுபாடு உண்டு. சேரன் பனைமாலையைத் தன் அடையாள மாலையாகக் கொண்டிருந்தான்; சோழனுக்கு ஆத்தி அடையாளமாலை; பாண்டியனுக்கு வேப்ப மாலை உரியது.

இம் மூவேந்தர் ஆண்டுவந்த காலத்தே நம் தமிழ்நாடு கல்வி, கைத்தொழில், வாணிபம் முதலிய பலவற்றிலும் சிறந்திருந்தது. அக்காலத்திலிருந்த மக்கள் நாகரிகத்திலும், கல்வி அறிவு ஒழுக்கங்களிலும் சிறந்து, தேகக்கட்டும் மனவன்மையும் உடையவர்களாய், அன்புற்று இன்புற்று வாழ்ந்து வந்தார்கள். நம் நாட்டின் சிற்பத் தொழிலின் சிறப்பினை விளக்குவதற்கு இப்போதுள்ள பழங் கோயில்களே கருவிகளாம். நெசவுத் தொழிலால் நம் முன்னோர்கள் பாலாவிபோன்ற மெல்லிய ஆடைகள் நெய்து பேரெடுத்தார்கள். தேக்கு, சந்தனம், தந்தம், தோகை, மிளகு, ஏலம் முதலிய பல பொருள்களை மரக்கலங்களில் ஏற்றிக்கொண்டு நம் நாட்டினர் கடல் மார்க்கமாகவும் வாணிபம் நடாத்திவந்தனர். நம் நாட்டு மக்களின் வீரத்தைக் குறிக்கும் பாடல்கள் பல நம் தமிழ் நூல்களில் உண்டு. போர் முனையில் நின்று ஒரு வீரன் மிக்க ஆவேசத்துடன்

சண்டை செய்து கொண்டிருக்கும்போது மதம் பிடித்த யானையொன்று அவ்வீரனைக் கொல்லுதற்கு எதிர் நோக்கி வந்ததாம். உடனே அவ்வீரன் தன் கையிலிருந்த வேலா யுதத்தை வந்த யானையின் மீது எறிந்து, மேலும் போர் புரிதற்குத் தன் கையில் வேறு படையில்லையே என வருந்தி நின்ற போது, சிறிது நேரத்திற்குமுன் தன்னை எதிர்த்த



ஒரு பகைவன் தன் மீது ஒரு வேலாயுதத்தை எறிந்தது அவன் நினைவிற்கு வந்ததாம். உடனே அவன் தன் மார் பில் ஆழ்ந்து புதைந்து கிடந்த அவ்வேலாயுதத்தை மிக்க சந்தோஷத்துடன் பிடுங்கிக்கொண்டு, மறுபடியும் சண்டை செய்வதற்கு ஆரம்பித்தானும்.

மாணவர்களே, அவ்வீரன் தைரியத்தைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்! தான் போர்புரியும்போது தன்னைப் பகைவன் வேலால் தாக்கியதையும் பொருட்படுத்தாது அதனை முற்றிலும் மறந்து, அவன் தன் போர்த்தொழிலி

லேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தான். தன் கையில் வேறு படையில்லாதபோது அது நினைவிற்குவர, அப்போதும் அவன் சிறிதும் வருந்தாது, போர் புரிதற்குத் தனக்கு வேறொரு வேலாயுதம் கிடைத்த தன் நல்ல காலத்தை நினைந்து சந்தோஷப் பட்டானும்! இத்தகைய வீரர்கள் பிறந்த தமிழ் நாட்டிலேதான் நாம் பிறந்திருக்கின்றோம்.

நம் முன்னோர்கள் தேகவன்மை பெற்றிருந்ததோடு குணத்திலும் சிறந்திருந்தார்கள் என்பதற்குத் தமிழ் நூல்களில் பல சரித்திரங்கள் இருக்கின்றன. பாரிவள்ளல் என்னும் ஒரு சிற்றரசன் தன்னிடம் வந்த ஏழை எளியோர்கட்கெல்லாம் பொருளை வாரி வாரி வழங்கினன். குமணன் என்னும் வேறோர் அரசன் தன்னிடம் வந்த புலவருக்காகத் தன் உயிரையும் கொடுக்கச் சித்தமாய் இருந்தான். நெடுநாள் உயிர் வாழ்ந்திருத்தற்குக் கிடைத்த கருநெல்லிக் கனியை அதியமான் என்னும் அரசன் அவ்வையாருக்குக் கொடுத்துவிட்டான்.

இத்தகைய பெருமை வாய்ந்த நாட்டிற் பிறந்த நாம் கல்வி, அறிவு, குணங்களிற் சிறந்திருக்க முயல்வதோடு, தேகவன்மையும், தைரியமும் வாய்ந்தவர்கள் ஆகி, நம் நாட்டுக்கு முன் போல மிக்க பெருமையைக் கொண்டுவர வேண்டும் அல்லவா? ஆதலால் மாணவர்களே, நீங்கள் உங்கள் பாடங்களை நன்றாகப் படியுங்கள்; பிறர்க்கு உதவி செய்யுங் குணத்தினைப் பொன்போல் போற்றுங்கள். நாடோறும் தேகப்பயிற்சி செய்து உங்கள் தேகத்தை வலுப்படுத்திக் கொள்ளுங்கள்.

வினா: 1. தமிழ் நாட்டு மூவேந்தர் யாவர்? அவரவர் கொடி, மாலை முதலியவைகளையும் கூறு.

2. நம் நாட்டுப் பழந்தமிழரின் வீரத்தைக் குறிக்க ஒரு சம்பவம் கூறு.

6. இலக்கணப் பாடல் I

திணை, பால், எண், இடம் :

திணைபால் எண்இடம் தெரிந்திடுவோம்
தினந்தினம் நவின்றிடப் பரிந்திடுவோம்.

திணையில் உண்டோர் இருவகையே
இணையில் உயர்திணை அஃறிணையே.

மக்கள் தேவர் உயர்திணையாம்
மற்றவை யாவும் அஃறிணையாம்.

ஆண்பெண் பலரோ டொன்றுபல
ஐவகை யாம்பால் நன்றுசொல.

இருவகை எண்என உரைத்தனரே
ஒருமையும் பன்மையும் வகுத்தனரே.

தன்மை முன்னிலை படர்க்கையுமே
மன்னிய மூவிடம் என்குவமே.

நான்நாம் நாங்கள் தன்மையவே
நீநீர் நீங்கள் முன்னிலையே.

அவன்அவள் அவர்அது அவைஎனவே
அமைவன படர்க்கையில் அடங்கிடுமே.

இருதிணை ஐம்பால் மூவிடமே
இனிநமக் கின்பம் ஈந்திடுமே.

7. சிறியோரெல்லாம் சிறியருமல்லர்

புதிய பதங்கள் : பிணக்கு, ஆரவாரம்.

அருந்தொடர் : சிற்றூர், வாயார.

ஒரு நாள் நான்கு நண்பர்கள் ஒரு காட்டின் வழியே சென்றுகொண் டிருந்தார்கள். வழியில் அவர்களுக்கு ஒரு பணப்பை கிடைத்தது. அதில் உள்ள பொருளை அந்த நான்குபேரும் பங்கிட்டுக் கொள்ள ஆரம்பித்தனர். ஆனல் பங்கிடும்போது அவர்களுக்குள் பிணக்கு ஏற் பட்டது. அப்பிணக்கு நீங்குமளவும் அந்தப் பணப்பையை யாரிடமேனும் கொடுத்து வைக்கவேண்டு மென்று அவர் கள் தீர்மானித்தார்கள்.

அந்தக் காட்டிற்கு அருகே ஓர் சிற்றூர் உண்டு. அங்கே ஒரு கிழவி வசித்திருந்தாள். நண்பர் நால்வரும் அந்தக் கிழவியினிடம் பணப்பையைக் கொடுத்து வைத்தனர். அன்று பகல் அவர்கள் அக்கிழவியின்

வீட்டிலேயே உணவுகொண்டனர். பிறகு அவர்கள் கிழவியை நோக்கிப் "பாட்டி, நாங்கள் நால்வரும் வந்து கேட்டால்தான் நீ இந்தப் பணப்பையை எங்களிடம் தர வேண்டும்," என்று சொல்லி வெளியே உலாவிவரச் சென்றார்கள்.

சிறிது தூரம் சென்றதும் அவர்கள் ஒரு வெற்றிலைப் பாக்குக் கடையை அடைந்தார்கள். வெற்றிலைப்பாக்கு வாங்க அவர்களிடம் பணம் இல்லை. ஆதலால் அவர்களுள் ஒருவன் "நான் போய்க் கிழவியினிடமிருந்து ஓர் அணா வாங்கி வருகின்றேன்," என்று கூறினான். அதற்கு மற்றவர்களும் மனமிசைந்து, அவனைக் கிழவியினிடம் அனுப்பினார்கள்.

பணம் வாங்கிவரச் சென்றவன் மிகவும் அயோக்கியன். அவன் கிழவியினிடம் சென்று "பாட்டி, நாங்கள் கொடுத்த பணப்பையைக் கொடு" என்று கேட்டான். அதற்கு அவள் "நீங்கள் நால்வரும் வந்து கேட்டால் தான் நான் கொடுப்பேன்," என்றாள். உடனே அவன் அங்கிருந்தபடியே, தொலைவில் இருந்த தன் நண்பர்களை நோக்கிப் "பாட்டி கொடுக்க மாட்டேன் என்கிறாள்" என்று உரத்துக் கூவினான். அவர்கள் மூவரும் அங்கேயே நின்று கொண்டு "பாட்டீ, கொடு - கொடு" என்று இரைந்துரைத்தார்கள். அவர்கள் பணப் பையைத்தான் கொடுக்கச் சொல்லுகிறார்கள் என்று எண்ணிக் கிழவி அப்பையினை அவனிடம் கொடுத்துவிட்டாள். அந்த அயோக்கியன் பணப் பையை வாங்கிக்கொண்டு வேறு வழியாக ஓடிப் போய் விட்டான்.

நெடு நேரம் ஆகியும் பணம் வாங்கிவரச் சென்றவன் வராததால் மற்ற மூவரும் அவனைத் தேடிக்கொண்டு கிழவி

யின் வீட்டை அடைந்தனர். அவன் அங்கேயும் இல்லாத தால் தம் நண்பனைக் குறித்து அவர்கள் அக்கிழவியைக் கேட்டார்கள். அதற்கு அவள் "நான் அந்தப் பணப் பையைக் கொடுத்து அவரை அப்போதே அனுப்பி விட் டேனே" என்றாள். இதைக் கேட்ட மூவரும் திடுக்கிட்டு நின்றார்கள். பிறகு அவர்கள் "எங்கள் உத்தரவு இல்லா மல் நீ அப் பணப் பையை ஏன் அவனிடம் கொடுத்தாய்?" என்று கோபத்தோடு கிழவியைக் கேட்டார்கள். அப் போது அக்கிழவி பயந்து "ஐயோ! நீங்கள் 'கொடு-



கொடு' என்று சொன்னீர்களே!" என்றாள். அதற்கு அவர் கள் "பணப்பையைக் கொடு என்று நாங்கள் சொல்லவே இல்லை. கொடுத்தது உன் குற்றமே. ஆதலால் எங்களுடைய பணத்தை இப்பொழுதே கொண்டு வந்து வை," என்று அக்கிழவியை வற்புறுத்தினர்கள்.

அம்மூவரது ஆரவாரப் பேச்சினையும், கிழவியின் துயர மொழியினையும் கேட்டு அவ்வழியே சென்ற மக்கள் பலரும்

கூட்டமாகச் சூழ்ந்து கொண்டனர். அவர்களுள் சிலர் அந்த வழக்கை விசாரித்தனர். முடிவில் அவர்கள் அக் கிழவிதான் அந்த மூவருக்கும் சேரவேண்டிய பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அருகே இருந்த மற்றவர்களும் "ஆம்-ஆம்; அது தான் நியாயம்" என்று சொல்லித் தலையை அசைத்தார்கள். அப்போது அந்தக் கிழவி "என்னிடத்தில் ஒரு காசும் இல்லையே; ஐயோ! நான் எப்படிக் கொடுப்பேன்" என்று சொல்லி அழுதாள்.

கிழவியின் துயரமொழிகள் அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு சிறுவன் மனதைப்பெரிதும் வருத்தின. அவனும் அந்த வழக்கை ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் கேட்டுக் கொண்டிருந்தான். அச்சிறுவனுக்கு அப்போது ஒரு யுக்தி தோன்றியது. அவன் "பாட்டீ, நீ ஏன் வருந்துகின்றாய்? அவர்கள் நால்வரும் வந்து கேட்டால்தானே நீ பணம் கொடுக்க வேண்டும்? இப்போது இந்த மூவர் மட்டும் கேட்டால் நீ எவ்வாறு பணம் கொடுக்கலாம்!" என்றான்.

சிறுவன் இவ்வாறு சொல்லியதும் அருகே இருந்த ஒரு கிழவர் "ஆமாம்; இதுதான் நியாயம். நீங்கள் நான்கு பேருமாக வந்து கேளுங்கள். கிழவி பணம் கொடுப்பாள்" என்றார். மற்றவர்களும் அதற்குச் சம்மதித்து அச்சிறுவன் அறிவைப் புகழ்ந்தனர். பணம் கேட்கவந்த மூவரும் அதற்குப் பதில் அளிக்கத் தெரியாமல் விழித்து அவ்விடத்தை விட்டு மிகவும் வருத்தத்தோடு அகன்றனர். சிறுவனுடைய அறிவின் திறமையைக் கண்டு அக்கிழவி ஆச்சரியமடைந்து அவனை வாயார வாழ்த்தினாள்.

வினா: 1. 'வாயார வாழ்த்தினாள்' யார்? யாரை? ஏன்?
2. வயிறார, மனமார - இவைகளை விளக்கு.

8. நாலும் இரண்டும்

நாலடியார் :

1. இல்ல புகழ்தலின் வைதலே நன்று.
2. கற்றறிந்தார் கேண்மை நுனியிற் கரும்பு தின்றற்று.
3. கைத்துண்டாம் போதே கரவாது அறஞ்செய்ம்மின்.
4. செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல்.
5. செல்வம் சகடக்கால் போல வரும்.
6. தான்கெடினும் தக்கார் கேடு எண்ணற்க.
7. தெளிவிலார் நட்பிற் பகை நன்று.
8. பிழை நூறும் சான்றோர் பொறுப்பர்.
9. பெரியவர் கேண்மை பிறைபோல் வளரும்.
10. பேதையோடு யாதும் உரையற்க.

திருக்குறள் :

1. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை.
2. எல்லார்க்கும் நன்றும் பணிதல்.
3. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.
4. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்.
5. செயற்கரிய செய்வார் பெரியர்.
6. திருவேறு, தெள்ளியராதலும் வேறு.
7. பொய்யாமை அன்ன புகழில்லை.
8. மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு
9. முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்.
10. யாகாவார் ஆயினும் நாகாக்க.



9. விடுமுறைக்கால வேலை

புதிய பதங்கள் : இறுதி, போதிய, செம்மை.

அருந்தொடர் : செப்பனிடுதல், கையாளுதல், புத்தம் புதியன.

பழனிசாமி என்னும் மாணவனைக் குறித்து நீங்கள் நான்காம் வகுப்பில் வாசித்திருக்கலாம். அவன் 'தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தல்' என்னும் முறையை ஏற்படுத்தித் தன் வகுப்பிலிருந்த எல்லா மாணவர்களையும் மேல் வகுப்பு மாறும்படி செய்தான் அல்லவா? அவன் அவ்வளவோடு நில்லாமல் தன் தோழர்களுக்கு மேன் மேலும் பல உதவிகள் புரிய எண்ணினான். நான்காம் வகுப்பின் இறுதிப் பரீட்சை முடிந்ததும் ஒரு நாள் பழனிசாமி தன் தோழர்களில் சிலரை அழைத்துக் கொண்டு ஒரு மரத்தடியில் அமர்ந்து பலப்பல ஆலோசிக்கலாயினான்.

"நண்பர்களே, நாம் இப்போது நான்காம் வகுப்பி லிருந்து ஐந்தாம் வகுப்பிற்கு மாறப் போகின்றோம். அவ் வாறு மாறிய பின்னர் நீங்கள் உங்கள் பழைய புத்தகங் களை என்ன செய்யப் போகின்றீர்கள்?" என்று பழனி சாமி அங்கு அமர்ந்திருந்த மாணவர்களை வினவினான்.

அப்போது **கருணாகரன்** என்பவன் பழனிசாமியைப் பார்த்து, "நண்பனே, நான் இதுவரையில் அதைக் குறித் துச் சிறிதும் யோசிக்கவே யில்லை. நீ என்ன சொல்லு கின்றாயோ அவ்விதமே செய்வதற்கு நாங்கள் சித்தமாக இருக்கின்றோம். படித்து முடிந்த பழைய புத்தகங்களை நாங்கள் என்ன செய்யப் போகின்றோம்? அவை வீட்டில் எங்கேனும் ஒரு மூலையில் கிடக்கும். நான் சென்ற ஆண்டு படித்த புத்தகங்களில் இப்போது ஒன்றுகூட என்னிடத் தில் இல்லை. நானும் அவைகளைக் குறித்துச் சிறிதும் கவலை கொள்ளுவதில்லை" என்றான்.

உடனே **கமலநாதன்** என்பவன், "அப்பா பழனி சாமி, பல முறை புரட்டிப் புரட்டிப் படித்ததனால் என் புத்தகங்கள் யாவும் பெரிதும் அழுக்கடைந்தும் கிழிந்தும் சீர்குலைந்துள்ளன. நான் மேல் வகுப்பு மாறியதும் அப் புத்தகங்களைக் குப்பையில் எறியவே விரும்புவேன். இதனி னும் வேறு வழி எனக்குத் தோன்றவில்லை," என்றான்.

இதைக் கேட்ட பழனிசாமி, "கமலநாதா, நீ உன் புத்தகங்களை ஏன் அவ்வளவு அஜாக்கிரதையாகக் கையாண்டாய்? நானும் உன்னோடுதான் புத்தகம் வாங் கினேன். நானும் உன்னைப் போல நாள்தோறும் படிக்க வில்லையா? என் புத்தகங்களைப் பார்; அவை அழுக்கடை யாமலும் கிழியாமலும் இருக்கின்றன. சென்ற ஆண்டு படித்த புத்தகங்களைக் கருணாகரன் எங்கோ தொலைத்து

விட்டதாகக் கூறுகின்றான். நான் அவ்விதம் போக்கடிக்காமல் அவைகளை ஓர் ஏழைச் சிறுவனுக்கு உதவினேன். என்னைப் போல நீங்களும் உங்கள் புத்தகங்களைக் கையாளுவதில் சிறிது கவலை எடுத்துக்கொண்டால் நாம் அவைகளை எத்தனை ஏழைச் சிறுவர்களுக்குக் கொடுத்துதவலாம்!'' என்று இரக்கத்துடன் மொழிந்தான்.

அப்போது கருணாகரன், ''அப்பா பழனிசாமி, நீ கூறுவது முற்றிலும் உண்மையே. உன் புத்தகங்கள் யாவும் புத்தம் புதியனவாய் இருப்பதைக் கண்டு நான் பெரிதும் நாணமடைகின்றேன். ஆனால் அவ்வளவு கண்ணும் கருத்துமாகப் புத்தகங்களைக் கையாள என்னால் முடியவில்லை. இனிமேலாவது நான் அவ்வாறு செய்ய முயலுகின்றேன்,'' என்று கூறினான்.

உடனே கமலநாதன் பழனிசாமியை நோக்கி, ''அருமை நண்பா, நானும் அவ்விதமே புரிய முயற்சி செய்கின்றேன். எனினும், மாணவர்கள் பெரும்பாலும் புதிய புத்தகங்களையே வாங்கிக் கொள்ள விரும்புவார்கள். நாம் கொடுக்கும் பழைய புத்தகங்களை அவர்கள் பெற்றுக்கொள்வார்களா? மிக்க ஏழையாக உள்ள யாரோ ஒருவர் இருவர் அவைகளைப் பெற்று மகிழலாம். மற்றவர்கள் அவ்விதம் பெற விரும்புவார்களா?'' என்றான்.

அப்போது பழனிசாமி, ''நண்பர்களே, மாணவர்கள் புதிய புத்தகங்களையே விரும்புவார்கள் என்பது உண்மையே. ஆனால், நம் நாட்டில் ஏழைகளே மிகுதியாய் இருக்கின்றார்கள். எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் புத்தகம் வாங்கித் தருதற்குப் போதிய பொருளின்மையால் வருந்துவதை நான் என் கண்ணாரக் கண்டிருக்கின்றேன். அன்றியும், பாடசாலைக்குச் சென்று

படித்தறியாத ஏழைகள் நம்மூரில் பலர் இருக்கின்றனர். நாம் அவர்கட்கு அப்புத்தகங்களைக் கொடுத்தால் அவர்கள் அவைகளை ஒழிந்த நேரங்களில் வீட்டிலேனும் சிறிது படிக்கலாம் அல்லவா? தோழர்களே, நீங்கள் மேல் வகுப்பு மாறியதும் உங்கள் பழைய புத்தகங்களை யெல்லாம் என்னிடம் தாருங்கள். புத்தகம் செப்பனிடும் வேலையில் எனக்குச் சிறிது பழக்கமுண்டு. நீங்களும் உடனிருந்து எனக்கு உதவிபுரிவீர்களானல் நாம் அப்பழைய புத்தகங்களை யெல்லாம் செம்மை செய்து நம்மூரிலுள்ள ஏழைகட்குக் கொடுக்கலாம். இந்த விடுமுறை நாட்களை நாம் இன்பமாகக் கழிப்பதற்கு இஃது ஒரு சிறந்த வழியாக இருக்கும்,'' என்று கூறினன்.

பழனிசாமியின் பேச்சு அச்சிறுவர்கட்கு அவ்விஷயத்தில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தது. சில நாட்களில் பரீட்சையின் முடிவு தெரிந்தது. அனைவரும் மேல் வகுப்பு மாறினமைக்குப் பெரிதும் சந்தோஷங் கொண்டனர். பிறகு அச்சிறுவர் எல்லோரும் தத்தம் பழைய புத்தகங்களை எடுத்துக்கொண்டு பழனிசாமியின் வீட்டை அடைந்தனர். பழனிசாமி, அச்சிறுவர்களின் உதவியால் அப்புத்தகங்களை யெல்லாம் இரண்டொரு நாட்களில் பழுதுபார்த்துப் புதிய புத்தகங்களைப் போலச் செய்ததோடு அவர்களுக்குப் புத்தகம் செப்பனிடும் முறையையும் கற்றுக் கொடுத்தான்.

மறுநாள் பழனிசாமி தன் நண்பர்களோடு ஏழைகள் வசிக்கும் குடிசைகளுக்குச் சென்று, அங்குள்ள சிறுவர்களுக்குச் சில புத்தகங்களைக் கொடுத்தான். அவர்கள் அப்புத்தகங்களை மிகவும் சந்தோஷத்தோடு வாங்கிக் கொண்டார்களென்றாலும், அவைகளிலுள்ள விஷயங்களைப்

படிக்கத் தெரியாமல் விழித்தார்கள். அப்போது பழனி சாமி, அப்புத்தகங்களில் இருந்த படங்களைக் காட்டி அவை களிலுள்ள விஷயங்களைக் கதைபோலக் கூற ஆரம்பித் தான். பழனிசாமி கற்பிக்கும் முறையையும், அச்சிறுவர் கள் அதனை ஆவலோடு கேட்கும் தன்மையினையும் உணர்ந்த பிற மாணவர்கள் தாங்களும் அவ்வாறே வேறு வேறு குடிசைகளுக்குச் சென்று படங்களின் மூலமாகப் பாடங் கற்பிக்க முயன்றார்கள்.

இரண்டொரு வாரங்களில் பழனிசாமியும் அவன் நண்பர்களும் குடிசையில் வாழும் ஏழைச் சிறுவர்கட்கு அப் புத்தகங்களில் உள்ள பாடங்களை யெல்லாம் கதை போலச் சொல்லிச் சொல்லி அவர்கட்குக் கல்வியில் ஆசையை உண்டாக்கி விட்டார்கள். பிறகு அவர்கள் அந்த ஏழைச் சிறுவர்கட்கு உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் யெழுத்து முதலியவைகளை முறையே கற்பிக்க ஆரம்பித்தார்கள். சில நாட்களில் அச்சிறுவர்கள் தாங் களே எதையும் எழுத்துக் கூட்டி வாசிக்கவும், எழுதுகோல் கொண்டு பலகையில் எழுதவும் தொடங்கி விட்டார்கள். நாளடைவில் அவர்கள் கணக்குப் போடவும், செய்யுட் களைப் பொருள் தெரிந்து படிக்கவும் துவங்கி விட்டார்கள். ஏழைச் சிறுவர்கள் கல்வி பெற்ற வகையை உணர்ந்த அவ் வூரார் அனைவரும் பழனிசாமியையும் அவன் நண்பர்களை யும் மிகுதியும் புகழ்ந்து பேசிப் பாராட்டினார்கள்.

வினா : 1. நீ உன் பழைய புத்தகங்களை என்ன செய்தாய்?
2. உயிரெழுத்து மெய்யெழுத்துக்களுக்கு ஒவ்வோர் உதா ரணம் கொடு.

10. நாட் குறிப்புப் புத்தகம்

புதிய பதங்கள் : மெய்ப்பித்தல், ஆதாரம், விழைதல்.

அருந்தொடர் : நட்புரிமை, அன்றுடம்.

செல்வக் குழந்தைகளே, நீங்கள் நான்காம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பிற்கு எந்த மாதத்தில் எந்தத் தேதியில் மாறினீர்கள்? உங்கள் நண்பர்களுள் யார் யார் எவ்வெப்போது எவ்வெவ்வாறு உங்களிடம் நட்புரிமை கொண்டனர்? சென்ற ஆண்டில் உங்களுக்கு மிகவும் இன்பமான நாள் எது? ஏன்? இவைபோன்ற வினக்களுக்கு நினைத்துப் பார்த்து விடை சொல்ல உங்களால் இயலுமா? இரண்டொரு வினக்களுக்கு இப்போது நீங்கள் விடையளிக்க முயன்றாலும் மேலும் சில ஆண்டு சென்றால் இவைகளை முற்றிலும் மறந்து விடுவீர்கள். ஆதலால், அன்றுடம் நேரும் முக்கியமான விஷயங்களைச் சிலர் ஒரு புத்தகத்தில் ஒழுங்குபெறக் குறித்து வைத்து வருகின்றனர். நீங்களும் அவ்வாறே ஒரு குறிப்புப் புத்தகத்தில், அவ்வப்போது நிகழும் அரிய சம்பவங்களைக் குறித்து வைப்பீர்களானால், நீங்கள் பெரியவர்களாகும்போது உங்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியை அளிக்கும். அப்போது அவை உங்களுக்கு ஓர் இனிய கதைபோல மிகுதியும் உற்சாகத்தைத் தருவதோடு பழைய சம்பவங்களைச் சிறிது நினைத்துப் பார்த்தற்கும் பெரிதும் துணை புரியும்.



சோமகாந்தன் என்னும் சிறுவன் ஒவ்வொரு நாளும் தன் குறிப்புப் புத்தகத்தில் அன்றாட நிகழ்ச்சிகளுள் அவசியமான இரண்டொன்றினைக் குறித்து வைத்த பின்னரே படுக்கைக்குச் செல்லுதல் வழக்கம். விடுமுறை நாட்களில் அவன் அப்புத்தகத்தினை எடுத்து அதில் உள்ள குறிப்புக்களைப் படித்துப் பார்க்க விரும்புவான். சென்ற ஆண்டு பொங்கல் விழா எந்தக் கிழமையில் நிகழ்ந்தது என்றேனும், சென்ற மாதம் நமது நாட்டில் என்ன விசேஷ சம்பவம் நேர்ந்தது என்றேனும் யாரேனும் ஒருவர் வின வினால் சோமகாந்தன் உடனே தன் குறிப்புப் புத்தகத் தைப் பார்த்து அவர்கட்கு அவ்விஷயத்தை விளக்கமாக உரைப்பான். தன் நண்பர்களுள் யார்மீதேனும் அவனுக்கு வெறுப்பு நேர்ந்தபோது அவன் தன் குறிப்புப் புத்தகத்தைப் புரட்டிப் பார்ப்பான். தன் நண்பர்கள் தனக்கு அவ்வப்போது செய்த உதவிகளை அதில் அவன் குறித்து வைத்திருப்பதால் அப்புத்தகத்தைப் படிக்கும் போது அவன் மனம் சாந்த மடையும்.

சோமகாந்தன் தந்தையார் பண விஷயமாக ஒருவர்மீது நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார். தாம் பணம் கொடுத்ததை மெய்ப்பிப்பதற்கு மேலும் சில ஆதாரம் வேண்டுமென அவர் வருந்திக்கொண்டிருந்தபோது சோம காந்தன் குறிப்புப் புத்தகம் பெரிதும் உதவியாய் இருந்தது. அதனால் அவர் அவ்வழக்கில் வெற்றி யடைந்ததைக் கண்ட பலரும் சோமகாந்தனைப் புகழ்ந்து பேசினர். அன்றுமுதல் அவன் தன் குறிப்புப் புத்தகத்தில், மற்றும் பல விஷயங் களை முன்னினும் விளக்கமாக எழுதத் தலைப்பட்டான்.

நாட்குறிப்புப் புத்தகத்தால் விளையும் நன்மைகள் மிகப் பல. ஐரோப்பியர் நாட்குறிப்பு வரைதலைத் தம் கடமை

களுள் ஒன்ருகக் கருதுகின்றனர். பல தலைமுறைகட்கு முன் எழுதிய தம் முன்னோரது நாட் குறிப்புப் புத்தகங் களையும் சிலர் பொன்னேபோல் போற்றி வருகின்றனர். தேச சரித்திரம் எழுதுவோர்கட்கு அப்புத்தகங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

நம் தந்தையார் தமது இளம் பருவத்தில் எவ்வாறு ஒழுகினர்? வாழ் நாட்களில் அவர் அடைந்த இன்ப துன் பங்களின் வரலாறுகள் யாவை? அவர்தம் அரிய நண்பர் யாவர்? பகைவர் எவர் எவர்? இவை போன்ற பலவும் நாம் அறிய விழைகின்றோம் அல்லவா? அவ்விதமே நாம் எழுதிவைக்கும் குறிப்புக்கள் நமக்குப் பயன் படுவதோடு நம் சந்ததியாருக்கும் பெரிதும் நன்மையை அளிக்கும்.

சோமகாந்தன் எழுதிவைத்துள்ள நாட் குறிப்புக் களுள் சில வருமாறு:

15—1—1934	பீகார் ஒரிசா பூகம்பம்.
24—3—1934	திருமயிலைத் திருவிழாவில் என் தம்பி தெய்வ மணி காணுமற் போய்ப் பிறகு அகப்பட்டான்.
20—4—1934	பாடசாலை விடுமுறை ஆரம்பம். நான் திருக்குற ளில் நித்தம் இரண்டு குறள் மனப் பாடம் செய்யத்துவங்கிய நாள்.
15—5—1934	அம்பத்தூராருக்கு என் தந்தையார் நானூறு ரூபா கடன் தந்தார்.
20—6—1934	நான் நான்காம் வகுப்பு மாறிய நாள்.
25—1—1935	என் தமக்கையார் திருமணம்.
7—2—1935	நண்பன் கமலநாதன் என்மீது காரணமின்றிக் கோபித்துக் கொண்டான். நான் சாந்தமாக இருந்து வீடு திரும்பினேன்.
6—5—1935	ஐந்தாம் ஜார்ஜு மன்னருக்கு வெள்ளி விழா. சென்னையில் விளக்குகளின் விநோதம்.

20— 6—1935	நான் ஐந்தாம் வகுப்பு மாறிய நாள்.
15— 9—1935	மணவாளன் எனக்கு நண்பனான நாள்.
2—10—1935	என் தந்தையாருக்கு உடல் நலமின்மை. அதனால் கவலை. இன்று கமலநாதன் மணவாளன் ஆகிய இருவரும் புரிந்த பலவித உதவிகளை நான் என்றும் மறவேன்.
20— 1—1936	ஐந்தாம் ஜார்ஜு மன்னர் இறந்தார்.
22— 1—1936	எட்டாம் எட்வர்டு பட்டத்துக்கு வந்தார்.
20— 4—1936	மாணவர் மன்றத்தில் நடந்த கட்டுரைப் போட்டியில் நான் முதற் பரிசு பெற்றேன்.
24— 6—1936	நான் ஆறும் வகுப்பு மாறிய நாள்.
15— 9—1936	சென்னை உடற் பயிற்சிக் கழகத்தினர் நடத்திய தேகப்பயிற்சி விழாவில் நான் பாராட்டுப் பத்திரம் பெற்றேன்.
10—12—1936	எட்டாம் எட்வர்டு தம் விவாக விஷயமாக முடி துறந்தார்.
10—12—1936	ஆறும் ஜார்ஜு பட்டத்துக்கு வந்தார்.
18— 2—1937	சென்னைச் சட்டசபைத் தேர்தல்.
21— 2—1937	இராம கிருஷ்ண பரமஅம்சர் நூற்றாண்டு விழா.
23— 2—1937	அதிகாலை 5-5 மணிக்கு என் தமக்கையாருக்குப் பெண் குழந்தை பிறந்தது.
4— 5—1937	நானும் என் பெற்றோரும் நீலகிரி சென்றோம்.
12— 5—1937	ஆறும் ஜார்ஜு மன்னர் முடி சூட்டு விழா.
14— 5—1937	என் தமையனார் பி.ஏ. பரீட்சையில் தேறிய நாள்.
20— 6—1937	நான் ஏழாம் வகுப்புக்குச் சென்ற நாள்.

வினா: நீ இன்றைய தினம் நாட் குறிப்பு எழுதுவதாய் இருந்தால் என்னென்ன எழுதுவாய்?

11. வேளாண்மை

புதிய பதங்கள் : விழுமிய, சான்று, பிரசுரம்.

அருந்தொடர் : தலைக்கடை, கர்ணபரம்பரை, குணுகுணம், சர்வ சாதாரணம்.

வேளாண்மை, கைத்தொழில், வாணிகம் இம்மூன்றும் எந்நாட்டிலே சிறந்து விளங்குகின்றனவோ, அந்நாட்டிற்கு என்றும் யாதொரு குறையும் இல்லை. கைத்தொழிலுக்கும் வாணிகத்துக்கும் அடிப்படையாக உள்ளது வேளாண்மையே. ஆதலால், நம் முன்னோர் வேளாண்மையை மிகவும் முக்கியமாகக் கவனித்து வந்தனர். கம்பர் உழவுத்தொழிலின் சிறப்பினை, "ஓதுவார் எல்லாரும் உழுவார்தம் தலைக்கடைக்கே," எனவும், "செங்கோலை நடத்துங் கோல் ஏர் அடிக்கும் சிறுகோலே," எனவும் பாராட்டியிருக்கின்றனர். திருவள்ளுவர் உழவின் அவசியத்தைத் தெரிவித்தற்கே திருக்குறள் என்னும் தமது திவ்விய நாலில் தனிப்பட ஓர் அதிகாரம் வகுத்து, "உழுவார் உலகத்தார்க்கு ஆணி," எனவும், "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்," எனவும் பெருமைப் படுத்திக் கூறுகின்றனர். அன்றியும், அவ்வையார் என்னும் அருந்தமிழ் மூதாட்டியாரும் 'தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது' என்றும், 'சீரைத்தேடின் ஏரைத்தேடு' என்றும் தம் நீதி நூல்களில் உழவினைக் குறித்து உயர்வாகக் கூறியிருக்கின்றனர். இவைகளேயன்றிக் கர்ணபரம்பரையாக வழங்கி வரும் பழமொழிகள் பலவும் வேளாண்மையின் விழுமிய நிலையினை நமக்கு நன்கு விளக்கிக் காட்டுகின்றன.

கால இயல்புகளையும் அவைகளின் குணகுணங்களை யும் நம் முன்னோர்கள் எவ்வளவு கூர்ந்து கவனித்துள்ளார் கள் என்பதற்குக் கீழ்வரும் பழமொழிகளே சான்று பக ரும். இக்காலத்தே காலபேதங்களையும், சீதோஷ்ண அளவு களையும் 'வாயுமானி,' 'உஷ்ணமானி' முதலிய கருவி களைக்கொண்டு நாம் நன்கு தெரிந்து கொள்கின்றோம். நம் முன்னோர்களோ இயற்கைப் பொருள்களின் நிகழ்ச்சி களைக் கூர்ந்து கவனித்தலினாலேயே அவைகளை ஒருவாறு உணர்ந்து வந்தார்கள். அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப் பெற்ற விவசாயக் கல்லூரி மூலமாகவும், அவர்களால் அவ் வப்போது வெளியிடப்படும் விவசாய நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் ஆகிய இவைகளின் வாயிலாகவும் இப்போ துள்ள விவசாயிகள் பல அரிய விஷயங்களை அவ்வப் போது உணர்ந்து வருகின்றார்கள். நம் முன்னோர்கட்கு இத்தகைய சாதனங்கள் இல்லாதிருந்தும் அவர்கள் பல தலைமுறைகளாக வழங்கிவரும் பழமொழிகளைக் கொண்டே விவசாய சம்பந்தமான அரிய விஷயங்களை நன்கு உணர லானார்கள்.

பழமொழி என்னும் பெயரைக்கொண்டே இவை மிகவும் பழமையானவை என நாம் உணரலாகும். இவை களுட் சில ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகளாக வழங்கி வருபவை; சில இரண்டொரு நூற்றாண்டுகளாக வழங்கி வருபவை.

பழமொழிகள் யாவும் முற்றிலும் உண்மையானவை என நம்மால் துணிந்து கூற இயலாவிடினும், அவைகளுட் பெரும்பாலன நமக்குப் பெரிதும் பயன்படக்கூடியனவே. இப்பழமொழிகளுள் பல இக்காலத்தும் கிராமவாசிகள் சர்வசாதாரணமாக வழங்கி வருதலைப் பலரும் கேட் டிருக்கலாம்.

பழமொழிகள்

I. மழை :

1. அந்தி மழை அழுதாலும் விடாது.
2. ஆகாயம் மணல் கொழித்தால், அடுத்தாற்போல் மழை.
3. ஈசல் பறந்தால் மழை மாறும்.
4. ஐப்பசி மேல்காற்று அப்போதே மழை.
5. கடுங்காற்று மழை காட்டும்; கடுநட்புப் பகை காட்டும்.
6. கொடிக்கால் மின்னினல் விடிகாலே மழை.
7. தும்பி பறந்தால் தூரத்தில் மழை.

II. மாதங்கள் :

1. சித்திரை மழை சின்னப்படுத்தும்.
2. வைகாசி மழை பெய்தால் புளியம்பூ பொய்க்காது.
3. ஆனி அரையாறு; ஆவணி முழு ஆறு.
4. ஆடி அரை மழை.
5. ஆவணி மாதம் அழுகைத் தூறல்.
6. புரட்டாசி பெய்தாலும் பெய்யும், காய்ந்தாலும் காயும்.
7. ஐப்பசிப் பனி அத்தனையும் மழை.
8. கார்த்திகை கனத்த மழை.
9. மார்கழி மழை மண்ணுக்கு உதவாது.
10. தை பிறந்தது தரை வறண்டது.
11. மாசி மின்னல் மரம் தழைக்கும்.
12. பங்குனி மழையால் பத்தெட்டும் சேதம்.

III. உழவு :

1. அகல உழுதலினும் ஆழ உழுதல் நன்று.
2. ஈரத்தில் ஏரைப் பிடி.
3. உண்பாரைப் பார்த்தாலும் உழுவாரைப் பார்த்தல் ஆகாது.
4. ஏரை இகழ்ந்தார் பேரை இழந்தார்.
5. ஏழுழவு உழுதால் எருவும் வேண்டுமோ?
6. நன் செய்க்கு ஏழுழவு, புன்செய்க்கு நாலுழவு.

IV. நீர் :

1. நீர் பெருத்தால் நெல் சிறுக்கும்.
2. நீர்வள முண்டானல் நெல்வள முண்டாகும்.
3. வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும்.
4. வெள்ளமே போனலும் பள்ளம் பார்த்துப் பயிரிடு.

V. எரு :

1. ஆடு பயிர் காட்டும் ; ஆவாரை நெல் காட்டும்.
2. ஆட்டுரம் ஓராண்டு நிற்கும் ; மாட்டுரம் ஆருண்டு நிற்கும்.
3. ஆற்று மண்ணுக்கு வேற்று மண் உரம்.
4. உரம் உதவுவது ஊரார் உதவார்.
5. எருவில்லா வயல் கன்றில்லா மாட்டுக்குச் சமம்.

VI. விதை :

1. ஆடியில் அவரை போட்டால், கார்த்திகையில் காய் காய்க்கும்.
2. ஆடி விதைப்பு ; ஆவணி நடவு.
3. ஆமணக்கும் பருத்தியும் அடர விதைத்தல் ஆகாது.
4. இளைத்தவன் எள் விதைப்பான், கொழுத்தவன் கொள் விதைப்பான்.

5. எள் விதைத்த காட்டில் கொள்ளும் விளையாது.

6. களர் உழுது கடலை விதை.

VII. இலை, பூ, காய், பழம் :

1. எந்த இலை உதிர்ந்தாலும் ஈச்ச இலை உதிராது.

2. எள்ளும் தினையும் எழுபது நாளில் பலன் தரும்.

3. நாவல் பழுத்தால் நாடு செழிக்கும்.

4. பனி பெய்தால் மழையில்லை, பழம் இருந்தால் பூவில்லை.

5. பொங்குங் காலத்தே புளி நயக்கும்; மங்குங் காலத்தே மாங்காய் நயக்கும்.

6. மாசி மழையில் மாதுளை பூக்கும்.

VIII. பல விதம் :

1. ஆண்டை கூலியைக் குறைத்தால், சாம்பான் வேலையைக் குறைப்பான்.

2. ஊர் ஓரத்தில் கொல்லை உழுதவனுக்குப் பயிர் இல்லை.

3. கடன் வாங்கிப் பயிரிட்டவனும் மரம் ஏறிக் கை விட்டவனும் ஒன்று.

4. கார்த்திகைக் கப்பால் மழையும் இல்லை, கர்ணனுக் கப்பால் கொடையும் இல்லை.

5. கால மறிந்து பெய்யாத மழையும் நேர மறிந்து உண்ணாத உணவும் வீண்.

6. வெட்டிக் கெட்டது வேம்பு; வெட்டாமல் கெட்டது பூவரசு.

வினா : 1. கொழுத்தவன் கொள் விளைப்பான்—இதன் கருத்து என்ன?

2. கர்ணன்—இவனைக்குறித்து உனக்கு என்ன தெரியும்?

12. இலக்கணப் பாடல் II

வேற்றுமை :

வேற்றுமை எட்டென வகுத்தனரே
வேண்டும் உருபும் தொகுத்தனரே.

முதலாம் வேற்றுமைக் குருபிலையே
அதனதன் பெயரவ் வேற்றுமையே.

ஐ எனும் உருபது சேர்ந்திடுமேல்
அமைந்திடும் இரண்டாம் வேற்றுமையே.

மூன்றும் வேற்றுமை உருபுகளே
ஆன் ஆல் ஓடுடன் அறைகுவரே.

குவ்வெனும் உருபது கொண்டாலே
கூடிடும் நான்காம் வேற்றுமையே.

ஐந்தாம் வேற்றுமை உருபுகளே
இன் இல் இருந்தென இயம்புவரே.

அதுஅ உடைய அமைந்திடினே
ஆறும் வேற்றுமை ஆகிடுமே.

ஏழாம் வேற்றுமை உருபுகளே
இல் இடத் தில் கண் என்போமே.

அழைத்திடப் பயன்படும் பதமெல்லாம்
ஆகிடும் எட்டாம் வேற்றுமையே.

வேற்றுமை பலவும் கற்றோமே
வெகுமதி இன்றே பெற்றோமே.

எண்	உருபு	உதாரணம்
1	(உருபு இல்லை)	—ஆசிரியர் வந்தார்.
2	ஐ	—நாங்கள் பாடங்களைக் கற்போம்.
3	ஆல்	—அவர் பிரம்பால் அடிக்கமாட்டார்.
	ஒடு	—நாங்கள் அவரோடு செல்லுவோம்.
	உடன்	—அவர் எங்களுடன் விளையாடுவார்.
4	கு	—அவருக்கு நாங்களே தோழர்.
5	இன்	—அவர் பொன்னின் நற்குணம் வாய்ந்தவர்.
	இல்	—அவர் கல்வியில் பெரியவர்.
	இருந்து	—நாங்கள் பாடசாலையிலிருந்து வருகிறோம்.
6	அது	—எமது பாடசாலை மிகவும் அழகானது.
	அ	—உன கால்கள் எங்கள் பாடசாலை வரை நடந்து வருமா ?
	உடைய	—உன்னுடைய விருப்பம் யாது ?
7	இல்	—எங்கள் பாடசாலையில் அழகிய படங்கள் இருக்கின்றன.
	இடத்தில்	—எங்கள் ஆசியரிடத்தில் நாங்கள் அன்பாக இருக்கிறோம்.
	கண்	—நாம் தோட்டத்தின்கண் சென்று விளையாடலாமா ?
8	(கூப்பிடுதல்)	—தம்பீ, அண்ணா, தங்கையே, எல்லோரும் வாருங்கள்.



13. திக்கற்ற ஏழைக் கிழவி

புதிய பதங்கள் : ஊதியம், அரற்றல்.

அருந்தொடர் : சின்னஞ்சிறு, ஆருத்துயரம்.

ஓர் ஊரிலே ஒரு கிழவி இருந்தாள். அவளுக்கு உற்றார் உறவினர் எவரும் இலர். அவள் ஒரு வீட்டுத் திண்ணையிலே அப்பக் கடை வைத்திருந்தாள். அதில் கிடைக்கும் சிறு ஊதியத்தைக் கொண்டே அவள் தன் வாழ்நாளைக் கழித்து வந்தாள்.

அவள் பெயர் ஒருவருக்கும் தெரியாது. முதல் முதலில் யாரோ ஒருவன் அவளை 'அக்கா,' என முறையிட்டு அழைத்தான். அதிலிருந்து அனைவரும் அவளை அப்பெயராலேயே அழைக்க ஆரம்பித்தனர். சின்னஞ் சிறு

குழந்தைகள் கூட அவளைப் 'பாட்டி' என அழையாமல் 'அக்கா' எனவே அழைக்க விரும்பும். அங்குள்ள காக்கை களும் அக்கிழவியைக் கண்டு விட்டால் 'அக்கா—அக்கா,' என்று கரைந்து அழைக்கும்.

அக்கிழவி மிகவும் நல்ல குணமுடையவள். பொறாமை, வஞ்சனை முதலிய துர்க்குணம் அவளிடம் சிறிதும் இருந்த தில்லை. சிறு குழந்தைகள் தன் கடைக்கு வந்தால், அவள் அவர்களிடம் சிரித்து விளையாடி, அவர்கள் விரும்பியவா றெல்லாம் அவர்கட்கு அப்பம் சுட்டுத் தருவாள்.

அவள் நாள்தோறும் அதிகாலையில் எழுந்து அப்பம் சுடுவாள். முதலில் சுடும் அப்பங்களில் இரண்டொன்றி னைக் காக்கைகளுக்குத் தந்து பிறகு சுடும் அப்பங்களையே அவள் விற்பனை செய்வாள். அவ்வாறு விற்க ஆரம்பித்த பின்னரும் காக்கை, குருவி முதலியன வந்து ஏங்கி நிற்கக் கண்டால் அவள் தன்னிடமுள்ள அப்பங்களில் ஒன்றை எடுத்துச் சிறு சிறு துண்டுகளாகச் செய்து, அவைகளிடம் எறிவாள்.

அக்கிழவி சுடும் அப்பங்கள் யாவும் பருவகாலச் சந்தி ரன் போன்று வட்ட வடிவுடன் வெள்ளை வெளேரென விளங்கும். அவற்றின் மீது தடவும் தேங்காய்ப்பாலின் மண மும் சுவையும் சிறுவர்தம் நாவில் நீர் சுரக்கச் செய்யும். அவள் சிறந்த பொருள்களைக் கொண்டு சுத்தமான முறை யில் அப்பம் சுடுவது கண்ட அவ்வூரிலுள்ள பலரும் அவ ளிடமே அப்பம் வாங்க வருவார்.

ஒருநாள் அதிகாலையில் ஒரு காக்கை ஒரு வீட்டுத் திண் ணைக்கருகே வந்து உட்கார்ந்து, தன் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்த்த வண்ணமாய் இருந்தது. சிறிது நேரத்

திற்குள் வேறு இரண்டு காக்கைகள் அதற்கு அருகே வந்து உட்கார்ந்து, ‘ அக்கா—அக்கா ’ என்று கரைய ஆரம்பித் தன. அப்போது மற்றும் பல காக்கைகள் அங்கே வந்து சூழ்ந்து கொண்டன. அதுதான் அக்கிழவி அப்பம் சுடும் இடம். அவள் தரும் அப்பத்தைத் தின்பதற்காகவே அவை அங்கே வந்து காத்திருந்தன. ஆனால், பாவம்! அன்று அக்கிழவி அப்பம் சுடுதற்கு வரவில்லை. கிழவியினிடம் அப்பம் வாங்கித் தின்பதற்காகச் சில சிறுவரும் சிறுமி யருங் கூட வந்திருந்தனர். அதிகாலையில் எழுந்து வரும் குழந்தைகட்கு அக்கிழவி பெரிய அப்பம் சுட்டுத்தருதல் வழக்கம். அதற்காகவே அக்குழந்தைகள் முன்னமே வந்து காத்திருந்தன.

காலை மணி ஆறுக்குமேல் ஆகியும் அன்று அக்கிழவி அப்பம் சுடுதற்கு வரவில்லை. அக்கம் பக்கத்திலுள்ள பெண் கள் தங்கள் கைக்குழந்தைகளோடு வந்து வெறுமையாய்க் கிடந்த திண்ணையைப் பார்த்து, “ அக்காவைக் காணேமே! இன்று அப்பம் அகப்படாது போல இருக்கிறதே ” என்று கூறிக்கொண்டே வீடு திரும்பலானர்கள். அங்கே நட மாடும் கோழி, அணில் முதலியவைகட்கும் அக்கிழவி அவ் வப்போது அப்பத்துண்டுகளை எறிதல் வழக்கம். ஆதலால் அவைகளும் அன்று அங்கே வந்து வந்து பார்த்து ஏமாற்ற மடைந்தன. அக்கிழவி நாள்தோறும் காலை எட்டு அல்லது ஒன்பது மணிக்குள் அப்பக் கடையை மூடிவிடுவாள். அவ் விதம் மூடுவதற்கு முன் கூனர், குருடர், மொண்டிகள், முட வர் முதலிய அங்கவீனர்கள், நோயாளிகள், ஏழை எளிய வர்கள் ஆகியவர்களில் எவர் வரினும், அவர்க்கெல்லாம் அவள் மிகுந்த அப்பங்களைப் பங்கிட்டுத் தருவாள். ஆத லால், அவர்களுள் சிலரும் அங்கே வந்து காத்திருந்தனர்.

மணி எட்டாயிற்று ; சிறுவரும் சிறுமியரும் ஏக்கத்துடன் தத்தம் வீடு நோக்கித் திரும்பினர். ஏழைகளும் எளியோரும் வேறிடஞ் சென்று பிச்சை கேட்க எண்ணினார்கள். ஆனால், அங்கே சூழ்ந்திருந்த காக்கைகள் மட்டும் அவ்விடத்தைவிட்டு அகலவில்லை. எவ்விதமேனும் கிழவி வருவாள் வருவாள் என்றே அவை அங்கே காத்திருந்தன.

நெடுநேரம் ஆகியும் கிழவி கடைவைக்க வரவில்லை. அப்போது காக்கைகளுக்குச் சிறிது சந்தேகம் தோன்றிற்று. ‘அக்கா ஏன் கடை வைக்க வரவில்லை? அவளுக்கு யாது நேர்ந்திருக்கக் கூடும்?’ எனப் பலவாறு அவை ஒன்றோடொன்று கலந்து ஆலோசித்தன. அப்பறவைகட்கு அக்கிழவியின் வீடு நன்றாகத் தெரியும். ஆதலால், அவை யாவும் அங்குப் பறந்து சென்றன.

சிறிது நேரத்திற்குள் அக்காகங்கள் ஒரு சிறு குடிசையை அடைந்தன. அது அக்கிழவி வசிக்கும் இடமாகும். மக்கள் நடமாட்டம் மிகுதியும் இராத ஒரு மேட்டின்மீது அக்குடிசை கட்டப்பட்டிருந்தது. அக்காகங்கள் முதலில் அக்குடிசைக்கு அருகே யிருந்த ஒரு மரத்தின் மீது தங்கின. பிறகு அவைகள் மெதுவாகக் குதித்துக் குதித்துக் குடிசையின் வாயிலை அடைந்தன. அக்குடிசை நிசப்தமாக இருத்தல் கண்டு அக்காகங்களில் ஒன்று மெதுவாக ‘அக்கா’ என்று குரல் கொடுத்துப் பார்த்தது. அதற்கு யாதும் பதில் வாராமையால் அக்காகங்கள் ஒவ்வொன்றாக அக்குடிசைக்குள் மெதுவாகத் தத்தித் தத்தி நுழையலாயின.

அதிகாலையில் விழித்துக்கொள்ளும் இயல்பு வாய்ந்த அக்கிழவி அன்று மணி எட்டடித்தும் படுக்கை விட்டு எழுந்திருக்க வில்லை. ஆதலால், அவளுக்கு உடல் நலம்

குன்றி யிருத்தல் வேண்டுமென அவைகள் தீர்மானித்தன. 'நன்றி மறப்பது நன்றன்று,' 'உப்பிட்டவரை உள்ள அளவும் நினை,' என்பன, பெரியோர் கூறிய பழமொழிகள் அல்லவா? பலர்க்கும் உதவும் குணமுடைய அக்கிழவிக்கு அந்நிலையில் யாதேனும் உதவி புரிதல் வேண்டும் என அந்தக் காகங்கள் கருதின. பறவை யினத்தைச் சார்ந்த அவைகளால் அக்கிழவிக்கு யாது உதவி புரிய இயலும்? ஆதலால், அவை நெடுநேரம் யோசித்து, முடிவில் அடுப்பு மூட்டுதற்கு விறகின்மையை யுணர்ந்து, வெளியே பறந்து சென்று, உலர்ந்த சிறு குச்சிகளைத் தம் அலகினால் பொறுக்கிக் கொணர்ந்து அடுப்பின் அருகே வைத்து, 'அக்கா-அக்கா,' எனக் கரைந்து, அவளை எழுப்புதற்கு முயன்றன. அப்போது அக்கிழவி கண் திறந்தும் பார்க்காமல் மௌனமாய் இருந்தமையால், அவள் பசியினால் பெரிதும் களைத்திருக்கின்றாள் என எண்ணி மறுபடியும் பல வேறு இடங்கட்குப் பறந்து சென்று, தமக்குக் கிடைத்த உணவுப் பொருள்களை யெல்லாம் கொண்டு வந்து குவித்து, 'அக்கா-அக்கா' என முன்னினும் அதிகமாகக் கரைந்து, அவளை எழுப்ப முயன்றன.

அக்கிழவியை எழுப்புதற்குக் காகங்கள் செய்த பல வகை உபாயங்களும் பயன்படா தொழிந்தமையால், அவை அக்கிழவி இறந்து விட்டாள் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டன. ஆ! அப்போது அவை பெரிதும் வருந்தின. 'அக்கா—அக்கா—அக்கா' என அவைகள் தங்கள் இறக்கைகளை வயிற்றில் அடித்துக்கொண்டு நாற்புறமும் பறந்து பறந்து அழுத ஒலி அவ்வூர் முழுதும் பரவலாயிற்று. அவ்வொலியினைக் கேட்டு அவ்வூரிலுள்ள ஆண்களும் பெண்களும் வந்து அக்கிழவியின் குடிசையைச் சூழ்ந்துகொண்

டார்கள். அக்கிழவி இறந்தாள் என்பதை அறிந்த சிறுவரும் சிறுமியரும் தேம்பித் தேம்பி அழுதனர்; கூனர், குருடர், மொண்டிகள், மூடவர் முதலிய ஏழைகள் அவள் குடிசையை அடைந்து ஆருத்துயரத்தால், 'அக்கா—அக்கா,' என வாய் விட்டு அரற்றலானுர்கள்.

உற்ருர் உறவினர் ஒருவரும் இல்லாத அக்கிழவிக்கு ஊரார் அனைவரும் ஒன்று கூடிக் கடைமுறையாகச் செய்ய வேண்டிய கடன்கள் யாவும் சிறப்புறச் செய்தனர். அக்கிழவியின் உடல் புதைக்கப்பெற்ற அவ்விடத்தினைக் குருவிகள் பல்வகை மலர்களால் அலங்கரித்தன. அணில்கள் அவ்விடத்தை ஆலயம் போலச் சுற்றிச் சுற்றி வந்து தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்தன. கோழியினங்கள் கூவிக் கூவி வருந்தின. ஏழை எளியோர் பலரும் அக்கிழவியின் அருங்குணம் பலவும் நினைந்து நினைந்து ஏங்கி நின்றனர். இவ்விதம் அவ்வூரிலுள்ள அனைவரும் வருந்தி வருந்தி, நாளடைவில் ஒருவாறு துன்பம் நீங்கியிருந்தனர். ஆனல், அந்தக் காகங்கள் மட்டும் இன்றும் அவ்வூரில் காலையும் மாலையும் 'அக்கா—அக்கா,' என அக்கிழவியை நினைந்து வருந்தி வருகின்றன.

வினு: 1. குழந்தைகள் காத்திருந்தன - இதனை 'ஒரு குழந்தை' என ஆரம்பித்து முடித்துக் காட்டு.

2. பருவகாலச் சந்திரன் போன்று இருக்கும் - எது?

3. உற்ருர், உறவினர் - வித்தியாசம் என்ன?

4. குடிசைக்குள் நுழைந்தன; மலர்களால் அலங்கரித்தன. குடிசைக்குள், மலர்களால் - இவை இன்னின்ன வேற்றுமை என எழுது.

5—G. 1

நித்தில வாசகம்

ஐந்தாம் புத்தகம்

1. 'வைகறைத் துயில் எழு'

புதிய பதங்கள்: வைகறை, சாளரம்.

அருந்தொடர்: இருட்படலம், மழலைமொழி, பசுமரத்தாணி.

கிழக்குத் திசையிலே வானம் சிறிது வெளுப்பதற்கு முன்பே சேவற் கோழி, 'கொக்கர-கோ' எனக் கூவ ஆரம்பிக்கின்றது. 'கா-கா' எனக் காகங்கள் கரைகின்றன. குயில்களும், பிற பறவைகளும் தங்கள் இனிய குரலால் பாட்டு இசைக்க ஆரம்பிக்கின்றன. வண்டுகள்

15. நாம் செய்யவேண்டுவன

புதிய பதங்கள் : சோமன், மோழை, கோது, ஊழ்.

காலையிலே விழித்தெழுந்து கற்றல் வேண்டும் ;
கற்றநெறி தவருதே நிற்றல் வேண்டும் ;
வேலையிலாத் துன்பத்தைத் தீர்த்தல் வேண்டில்
விவசாயம் கைத்தொழில்கள் போற்றல் வேண்டும் ;
ஆலைபல ஆங்காங்கே அமைத்தல் வேண்டும் ;
அருமுயற்சி அறிவுடைமை ஆண்மை வேண்டும் ;
மூலையிலே கிடந்துறங்கப் போதிங் கில்லை ;
முயற்சியினுல் மேல்நாட்டார் மிளிர்தல் காணீர். 1

வீமனையும் விஜயனையும் வியந்தேந் நாளும்
வீணுரைகள் விளம்புவதில் பயனே இல்லை ;
நாமவர்போல் நலனுறவே நாடில் நன்றே
நம்பெயரும் அவர்பெயர்போல் நாட்டில் ஓங்கும் ;
ஏமனையும் எதிர்த்துயர்ந்தான் மார்க்கண்டேயன்
எனில்முயன்ருல் இயலாமை இல்லை அன்றே ;
சோமனுக்கும் சோற்றினுக்கும் சோர்ந்தே நிற்போர்
சுகம்விரும்பிப் பொழுதோழிக்கும் சோம்பர் தாமே. 2

தோட்டாலும் நீர்சுரக்கும் வெள்ளம் தேக்கும்
தொழில்பலவும் புரியாதே சிறிதே தோண்டி
நட்டாலும் நலந்தந்தே நம்மைக் காக்கும்
நன்னிலங்கள் மிகப்பலவாம் நமது நாட்டில் ;

முட்டாளென் பேரில்லை; மோழை இல்லை;
முயற்சியிலாக் குறையதனல் மெலிவுற் ருேமால்
கெட்டாலும் வாழ்ந்திடலாம் உழைக்க வாரும்
கீழ்மேலோர் இலேயென்றே இயம்பு மாறே. 3

வாழைதனில் உயர்கனிதான் வாங்கித் தந்தால்
வகைபெறவே உரித்தூட்ட உரைப்பா ருண்டோ?
ஏழையராய் இருந்தபிற நாட்டா ரெல்லாம்
யந்திரங்கள் பலஇயற்றி ஏற்றம் உற்ருர்;
கோழைகளாய்க் கையேந்தோம்; கோதில் ஞானம்
குறைவறவே பெற்றுயர்வோம்; குவிப்போம் பொன்னே;
ஊழையுமே வென்றிடுவோம்; ஊக்கங் கொள்வோம்;
உத்தமராய் வாழ்ந்திடுவோம் உலகில் நாமே. 4

சேய்மொழிகள் பலகற்றே சிறந்திட் டாலும்
செல்வமெலாம் நாடோறும் குவித்திட் டாலும்
தாய்மொழிதான் போற்ருதார்க் குயர்வே யில்லை.
தமிழ்வளர்ப்போம் தமிழ்வளர்ப்போம் தருணம் இதே!
நோய்நொடிதாம் உற்றவர்போல் நுணங்கல் வேண்டா;
நூல்பலவும் தமிழினிலே நிலவச் செய்வீர்;
வர்ய்மையினில், வண்மையினில், வலிமை தன்னில்
வல்லவராய் வாழ்ந்திடலாம் விரைகு வீரே. 5

விஞ: 1. மேல் நாட்டார் எதனுல் உயர்நிலை அடைந்தனர்?
2. வீமன், விஜயன் - இவர்கள் எவ்வெவ் வகையிற் பெயர் பெற்றவர்கள்?
3. மார்க்கண்டேயன் கதையைச் சுருக்கிச் சொல்லு.
4. உயர்வே இல்லை - எவர்க்கு?
5. வாய்மை, வண்மை - பொருள் கூறு.

16. காப்பிக்கொட்டையின் வரலாறு

புதிய பதங்கள் : கியாழம், கிடை, குதூகலம்.

அருந்தொடர் : பெரு வழக்கு, வழிபாடு, பிரதேசம்.

பெரிய பட்டணங்களில் வாழ்வோரும், சிறிய குக்கிராமத்தில் குடியிருப்போரும், யாரேனும் விருந்தினர் வரக் காணின் "காப்பி சாப்பிடுங்கள்" என்று வற்புறுத்திக் கூறுதல் இக்காலத்தே பெரு வழக்காய் இருக்கிறது. காப்பிக் கியாழம் அருந்தும் பழக்கம் நமக்கு 'எப்போது வந்தது?' எனவும், 'எவ்விதம் வந்தது?' எனவும் நீங்கள் எண்ணிப் பார்த்ததுண்டா? 'இப்பழக்கம் முதன் முதலில் ஐரோப்பாக் கண்டத்திலே தான் இருந்திருத்தல் வேண்டும்,' என நீங்கள் கருதலாம். சுமார் இருநூற்று ஐம்பது ஆண்டுகளாகத்தான் ஐரோப்பியர் காப்பிக் கியாழம் அருந்துகின்றனர். அதற்குமுன் அவர்கள் காப்பி என்பதின் பெயரையே அறியாதிருந்தார்கள். இச்செடி முதன் முதலில் வட ஆப்பிரிக்காவிலுள்ள அபிசீனியாவிலேதான் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

சுமார் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னே எகிப்து நாட்டின் சில சன்னியாசிகள் மதசம்பந்தமாக

நேர்ந்த மனவேறுபாட்டின் காரணமாக அபிசீனியாவின் மேட்டுப் பாங்கான நிலப்பகுதிகள் ஒன்றில் தங்கள் ஆட்டு மந்தைகளோடு வந்து தங்கியிருந்தார்கள். ஒரு நாள் அச் சன்னியாசிகளுள் ஒருவர் தம் ஆடுகளைப் பழக்கம் போலக் கிடையில் அடைத்தபோது அவைகள் சிறிதும் அமைதி யாய் இராமல் அன்றிரவு முழுதும் நாற்புறமும் ஓட முயல் வதும், தாவிக்குதிக்க எழும்புவதுமாய் இருந்தன. 'இது ஒரு கொடிய தேவதையின் ஏவலாய் இருத்தல் கூடும்,' என எண்ணி, முதலில் அவர் மந்திரம், ஜபம் முதலியன செய்து பார்த்தனர். அதற்கு அடுத்த நாளிலும் அந்த ஆடுகள் அவ்வாறே புரிதலைக் கண்ட அச்சன்னியாசியார் அவை அருந்தும் இலை தழைகளை ஆராய எண்ணங்கொண்டு, ஒரு நாள் அவைகளைத் தாம் தொடர்ந்து செல்லலாயினர். அவ் வாடுகள் யாதோ ஒரு செடியின் இலைகளை மிக்க ஆவலோடு மேய்தல் கண்ட அவர், அவ்விலைகளில் மிகவுங் கொழுந் தாக இருந்த இரண்டொன்றினைப் பறித்துத் தாமும் மென்று தின்றனர். அன்றிரவு சிறிதும் உறங்காமல் நெடுநேரம் செய்யவேண்டிய கடவுள் சம்பந்தமான தியான வழிபாடுகளுக்கு அது பெரிதும் அனுகூலமாய் இருந்ததை அறிந்த அச்சன்னியாசியார் அவ்வாடுகளின் குதூகலத் திற்கும் அவ்விலைகளே காரணம் என உணர்ந்தனர். இதி லிருந்தே காப்பிச் செடியின் பயன் மாந்தர் பலருக்கும் நாளடைவில் நன்கு தெரிய வந்தது.

மக்கள் முதன் முதலில் அச்செடியின் சிறந்த பாகங் களைக் கண்டெடுத்து ஒருவகை இலேகியம் போலச் செய்து அருந்தலாயினர். அதன் பின்னரே காப்பிக்கொட்டையி லிருந்து கியாழம் இறக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது மக்கள் அதனை ஓர் உணவுப் பொருள்போல்

மிகுதியும் அருந்தலாயினர். அது கண்ட மருத்துவ நிபுணர் இருவர் காப்பிக் கியாழத்தால் தேகத்துக்கு நேரும் தீங்குகளை நன்குணர்ந்து மக்களுக்கு எடுத்துரைக்க, அக்காலத்திருந்த ஓர் அரசன் கோபங் கொண்டு, அவ்விருவரையும் தூக்கிட்டுக் கொன்றதாகவும் கூறப்படுகிறது

இவ்விதம் முதன் முதலில் அபிசீனியாவிலும், பிறகு அரேபியாவிலும் காப்பிக்குடி உண்டாயிற்று. நாளடைவில் இப்பழக்கம் உலகமுழுதும் பரவியது. இப்போது இவ்வுலகில் சுமார் எழுபதினுயிரத்துக்கு மேற்பட்ட காப்பித் தோட்ட நிலையங்கள் இருக்கின்றன.

காப்பிச்செடி முதன் முதலில் இந்தியாவிற்கு எவ்விதம் வந்தது என்பதையும் நாம் அறியவேண்டுமல்லவா? இச்செடி நம் நாட்டுக்குப் பல நூற்றுண்டுகட்கு முன்னரே வந்து விட்டதாகத் தெரிய வருகிறது. இந்து மதத்திலிருந்து முகமதிய மதத்திற்கு மாறிய பாபாபூதன் என்னும் ஒருவர் அரேபியாவிலுள்ள மெக்கா என்னும் முகமதிய ஸ்தலத்திற்கு யாத்திரையாகச் சென்று திரும்பியபோது அங்கிருந்து காப்பிச் செடியின் ஏழுவிதைகளை அவர் இந்தியாவிற்குக் கொண்டு வந்து மைசூரிலுள்ள மலைப் பிரதேசமொன்றில் நட்டுப் பயிர் செய்தனராம். அதனுல் இப்போதும் அந்த இடம் அவர் பெயராலேயே அழைக்கப் படுகிறதாம்.

1840-ஆம் ஆண்டில் ஓர் ஆங்கிலேயர் அந்த இடத்தை முதன் முதல் காப்பிக்கொட்டை வர்த்தக நிலையமாக ஏற்படுத்தினர். இப்போது நம் நாட்டிலே மைசூர், நீலகிரி, திருவாங்கூர் முதலிய இடங்களிலே காப்பிச் செடிகள் மிகுதியும் பயிரிடப்படுகின்றன. இவ்வாறே இலங்கைத் தீவிலும் காப்பிச் செடி ஏராளமாகப் பயிரிடப்படுகிறது.

காப்பிச் செடி பயிரிடும் முறையும், காப்பிக்கொட்டை தயாரிக்கும் வகையும் அந்தந்த இடங்களுக் கேற்றபடி வித்தியாசப்படுகின்றன. எனினும், எங்கும் பொதுவாக நடைபெறும் ஒரு சில விஷயங்களையேனும் நாம் உணர்ந்து கொள்ளுதல் நலம். காப்பிச் செடி பயிரிடுவதற்கு மேட்டுப் பாங்கான உஷ்ணப் பிரதேசமே மிகவும் சிறந்தது. அதற்கு நல்ல மழையும் மிகவும் அவசியம். அரேபியா தேசத்துக் காப்பிச் செடி பதினாறு அல்லது பதினெட்டடி

உயரம் வளரும். அதன் இலைகள் பச்சைப் பசேலென மூன்று அல்லது நான்கு அங்குல நீளமுள்ளதாக இருக்கும். அதன் மலர்கள் வெண்மையானதாகவும் மணமுள்ளதாகவும் இருக்கும். அதன் காய் முதலில் பச்சை நிறமுள்ளதாக இருந்து பிறகு மஞ்சள் நிறமுள்ளதாக மாறும். அது பழுக்கும் போது சிவப்பு நிறமடைந்து முடிவில் நன்றாகக் கனியும் போது கருமை நிறமுங் கலந்திருக்கும். ஒவ்வொரு பழத்திலும் இரண்டிரண்டு விதைகள் இருக்கும். அவ்விரு விதைகளும் ஒரு மென்மையான தோலால் மூடப்பட்டிருக்கும். ஆப்பிரிக்காவில் பயிரிடப்படும் காப்பிச் செடி பதினெட்டடியிலிருந்து முப்பத்தாறடி உயரம் வரையில் ஓங்கி வளரும். அவ்வாறே இலைகளும் பெரிதும் நீண்டிருக்கும்;

அதன் பழங்களும் மிகவும் பெரியதாக இருக்கும். இதனை லிபரியன் காப்பிக்கொட்டை என வழங்குவர். அடிமைத் தனத்தினின்று நீங்கிய நீகிரோ ஜாதியரால் பயிரிடப்படும் காப்பிக்கொட்டை என்பது இதன் பொருள். காப்பிக் கொட்டையில் மற்றும் பல வகைகள் உண்டு. தென் அமெரிக்காவில் விளையும் ஐபிரிகோ காப்பிச் செடியின் பழத்தில் நான்கு முதல் ஆறு விதைகள் உண்டு. இதனால்



பெரிதும் இலாபம் இருத்தலால் இதன் விதைகளைப் பல தேசத்தினரும் கொண்டு சென்று தத்தம் நாட்டில் இதனைப் பயிரிட முயலுகின்றனர்.

காப்பிச்செடி வளர்வதற்கு அதிக உஷ்ணம், மிகவும் குளிர்ச்சி முதலியன கூடா. ஆதலால் அவை சிறு செடி களாய் இருக்கும்போது அவைகட்கு உஷ்ணம் தாக்காதபடி அவைகளைப் பனையோலை, கோரைப்பாய் முதலியவைக ளால் மூடி வளர்ப்பார்கள். அவை புஷ்பிக்க ஆரம்பித்தற்கு

மூன்று ஆண்டுகள் ஆகும். அவை நல்ல பலனைத்தரு தற்குக் குறைந்தது ஐந்து ஆண்டுகள் ஆகும்.

காப்பிக்கொட்டை தயாரிப்பதில் இருவகையுண்டு. பழங்களை வெயிலில் நன்ருக உலர்த்திக் கொட்டைகளை எடுத்தல் ஒருவகை. தண்ணீரில் ஊறவைத்துப் பழத்தின் தசைகளை நீக்கிக் கொட்டைகளை எடுத்தல் மற்ருெரு முறை. இவற்றில் இரண்டாவது முறையினையே பலரும் கையாளு கின்றனர். இவ்விதம் தயாரிக்கப்பட்ட காப்பிக்கொட்டை யினைச் செம்மைபெற வறுத்துப் பொடி செய்து பின்னரே கியாழம் இறக்குதல் வேண்டும்.

காப்பிக் கியாழம் அருந்துவதால் மக்களுக்கு நன்மை யுண்டா என்பதையும் நாம் சிறிது ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். காப்பிக் கியாழத்தை அளவாக அருந்திஞல் ஜீரண சக்தியை அதிகரிக்கச் செய்தல், இரத்த ஓட்டத்தை விருத்தி செய்தல், தேகக் களைப்பினை நீக்கி மனத்திற்கு உற்சாகம் அளித்தல் முதலிய பல நன்மைகள் உண்டு. அதிகமாக அருந்திஞல் நரம்புத் தளர்ச்சி, உறக்கமின்மை, நல்ல பசியின்மை முதலிய பல தீமைகளும் உண்டு. காப்பிக் கியாழத்தை விடாமல் அருந்தும் பழக்க முடை யோர் அஃது ஒரு நாளைக்கு இல்லாதொழியின் அன்று அவர்கள் வெறி பிடித்தவர்போலக் காணப்படுகின்றனர். குளிர் மிகுந்த நாடுகளுக்குக் காப்பிக் கியாழம் இன்றியமை யாததாய் இருக்கலாம். உஷ்ண பூமியாகிய நமது நாட் டுக்கு இது அவ்வளவு அவசியமானதன்று.

விஞ: 1. காப்பிச்செடி இந்தியாவுக்கு எவ்விதம் வந்தது?

2. காப்பிக் கியாழத்தால் விளையும் தீங்குகள் யாவை?

17. இலக்கணப் பாடல் III

வினையும் காலமும் :

வினைதான் காலம் காட்டிடுமே
வேலை பலவும் சாற்றிடுமே. 1.

இறப்பெதிர் நிகழ்வெனும் முக்காலம்
இவைதமை மறவோம் எக்காலம். 2.

த் - ட் - ற் - இன் என்பவைதாம்
இறந்த கால இடை நிலையாம். 3.

கிறுவும் கின்றும் ஆநின்றும்
வருமே நிகழ்வுக் கென்றென்றும். 4.

ப் - வ் எனவரும் இடைநிலையே
எதிர்கா லம்பெறும் தடையிலையே. 5.

குறிப்பு : 1. இறந்த காலம் வந்தான்—த். கண்டான்—ட்.
சற்றான்—ற். ஓடினான்—இன்.

2. நிகழ் காலம்—வருகிறான்—கிறு.
வருகின்றான்—கின்று.
வாராநின்றான்— ஆநின்று.

3. எதிர் காலம்—படிப்போம்—ப்.
வருவோம்—வ்.



18. "அப்பா, இது என்ன புத்தகம்?"

அருந்தொடர் : பேரறிஞர், நுண்ணறிவு, பேரும் புகழும்.

சந்திரசேகரர் மிகவும் படித்தவர். அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல அரிய புத்தகங்களைத் தம் வீட்டில் வாங்கி வைத்திருந்தார். அவர் மைந்தனாகிய மணி நான்காம் வகுப்பு வாசித்து வந்தான். அவன் அடிக்கடி தன் தந்தையினிடம் தனக்குத் தோன்றும் பல சந்தேகங்களைக் கேட்டுத் தீர்த்துக்கொள்வது வழக்கம்.

மணி : அப்பா, இது என்ன புத்தகம் ?

தந்தை : மணி, இப்புத்தகத்தின் பெயர் தொல்காப்பியம் என்பது. இஃது ஓர் இலக்கணப் புத்தகம். நம் தமிழ்ப் புத்தகங்களில் மிகவும் பழமையான புத்தகம் இதுதான். சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு

இருந்த தொல்காப்பியர் என்பவர் இந்த நூலைச் செய்தார். இவர் ஆசிரியரின் பெயர் அகத்தியர். அவர் அகத்தியம் என்னும் ஓர் இலக்கண நூல் இயற்றினராம். அஃது இப்போது அகப்படவில்லை. தமிழில் முதன் முதல் இலக்கணம் எழுதியவர் அகத்தியரே.

மணி : அப்பா, எனக்கு இலக்கணந்தான் சிறிதும் விளங்கவில்லை. இந்தத் தொல்காப்பியத்தைக் கொடுங்கள். நான் இலக்கணம் நன்ருகப் படிக்கவேண்டும்.

தந்தை : மணி, இந்த இலக்கணப் புத்தகத்தைப் படித்துத் தெரிந்துகொள்ள உன்ஞல் சிறிதும் இயலாது. நீ முதலில் சிறு இலக்கணப் புத்தகங்களையே படிக்க வேண்டும். பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் என்னும் இலக்கணத்தைப் படித்த பிறகுதான் தொல்காப்பியம் படிப்பது வழக்கம்.

மணி : அப்பா, இந்தத் தொல்காப்பியப் புத்தகத்திற்குப் பக்கத்தில் திருக்குறள் என்று இருக்கிறதே! அதுவும் இலக்கணப் புத்தகந்தாஞ ?

தந்தை : குழந்தாய், திருக்குறள் என்பது இலக்கண நூல் அன்று. இஃது ஒரு நீதி நூல். திருக்குறளைப் போன்ற ஓர் அருமையான நூல் இவ்வுலகத்திலேயே இல்லை என்று கூடச் சொல்லலாம். இதில் உள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது பாடல்களையும் ஒருவன் நன்ருகக் கற்றுக் கொண்டால் அவன் வேறு ஒரு நூலைக் கற்கவேண்டுவதே இல்லை என்று பெரியோர்கள் சொல்வார்கள். இதனை இயற்றியவர் திருவள்ளுவர் என்னும் பேரறிஞர் ஆவர். இவர் சுமார் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் திருமயிலை என்னும் ஊரிலே பிறந்தார். மயிலாப்பூரிலே

இவர் பெயரால் ஒரு கோவில் இன்னும் இருந்து வருகிறது. இவரைப் போற்ருத புலவர்கள் இல்லே. இவர் செய்த திருக்குறளே ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மனி முதலிய பாஷைகளில் மொழி பெயர்த்திருக்கின்றனர்.

மணி : அப்பா, இப்புத்தகம் அவ்வளவு சிறப்புடையதா? இதையாவது நான் சிறிது படித்துப் பார்க்கலாமா?

தந்தை : படிக்கலாம். இதிலுள்ள எல்லாப் பாடல்களும் உனக்கு இச்சிறு வயதிலேயே விளங்கி விடமாட்டா. பிள்ளேகளுக்கு அவசியமான பாடல்களே மட்டும் ஒரு புத்தகமாகச் சிலர் அச்சிட்டிருக்கின்றனர். அச்சிறு புத்தகத்தில் சுமார் முந்நூறு பாடல்கள் தாம் இருக்கும். அதனே நான் உனக்கு வாங்கித் தருகிறேன். அப்புத்தகத்திலிருந்து நீ நித்தம் ஒரு பாடல் மனப்பாடம் செய்து வந்தால் ஓர் ஆண்டிற்குள் அந்த முந்நூறு பாடல்களேயும் படித்து முடித்து விடலாம். திருக்குறளிலிருந்து நாம் ஒன்றை எடுத்துக் கூறிஞல் அதனே மறுத்துக் கூறுபவர் மிகவும் அருமை. அதனுலேதான், 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்னும் பழமொழியும் உண்டாயிற்று. 'இரண்டு' என்பது இரண்டடிகளேயுடைய திருக்குறள்; நான்கு என்பது **நாலடியார்** என்னும் புத்தகம்.

மணி : அப்பா, நாலடியார் என்னும் புத்தகத்தை இயற்றியவர் யார்? அஃது எதைப்பற்றிக் கூறுகிறது?

தந்தை : நாலடியார் என்பதும் ஒரு நீதி நூலே. நான்கு அடிகளேயுடைய பாடல்கள் என்பது நாலடியார் என்பதன் பொருள். இந்நூல் நானூறு பாடல்கள்

கொண்டது. இதுவும் மிகவும் சிறந்த நூலேயாகும். பல பெரியோர்கள் பாடிய நீதிப் பாடல்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு நூலாக்கி ஒருவர் வெளியிட்டார். இந்நூலும் மிகப் பழமையானதே யாகும்.

மணி : அப்பா, அதோ பெரிதாக இருக்கின்றதே! அது என்ன புத்தகம்?

தந்தை : மணி, அதுதான் **கம்பராமாயணம்**. அது கம்பரால் செய்யப்பட்டது. ஸ்ரீராமபிரானின் சரித்திரம் முதலில் வடமொழியிலேதான் எழுதப்பட்டது. கம்பர் என்னும் பெரும்புலவர் அதனைத் தமிழில் பல அழகிய பாடல்களால் மொழி பெயர்த்திருக்கின்றார். கம்பராமாயணம் பன்னிரண்டாயிரம் பாடல்களை யுடையது. அப்புத்தகத்தைப் புலவர் பலரும் பாராட்டுகின்றனர். நீ மேல் வகுப்புக்களுக்குச் சென்றால் கம்பராமாயணப் பாடல்களைப் படித்து இன்புறுவாய்.

மணி : அப்பா, அவருக்கு ஏன் கம்பர் என்று பெயர் வந்தது?

தந்தை : இளம் பருவத்தில் அவர் தம் கையில் ஒரு கம்பினை ஏந்திக்கொண்டு ஆடுமாடுகளை மேய்த்ததால் அவர் கம்பர் என்று பெயர் பெற்றார் எனச் சிலர் கூறுவர்.

மணி : அப்பா, ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தவரா இவ்வளவு பெரிய புலவரானார்?

தந்தை : ஆம். கம்பர் மிகவும் இளம்பருவத்திலேயே தம் தாய் தந்தையரை இழந்துவிட்டார். அதனால் அவர் வெண்ணெய் நல்லூர்ச் **சடையப்ப முதலியார்** வீட்டில் ஒரு வேலையாளாய் அமர்ந்தனர். சடையப்ப முதலியார் அச்சிறுவருக்கிருந்த நுண்ணறிவைக் கண்டு அவரை ஒரு தமிழாசிரியரிடம் கல்வி கற்க விட்

டனர். சிறுவராய கம்பர் அவ்வாசிரியர் சொற்படி நடந்து, அக்காலத்திலிருந்த பல அரிய நூல்களையெல்லாம் கற்றுக் 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்று பலரும் கொண்டாடும்படி பேரும் புகழும் பெற்றார். குழந்தாய், அச்சிறுவர் சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு இருந்தவர். அக்காலத்திலே அச்சுப் புத்தகங்கள் இல்லை. யாவும் பனையோலைகளிலே எழுதப் பட்டிருக்கும். மிகவும் பய பக்தியுடன் இருந்து பாடங் கேட்டால்தான் அக்காலத்து ஆசிரியர் சிறிது பாடம் போதிப்பார். இவ்வளவு துன்பங்கள் இருந்தும் தாய் தந்தையரற்ற சிறுவராய கம்பர் பல நூல்களையும் வருந்திக் கற்றுத் தம் காலத்திலிருந்த அரசர் பலராலும் போற்றப்பட்டுக் கம்பராமாயணம் என்னும் இந்தப் பெரிய நூலைச் செய்து, 'கவிச்சக்கரவர்த்தி' என்னும் பட்டத்தையும் பெற்றார்.

மணி : அப்பா, நானும் கல்வியில் கருத்து வைத்து அல்லும் பகலும் வருந்திக் கற்றால் கம்பர், திருவள்ளுவர் முதலியோரைப் போல எனக்கும் அவ்வளவு பேரும் புகழும் கிடைக்குமா ?

தந்தை : ஏன் கிடைக்காது? முயற்சி செய்தால் அவ்விதமே பெருமையை அடையலாம். குழந்தாய், இவ்வளவு தமிழ்நூல்களையும் நான் உனக்காகவே வாங்கி வைத்திருக்கிறேன். நீ இவைகளையெல்லாம் படித்து முடித்துவிட்டால் அவ்விதமே பேரும் புகழும் பெற்று நமக்கும் நம் நாட்டிற்கும் பெருமையை அளிப்பாய்.

வினா : 1. கம்பரைக் குறித்துப் பத்து வாக்கியங்கள் எழுது.
2. தொல்காப்பியரின் ஆசிரியர் யார்?

19. தமிழ்மொழி வாழ்த்து

புதிய பதங்கள் : நிறுவிய, பரிவு, நல்கிய, திறம்.

ஆதியில் தமிழினில் அரியதோர் இலக்கணம்
அமைத்தோளிர் அகத்தியர் பெயர்வாழி ;
நீதியில் நிகரற நிலவிடு திருக்குறள்
நிறுவிய வள்ளுவர் பதம்வாழி. 1

சிலப்பதி காரம்தொல் காப்பியம் சீவக
சிந்தா மணிசெய் தோர்வாழி ;
புலவர்கள் பலர் பலர் பரிவொடு பாடிய
புகழ்பெறு நாலடி யார்வாழி. 2

தந்தையின் மொழிதவ றுரகு நாதனின்
தகைமைசொல் கம்பர்தம் நூல்வாழி ;
நந்தமக் காகவே நல்வழி நீதிகள்
நல்கிய அவ்வையின் சீர்வாழி. 3

சிற்பமோ டோவியம் சீர்மிகு மருத்துவம்
செப்பிய புலவர்கள் திறம்வாழி ;
அற்புத அடியவர் அருமையிற் பாடிய
அழகொளிர் பாடலின் புகழ்வாழி. 4

நூறுநா றுயிரம் நூல்கள் இயற்றிய
நுண்ணறி வாளர்தம் வழிவாழி ;
வேறுநற் கலைபல சீருடன் வெளிவர
வேண்டிடு வோம்தமிழ் மொழிவாழி. 5

வினா : *தமிழ் நூல்களுள் ஐந்தின் பெயர் கூறு.*

20. கதைப் படம்

தவளையும் சிறுவரும் :



குறிப்பு : 1. ஒரு குட்டை - தவளைகள் - சில சிறுவர்.

2. கல்லெறியும் விளையாட்டு - தவளைகள் துயரம்.

3. தவளை - சிறுவர் சம்பாஷணை :

ஏன் கல் எறிகிறீர்கள் ?

விளையாடுகிறோம்.

நீங்கள் விளையாட நாங்கள் உயிரிழப்பதா ?

4. சிறுவர் நாணம் - வீடு செல்லல்.

5. நீதி.

இக்கதையில் அமைக்கவேண்டிய சொற்களும், சொற்றொடர்களும் : விடுமுறை - பொழுதுபோக்கு - அச்சமுற்று - ஆரவாரம் - வினவிற்று - நாணித் தலைகுனிந்து - இல்லம் ஏகினர்.

21. எறும்புகள் நமக்குக் கற்பிக்கும் நீதிகள்

புதிய பதங்கள் : மேதாவி, வாளா, ஆன்றோர்.

அருந்தொடர் : ஜீவவர்க்கம், கறடுமுருடு, இடையூறு.

மிகவும் அற்பமானவை என்று நாம் எண்ணி இகழும் சிறிய ஜீவ வர்க்கங்களுள் எறும்பும் ஒன்று. ஆனால், அதனிடமிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பல உள. எறும்புகளின் வாழ்க்கை நிலை யினைக் கூர்ந்து அறிந்து, பல மேதாவிகள் பெரிய பெரிய புத்தகங்கள் எழுதி வெளியிட்டிருக்கின்றார்கள். அத்தகைய அரிய விஷயங்களை யெல்லாம் நாம் இங்கே ஆராய வேண்டுவதில்லை. அவைகளின் சர்வசாதாரணமான ஒரு சில தன்மைகளை நாம் இங்கே கவனிக்கலாம்.

எறும்புகள் மிகவும் சுறுசுறுப்புள்ளவைகள் என்பது அனைவரும் அறிந்ததே. அவை பொழுது நன்றாகப் புலர் வதற்கு முன்பே தத்தம் தொழில்களைப் புரியத் தொடங்கி விடுகின்றன. உணவின் பொருட்டு அவைகள் செல்லாத இடங்களே இல்லை. அவை, தம் ஆகாரத்தின் பொருட்டு எவ்வளவு சிரமப்படுகின்றன என்பதை நினைத்துப் பார்ப் பதற்கு முன் நாம் அவைகளின் நிலையில் நம்மை வைத் துப்பார்க்கவேண்டும். மாணவர்களே, நீங்கள் அனைவரும் சிறு எறும்புகளின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக எண் ணிக் கொள்வீர்களானால் மிகவும் வழவழப்பாகக் காணப் படும் இடங்களெல்லாம் சிறு எறும்புகளாய உங்கள் நிலைக் குத் துருக்கல் நிறைந்த கறடுமுருடான இடங்களாகத் தோன்றும் ; சின்னஞ் சிறு குழிகள் பெரிய பள்ளத்தாக்கு

களாகவும், சிறு மண் திட்டுகள் பெரிய மலைகளாகவும், மணல் வெளிகள் கூழாங்கற்கள் நிறைந்த இடங்களாகவும் உங்களுக்குக் காணப்படும். இவ்விதமே தரையில் தேங்கி யுள்ள தண்ணீர் பெரிய ஏரிகளாகவும் குளங்களாகவும் உங்களுக்குக் காணப்படும் அல்லவா? ஆகையால், எறும்பு கள் இரை தேடப் புறப்படும்போது வழியில் எத்தனை மலை களையும், பள்ளத்தாக்குகளையும், ஏரி குளங்களையும், வெள்ளப் பெருக் கெடுத்து ஓடும் பெரிய ஆறுகளையும்,



பயங்கரமான நீர்வீழ்ச்சிகளையும் கடக்க நேரிடும் என் பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இத்தகைய இடையூறுகளை எல்லாம் அவை கடந்து பல்வேறிடங் களுக்குச் சென்று இரை தேடுகின்றன. அவை அவ் வாறு செல்லும்போது மூலை முடுக்குகளிலுள்ள எல்லாப் பொருள்களையும் தமது உணர்ச்சிக் கருவியினால், 'இது தக்கது; இது தகாதது,' என்று ஆராய்ந்து கொண்டே செல்லுகின்றன.

தாம் உண்பதற்குத் தகுதியான யாதேனும் ஒரு தானியத்தினையோ, சிறு சர்க்கரைக் கட்டியினையோ கண்டுவிடின் அவை உடனே அதனைத் தம் புற்றுக்குள் கொண்டு வந்து சேர்க்க முயல்கின்றன. அப்பண்டம் எவ்வளவு பாரமானதாய் இருப்பினும், அவை மனஞ் சலித்துச் சென்று விடுவதில்லை. ஓர் எறும்பு தன்னைக்

காட்டிலும் பல மடங்கு பருமனுள்ள ஒரு பண்டத்தைக் கண்டு விட்டால், அதை எவ்விதமேனும் தன் புற்றுக்குக் கொண்டு செல்லவே முயலும். அவ்வாறு அது முயலு வதைப் பார்த்துப் பிற எறும்புகள் வாளா இருந்து விடு வதும் இல்லை. ஓர் எறும்பினுக்குள்ள மன வலியும், முயற்சியும் ஒரு யானைக்கிருக்குமானால், அந்த யானை ஒரு பெரிய மலையினையும் பெயர்த்து விடக்கூடும். எறும்பைப் போல் பல யானைகள் ஒன்று சேர்ந்து ஒரு காரியத்தைச் சிறிதும் மனத்தளர்வின்றிச் செய்ய முயலுமானால், இவ் வுலகத்தினைப் போன்ற ஒரு பொருளினையும் புரட்டிவிடக் கூடும். ஆதலால், மெய்வருந்தி ஒற்றுமையுடன் வேலை செய்ய முயல்பவர்கட்கு இயலாத காரியம் இவ்வுலகில் ஒன்றுமேயில்லை என்பதை எறும்புகளிடம் நாம் கண் கூடாகக் காணலாம்.

எறும்புகள் யாவும் ஓர் ஒழுங்குக்கு உட்பட்டவை. 'வழியே ஏகுக; வழியே மீளுக,' என்னும் ஆன்றோர் அமுத மொழியினை நாம் எறும்புகளினிடம் நேரில் காணலாம். ஆயிரக் கணக்கான எறும்புகள் இருப்பினும் அவை கடக்க வேண்டிய இடம் அகன்று நீண்டு மிக விசாலமாய் இருப்பினும், அவை பெரும்பாலும் ஒன்றின்பின் ஒன் றாகத்தான் செல்லும். சில பிள்ளைகள் பாடசாலை மணி அடித்ததும் எவ்வளவு அவசரமாக ஒருவரை ஒருவர் தள் ளிக் கொண்டு ஒழுங்கீனமாய்ச் செல்ல முயல்கிறார்கள்! நம்மைக் காட்டிலும் எளிய எறும்புகள் அவ்வாறு புரிய முயல்வதேயில்லை. ஒரு பெரிய சேனையானது எவ்விதம் அணிவகுத்துச் செல்லுமோ, அவ்விதமே அவை பண்டங் களைச் சேகரிக்கச் செல்லும்போதும், சேகரித்த பண்டங் களைப் புற்றில் கொண்டு வந்து சேர்க்கும்போதும் ஒழுங்

காகச் செல்லுதலையே கடைப்பிடிக்கின்றன. உணவுப் பொருள்களை அடுக்கி வைத்தலிலும் அவை அவ்வொழுங்கில் தவறுவதில்லை. நாம் ஓர் எறும்புப் புற்றினை இரு பாதியாகப் பிளந்து பார்ப்போமானால், அப்புற்றில் உள்ள அறைகளின் அமைப்பும் அவைகளில் உள்ள பண்டங்களின் ஒழுங்கும் நமக்கு நன்கு தெரியவரும்.



எறும்புகள் வீரத்திலும் மிகவும் சிறந்தவை. எப்போதேனும் அவை ஒன்றோடொன்று சண்டை புரிய நேர்ந்தால் அப்போது அவை சிறந்த வீரர்களைப் போல ஒழுங்காக இருந்து சண்டை புரியும். இரு சிறுவர் சண்டை புரியும்போது அவர்களுள் ஒருவன் தமக்கு வேண்டாதவனாய் இருந்தால் பிற சிறுவர் ஒன்று சேர்ந்து அவனை அடிக்க முயலும் பழக்கம் சிறுவர்களில் சிலர்க்கு உண்டு. அவ்விதக் கோழைத்தனம் எறும்புகளிடம் இல்லை.

கட்டடம் கட்டுதற்கு நாம் எறும்புகளிடமிருந்து தான் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். எவ்வளவு உயரமாக வேண்டுமானாலும் அவை தம் புற்றுக்களைக் கட்டி முடிக்கும். நாம் ஒரு சிறு எறும்புப் புற்றினை அஃது இருந்த விடம் தெரியாதபடி அழித்து விடுவோமானால், மறுநாள் பொழுது விடிவதற்குள் அங்கே முன்னிலும் பெரிய புற்று ஒன்று இருப்பதைக் காணலாம். அவை ஒவ்வொரு மணலாக எவ்வளவு ஆழத்தில் சென்று எடுத்து வந்து பெரிய குவியலாகக் குவித்திருக்க வேண்டும் என்பதை நாம் எண்ணிப் பார்த்தால், நமக்கு அவைகளின் ஊக்கமும், உழைப்பும், ஒற்றுமையும் நன்கு விளங்கும்.

எறும்புகளிடமிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் பல உள. அவைகளை நாம் மேல் வகுப்புக்களில் விரிவாகத் தெரிந்து கொள்ளலாம். முடிவாக நாம் தெரிந்துகொள்ள வேண்டுவது யாதெனில் நமக்குப் புலி யினங்களைப் போன்று கூர்மையான நகம், பல் முதலிய ஆயுதங்கள் வேண்டா; யானையைப் போன்ற தேக வன்மையும் வேண்டா; சிங்கத்தைப் போன்ற பராக்கிரமமும் வேண்டா; மிகவும் அற்பமான சிற்றெறும்புகளுக்குள்ள ஒற்றுமை, ஊக்கம், உழைப்பு ஆகிய இவையிருந்தால், இவ்வுலகில் நம்மால் இயலாத காரியமே இராது. ஆதலால் மாணவர்களே, உங்களுக்குள் எப்போதாவது ஒற்றுமையின்மை, மனத் தளர்ச்சி, சோம்பல் முதலியன நேரின், எறும்புகளின் வாழ்க்கை நிலையினைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

வினா: 1. எறும்பினிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவைகள் யாவை?



22. பொருள் சேர்க்கும் வழி

புதிய பதங்கள் : தேறும், வருவாய்.

பொருள் சேர்ப்பதற்குத் தேனீக்களே சிறந்த வழி காட்டிகள். நமக்குத் தேன் குடங்குடமாக வேண்டுமானாலும் பணங்கொடுத்துக் கடையில் வாங்கி விடலாம். அவ்வளவு தேன் நமக்கு எங்கிருந்து கிடைக்கிறது? தேனீக்கள் ஒவ்வொரு மலரினிடமும் பறந்து சென்று சிறிது சிறிதாகக் கொண்டு வந்து சேர்க்காவிடில் நமக்குத் தேன் அகப்படுமா? நாம் பொருளையும் இவ்விதமாகவே சேர்த்தல் வேண்டும். 'எங்கேனும் புதையல் அகப்படுமா?' 'குலுக்குச் சீட்டில் பெரும் பொருள் வந்து விடுமா?' என எண்ணுகின்றவர்கள் முழுச்சோம்பேறிகளே யாவர்.

சிறுகச் சிறுகச் சேர்த்தே பெரும் பொருள் திரட்ட வேண்டும். அன்றாடம் கையில் கிடைப்பதை யெல்லாம் செலவழித்து இன்பமாய்க் காலங் கழிக்க விரும்புகின்றவர்கள் பின்னால் வருந்த வேண்டியே நேரிடும். தும்பி, வண்ணாத்திப் பூச்சி இவைகளைக் கவனியுங்கள். இவைகள் தமக்குக் கிடைக்கும் ஆகாரத்தைச் சேர்த்து வைக்க விரும்பாமல் என்றும் இவ்விதமே கிடைக்கும் என்று எண்ணி

ஆனந்தமாய்ப் பறந்து விளையாடிக் காலத்தை வீணில் கழித்து முடிவில் வருந்தி இறக்கின்றன.

கல்விப் பொருளைச் சேர்ப்பதற்கும், செல்வப் பொருளைச் சேர்ப்பதற்கும் வழி ஒன்றே. ஒரே நாளில் பி.ஏ., எம். ஏ., பரீட்சையில் தேறிவிட நம்மால் முடியாது. அவ்விதமே செல்வமும் நமக்குத் திடீரென வந்து குவிந்துவிடாது. கல்விக்கு இளமைப் பருவம் அவசியமாய் இருத்தல் போலச் செல்வப் பொருளுக்கும் இளமைப் பருவம் அவசியமே. ஆதலால் நாம் இளம் பருவத்திலிருந்தே பொருள் சேர்க்குங் குணத்தையும் விருத்தி செய்து வரல் வேண்டும்.

விசேஷ தினங்களில் சிறுவர் சிறுமியர்கட்குப் பெரியோர்கள் காசு தருதல் உண்டல்லவா? அவ்விதம் பெறும் காசுகளைப் பெரும்பாலோர் உடனே செலவு செய்துவிட விரும்புகின்றனர். அது முற்றிலும் தவறு. "நம்மிடம் ஒரு காசுதானே இருக்கிறது? இதைச் செலவு செய்யாமல் வேறு என்ன செய்வது?" என்று எண்ணுவதும் தக்கதன்று. 'ஒரு காசு பேணின் இரு காசு தேறும்' என்னும் பழமொழிப்படி பொறுமையோடு சேர்க்க முயன்றால் அச்சிறு காசுகள் சேர்ந்து முடிவில் முழு ரூபா ஆகும். இவ்விதமே ஒன்று பத்தாகவும், பத்து நூறாகவும் ஆக வழியுண்டாகும். 'நூற்றுக்குமேல் ஊற்று' என்பது பழமொழி. முதலில் பொருளை நாம் காப்பாற்ற வேண்டும்; பிறகு அது நம்மைக் காப்பாற்றும்.

"பெரிய பணக்காரச் சிறுவர்களே பொருள் சேர்த்து வைக்கலாம்; மிக்க ஏழையாகிய என்னால் இது சிறிதும் இயலாத காரியம்" என்று சிலர் எண்ணலாம். அவ்வெண்ணம் மிகவும் தவறானதே யாகும். ஒருவன் எவ்வளவு

ஏழையாக இருப்பினும் அவன் தன் சக்திக்கு இயன்ற வாறு பொருள் சேர்க்க முயலலாம். செல்வச் சிறுவர்கள் பத்து, இருபது, முப்பது என்று ரூபாக் கணக்கில் சேர்க்க முயன்ருல் ஏழைச் சிறுவர்கள் கால், அரை, ஒன்று என்னும் கணக்கிலேனும் சேர்க்க முயலலாம் அன்ரூே?

பொருள் சேர்க்கும் குணம் உங்களிடம் இருத்தல் கண்டால் உங்கள் பெற்ரூேர்கள் உங்களுக்கு அவ்வப் போது காசு கொடுத்துதவவே விரும்புவார்கள். எதுவும் முதலில் சிரமமாகத்தான் இருக்கும். பிறகு அதுவே உங்களுக்கு இயற்கைக் குணமாகிவிடும். எப்படியாவது வருந்தி ஐந்து ரூபா அல்லது பத்து ரூபா சேர்த்து விடுங்கள். பிறகு அப்பணத்தை நீங்கள் செலவு செய்யவே விரும்ப மாட்டீர்கள். மேன்மேலும் சேர்க்க வேண்டும் என்றே உங்களுக்கு எண்ணம் உண்டாகும்.

பணஞ் சேர்க்கும் விஷயத்தில் மட்டும் நாம் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. சிலர் பணஞ் சேர்க்க விரும்பிப் பெரிய லோபிகளாகி விடுகிருர்கள். அவர்கள் உயிர் போவதா இருந்தாலும் பிறருக்கு ஒரு காசும் உதவுவதில்லை; அப்பணத்தைத் தாங்களும் அனுபவிக்க விரும்புவதில்லை. வரவுக்குமேல் கடன் வாங்கிச் செலவு செய்தல் எவ்விதம் தகாதோ அவ்விதமே உலோபத்தனமும் நமக்குச் சிறிதும் இருத்தல் கூடாது. வருவாயிற் கால் வழங்கி வாழ்தல் வேண்டும் என்பது பெரியோர் கொள்கை. அதாவது நமக்கு நாலு காசு கிடைக்குமானல் அதில் ஒரு காசினைப் பிறருக்கு உதவுதல் வேண்டும்; ஒரு காசினைச் சேர்த்து வைத்தல் வேண்டும்; மிகுந்த இரு காசுகளை நாம் செலவழித்துக் கொள்ளலாம். இந்தக் கணக்கின்படியே நாம் நமக்குக் கிடைக்கும் பொருளைப் பயன் படுத்த வேண்டும்.

பொருள் சேர்க்க விரும்புகின்றவர்கள் சிக்கனமாக இருத்தலும் அவசியமே. சிக்கனத்திற்கும் உலோபத்தனத்திற்கும் பெரிதும் வித்தியாசம் உண்டு. தாமும் அனுபவியாமல் பிறர்க்கும் உதவாமல் இருப்பவர்கள் உலோபியாவர். சிக்கனக்காரர் எதிலும் ஓர் அளவாக இருப்பர். 'நாளைக்கு என்செய்வது!' என எண்ணிப்பார்த்தல், 'இது நமக்கு அவசியந் தானா?' என ஆராய்தல் முதலியன சிக்கனத்தின் குணங்களாகும். ஒரு காசு கொடுத்து ஓர் அழுகிய பழத்தை வாங்கித் தின்று அதனால் அடைந்த நோயின் பொருட்டுப் பல ரூபாக்கள் செலவு செய்ய முயல்வது சிக்கனமாகாது.

முடிவாக நாம் கவனிக்க வேண்டியது கடன் படாதிருத்தலே ஆகும். கடன் படுவதால் வரும் துன்பத்தை விளக்குதற்குக் "கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என வரும் கம்பராமாயணப் பாடலின் அடி ஒன்றே போதியதாகும். சேர்த்து வைக்கும் குணமுடையோருக்குப் பிறரிடஞ் சென்று கடன் வாங்க வேண்டிய அவசியம் பெரும்பாலும் நேருவதில்லை. எனினும் சில எதிர்பாராத விஷயங்களில் எத்தகைய செல்வந்தரும் பிறர் தயவைத் தேட வேண்டியவராகின்றனர். ஆனால் தாம் வாங்குங் கடனைத் திரும்பிக் கொடுக்க வழியறியாமல் இருப்பவர்கள் கடன் வாங்க முயலுதல் பெருந்தவறான செய்கையே யாகும். மாணவர்களே, நீங்கள் இவைகளை எல்லாம் நன்கு கவனித்துப் பொருள்சேர்க்கும் பழக்கத்தை விருத்தி செய்து இவ்வுலகில் இன்பமாக வாழ்வீர்களாக.

வினா: 1. கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான்—யார்? எப்போது?



23. காட்டு மிருகங்கள்—I

புதிய பதங்கள் : அவா, சமர்த்து.

அருந்தொடர் : வரலாறு.

இளம்பூரணன், பிராணிகள் சம்பந்தமான பல சித்திரப் படங்களையுடைய புத்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் தம்பியாகிய பரி மேலழகனும், தங்கைமாராய கோமளமும், கமலமும் அப் புத்தகத்திலுள்ள படங்களைப் பார்க்கவும், அப்படங்களின் வரலாற்றை அறியவும் அவாக்கொண்டு அவன் அருகே வந்து அமர்ந்தார்கள்.

"அண்ணு, இதோ மிக்க உயரமாக இரண்டு மிருகங்கள் இருக்கின்றனவே! இவைகளின் பெயர் என்ன?" என ஆவலுடன் வினவினுள் கோமளம்.

"இம் மிருகத்தின் பெயர் ஒட்டைச் சிவிங்கி என்பது", என்ருன் இளம்பூரணன்.

"அண்ணு, இந்த ஒட்டைச் சிவிங்கி மனிதரைக் கொன்று தின்னுமா?" என விரைந்து வினவினுன் பரிமேலழகன்.

"தம்பி, இம்மிருகம் சாக பக்ஷிணி. இது மாமிசமே தின்னுது," என்று சொல்லிக்கொண்டே இளம்பூரணன் அப்புத்தகத்தின் அடுத்த பக்கத்தைப் புரட்டினுன்.

உடனே கமலம், "அண்ணு, பருத்த பன்றிபோல் மூக்கின்மேல் ஒரு கொம்புடன் இருக்கும் இந்த மிருகத்தின் பெயர் என்ன?" என ஆர்வமுடன் இளம்பூரணனை வினவினுள்.

இவர்கள் இவ்விதம் பலப்பல கேள்விகள் கேட்பதை அறிந்த இளம்பூரணன், அப்புத்தகத்தில் உள்ள படங்களைக்கொண்டே அப்பிராணிகளின் தேக அமைப்பு, வாழ்க்கை விநோதம் முதலியவைகளைச் சுருக்கிச் சொல்லலாயினுன்.

இளம்பூரணன்: ஒட்டைச் சிவிங்கி இவ்வுலகில் உள்ள எல்லாப் பிராணிகளிலும் மிகவும் உயரமுடையது. இதன் உயரம் சுமார் பதினேழு அல்லது பதினெட்டடி இருக்கும். இது ஒட்டகத்தின் உடலமைப்பினையும், அவ்வுடலில் சிறுத்



தைக் கிருப்பதுபோன்ற புள்ளிகளையும் பெற்றிருப்ப

தால் இதற்கு இப்பெயர் வழங்குவதாயிற்று என்று சொல்லலாம். இதன் கழுத்தும் கால்களும் மிகவும் நீண்டிருப்பதால் இது அதிக உயரமாக உள்ள மரங்களின் இலே தழைகளேயும் சிறிதும் சிரமமின்றி அருந்தும். இதோ இந்தப் படத்தைப் பாருங்கள்.

பரிமேலழகன் : அண்ணு, இது ஏன் தன் முன்னங்கால்களேப் பரப்பிக் கொண்டு தண்ணீர் குடிக்கின்றது ?

இளம்பூரணன் : தம்பி, ஆம்; இது அப்படித்தான் குடிக்கும். ஒட்டைச் சிவிங்கிக்குப் பின்னங் கால்களே விட முன்னங்கால்கள் உயரமாய் இருத்தலேப் படத்தில் பார். அதனுல்தான் இது தன் முன்னங்கால்களே அகலமாகப் பரப்பிக் கொண்டு தண்ணீர் குடிக்கிறது.

கோமளம் : அப்படியானுல் இது எவ்விதம் நடக்கும் ?

இளம்பூரணன் : தங்கையே, இது நடப்பதும் ஓடுவதும் பார்ப்பதற்கு மிகவும் விநோதமாக இருக்கும். இது ஓடும் போது தன் பின்னங்கால்களேச் சேர்த்து முன்னங் கால்களுக்கு இடையிலும் பக்கங்களிலும் வைத்துத் தாவிச் செல்லும். அப்போது அதன் நீண்ட கழுத்து இருபுறங்களிலும் மாறி மாறிச் சாயும்; இதன் வால் சுருண்டு முதுகின்மேல் பதிந்து கிடக்கும். ஆனுல் இதன் ஓட்டத்தை வெல்ல எந்தப் பந்தயக் குதிரையாலும் முடியாது. வாயுவேகம் மனேவேகம் என்று சொல்லுகிருர்களே—அவ்வளவு வேகத்துடன் இது ஓடும்.

கமலம் : அண்ணு, இது ஏன் அப்படி ஓடுகின்றது ?

இளம்பூரணன் : அப்படி ஓடாவிட்டால் இது தன் பகைவரிடமிருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது ?

இதற்குச் சிங்கம் புலி முதலியவைகளைப்போலக் கூர்மையான நகம், பல் முதலியன இல்லை யல்லவா?

கமலம் : அண்ணு, சிங்கத்தின் படத்தை எனக்குக் காட்டுங்கள். அதை நான் பார்க்கவேண்டும்.

இளம்பூரணன் : கமலம், இதுதான் சிங்கத்தின் படம். இங்கே



ஆண் பெண் ஆகிய இரு சிங்கங்களும், அவைகளின் குட்டிகளும் இருக்கின்றன பார். ஆண் சிங்கத்துக்குப் பிடரி மயிர் உண்டு; பெண் சிங்கத்திற்குப் பிடரி மயிர் இல்லை.

கோமளம் : அண்ணு, சிங்கத்தை **மிருகேந்திரன்** என்கிருர்களே அது ஏன்?

இளம்பூரணன் : ஒரு சிறந்த அரசனுக்கு இருக்கவேண்டிய தைரியம், வலிவு, பெருந்தன்மை முதலிய யாவும் சிங்கத்திற்கு அமைந்திருக்கின்றன. காட்டில் உள்ள எல்லா மிருகங்களுக்கும் சிங்கத்தைக் கண்டால் அச்சந்தான். சிங்கம் சுமார் ஏழடி நீளமுள்ளது. அதன் நிறையோ ஏறத்தாழ ஐந்நூறு பவுன் இருக்கும்.

கமலம் : அண்ணு, நம் ஊருக்குப் பக்கத்திலே காடு இருக்கிறதே! அங்கே சிங்கம் இருக்குமா?

இளம்பூரணன் : அங்கே சிங்கம் இருக்காது; புலி இருக்கலாம். இந்தியாவிலே சிங்கம் அகப்படுவது மிகவும் அருமை;

ஆப்பிரிக்காவிலே இருக்கின்றன. சிங்கம் பெரும் பாலும் மணல் வெளியுள்ள பாதைகளின் இடை யிலும், சமவெளிகளிலுள்ள உலர்ந்த கோரைப் புற் களின் மத்தியிலும் வசிக்கும். அதன் நிறமும் அது வசிக்கும் இடத்தை யொட்டி மணல்போன்ற பழுப்பு நிறமாகவோ அன்றி உலர்ந்த கோரைப் புல் நிற மாகவோ இருக்கும். அது இரவில் இரைதேடப் புறப்படும்போது தலையைத் தாழ்த்தி வாயைத் தரைக் கருகில் வைத்துக் கர்ஜிக்கும். அந்தக் கர்ஜனையைக் கேட்டதும் நெடுந்தூரத்தில் புதரில் பதுங்கியிருக்கும் மிருகங்களெல்லாம் பயந்து நாலா பக்கங்களிலும் ஓட ஆரம்பிக்கும். அப்படி ஓடுகையில் சில மிருகங்கள் சிங்கம் இருக்கும் இடத்திற்கே வந்துசேர்வதும் உண்டு. அப்போது சிங்கம் அவைகளின் மேல்பாய்ந்து அவை களைக் கொன்று தின்றுவிடும்.

கோமளம் : அண்ணா, புலி வந்தால் சிங்கம் அதைக் கொன்று தின்று விடுமா ?

இளம்பூரணன் : புலி சிங்கத்தைக் கண்டால் அஞ்சியே ஓடி விடும். சிங்கமும் புலியினைப் பெரும்பாலும் எதிர்க்கச் செல்வதில்லை. மாமிச பக்ஷிணிகள் அநேகமாய்ச் சாக பக்ஷிணிகளையே தின்ன விரும்பும். நீர் யானை, வரிக்குதிரை, ஒட்டைச் சிவிங்கி, கறுப்பு மான் இவை கள் சிங்கத்திற்கு மிகவும் விருப்பம்.

கமலம் : அண்ணா, புலியைக் குறித்துச் சிறிது சொல்லுங் கள். எங்களுக்கு நாளைக்கு அதைப்பற்றித்தான் பாடம் நடக்கப்போகிறது.

இளம்பூரணம் : புலி சிங்கத்தைவிடக் கொடூரமான தோற்ற முடையது. இது சுமார் ஆறடி நீளமும், நானூறு பவுன்

நிறையும் உள்ளது. பதுங்கியிருந்து வேட்டை யாடுவதில் புலி சிங்கத்தைப் பார்க்கிலும் சமர்த்துடையது. சிங்கம் தனக்குப் பசி நீங்கி விட்டால் மிருகங்களைக் கொல்லாது. புலிக்கோ அந்தப் பெருந்தன்மை சிறிதும் இல்லை. சிங்கம், புலி இவை யாவும் பூனை யினத்தைச் சேர்ந்தவையே, ஆனால் சிங்கத்துக்குள்ள ஆண்மையும் வீரமும் புலிக்கும் பூனைக்கும் இல்லை. பெரும்பாலும் புலி மனிதரைக் கண்டால் ஓடிவிடவே முயலும். எதிர்பாராத விதமாக, மனிதன் நேரில் அகப்பட்டுக் கொண்டால் அவனை அடித்துக்கொன்று தின்றுவிடும். ஒரு முறை மனிதனைத் தின்ற புலி பிறகு மனிதரையே கொன்று தின்ன முயலும்.



'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்பது உண்மையே. ஆனால் அது பெரும்பாலும் நீண்ட கோரைப் புல் முளைத்து அடர்ந்துள்ள இடங்களிலேதான் பதுங்கி யிருக்கும். அப்போது அது இருப்பதே நம் கண்களுக்குத் தெரியாது. ஏனெனில் அதன் நிறம் அது இருக்கும் இடத்திற்குத் தகுந்தபடி அமைந்திருக்கிறது. புலிக்கும் சிங்கத்திற்கும் மரம் ஏறத் தெரியாது. ஆனால் இவை இரண்டும் தண்ணீரில் நன்றாக நீந்தும். புலி வங்காளத்தில் அதிகமாக உண்டு. சீனா, ரெஷியா முதலிய தேசங்களிலும் புலி காணப்படும்.

24. காட்டு மிருகங்கள்—II

புதிய பதங்கள் : இணைத்தல், தாக்கும், திறமை.

அருந்தொடர் : பூரண சுதந்திரம், சாகபக்ஷிணி.

கோமளம் : அண்ணா, கல்யானை என்கிறீர்களே ! அது எது ? அதைப்பற்றிச் சிறிது சொல்லுங்கள்.

இளம்பூரணன் : இந்தப் படத்தைப் பாருங்கள். இதுதான் கல்யானை. இதற்கு இரும்பு யானை என்று பெயர்



வைத்திருந்தாலும் பொருந்தும். இதன் தோல் அவ்வளவு தடித்திருக்கும். இவ்வளவு வலிவுள்ள இந்தப் பிராணியும் சாக பக்ஷிணியே. இது ஆப்பிரிக்காவில் அதிகமாகக் காணப்படுகிறது. இதன் மூக்கின்மேல் இரண்டு கூர்மையான கொம்புகள் உண்டு. அவைகளில் முன் கொம்புதான் நீளமாக இருக்கும். ஆடும் பல்லை எவ்விதம் அசைக்க முடியுமோ அவ்விதமே இத்தக் கொம்புகளையும் சிறிது அசைக்க முடியும். ஏனெனில் அவை அதன் மண்டையோட்டு

எலும்புடன் இணைக்கப்பட்டில்லை. இவைகளால் இது பகைவர்களைக் குத்தித் தாக்கும். நன்ருக வளர்ந்த கல்யாணை சுமார் பன்னிரண்டடி நீளமும், ஆறரையடி உயரமும் இருக்கும். இவ்வளவு பெரிய பிராணிக்கு ஒருவிதச் சிறிய பறவைகளிடத்தில் மிகவும் நட்பு உண்டு. அதன்மேல் இரண்டு சிறிய பறவைகள் இருப்பதைப் படத்தில் பாருங்கள். ஒன்று அதன் முதுகின்மேல் அமர்ந்திருக்கின்றது. மற்ருென்று அதன் முகத்துக்கு அருகே சிறிதும் பயமின்றி இருக்கின்றது. இப் பறவைகள் சிட்டுக் குருவிகளை விடச் சிறிது பெரியவை. இவைகட்குக் கல்யாணை யின் உடல் முழுதும் குதித்துச் செல்லப் பூரண சுதந் திரம் உண்டு. கல்யாணையின் தடித்த தசை மடிப் புக்களிலுள்ள புழு பூச்சிகளைக் கொத்தித் தின்பதற்கே இப் பறவைகள் அங்கே யிருக்கின்றன. இப் பறவை களால் கல்யாணைக்கு மற்றுமோர் உதவியும் உண்டு. வேட்டைக்காரர்கள் துப்பாக்கியுடன் வந்தால், இப் பறவைகள் கல்யாணையின் முகத்தருகே சென்று தம் இறக்கைகளைப் படபடவென்று அடித்து எச் சரிக்கை செய்யும்.

இவ்விதம் கூறிக்கொண்டே இளம்பூரணன் தன் புத்தகத்தில் இரண்டொரு பக்கம் தள்ளினன். அங்கே பலவிதக் குரங்குகளின் படத்தைக் கண்ட பரிமேலழகன், “அண்ணு-அண்ணு, குரங்குகளைக் குறித்தும் சிறிது சொல்லுங்கள்” என்று ஆவலோடு வினவினன்.

இளம்பூரணன் : சிங்கம், புலி முதலியன எவ்விதம் பூனை இனத்தைச் சேர்ந்தனவோ அவ்விதமே குரங்கு மனி தன் இனத்தைச் சேர்ந்தது. மனிதன் என்பவன்

ஓர் உயர்தரக் குரங்கு என்றுகூடச் சொல்லிவிடலாம். எல்லாக் குரங்குகளும் உருவ அமைப்பில் பெரும் பாலும் மனிதனைப் போன்றே இருக்கின்றன. குரங்குகளுள் பலவிதமுண்டு. அவைகளுள் மூன்றுவிதக் குரங்குகள்தாம் மனிதனை மிகுதியும் ஒத்திருக்கின்றன. அவையாவன : 1. **கொரில்லா** என்னும் மனிதக் குரங்கு, 2. **உராங் உடான்** என்னும் வாலில்லாக் குரங்கு. 3. **சிம்பான்சி** என்னும் கருங்குரங்கு.



இதோ படத்தைப் பாருங்கள். இது தான் மனிதக் குரங்கு. நன்ருக வளர்ந்த மனிதக் குரங்கு ஆறடி உயரமும், ஐந்நூறு பவுன் நிறையும் உள்ளதாக இருக்கும். இவ்வளவு பெரிய உடலுள்ள இதற்குத் தலை மூளை மிகவும் சிறியது. மனிதனுடைய மூளை நாற்பத்தெட்டு அவுன்ஸ் நிறையுள்ளது. ஆனல் இதனுடைய மூளையோ இருபது அவுன்ஸுக்கு மேற்படுவதில்லை. இது மிகவும் வலிவுடையது. பத்து மனிதர்கள் சேர்ந்தாலும் இதனை வெல்ல முடியாது. இது ஆப்பிரிக்காவில் உஷ்ணம் மிகுந்த காடுகளில் கூட்டங் கூட்டமாக வாசஞ் செய்யும்.

வாலில்லாக் குரங்கு மனிதக் குரங்கினும் சிறியது. இதன் உடலும் தலையும் பருத்திருக்கும்; கால்கள் குட்டை

யாக இருக்கும். ஆனால் கைகளோ மிகவும் நீளமானவை.



இது அறிவுடைய பிராணி. இதனை நாம் அன்பாக வளர்த்தால் நம்மிடம் மிகவும் பிரியமாக இருக்கும். இது சுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளில் காணப்படும்.

கருங்குரங்கு முன் கூறிய இருவகைக் குரங்குகளிலும் மிகவும் சிறியது. சுமார் நான்கடி உயரமும், நாற்றெழுபது பவுன் நிறையுமுள்ளது. மற்றக் குரங்குகளைவிட இதற்கு அறிவு மிகுதியும் உண்டு. இது விளையாட்டிலும், குறும்புத் தனத்திலும் மிகவும் பிரியமுள்ளது; மனிதன் செய்பவைகளையெல்லாம் செய்து காட்டும் திறமை வாய்ந்தது. இது ஆப்பிரிக்காவில்தான் மிகவும் அதிகம்.

இளம்பூரணன் இவ்வாறு கூறி முடித்ததும் பகற்போஜனத்தின் பொருட்டு அவன் தாய் அனைவரையும் அழைத்தனள். ஆதலால் அவன் அப்புத்தகத்தை மூடிவிட்டுத் தன் தம்பியையும், தங்கைமாரையும் அழைத்துக்கொண்டு பகலுணவு கொள்ளச் சென்றனன்.

25. கட்டுரைப் பயிற்சி I

பழமொழி:

I. 1. புலி பசித்தாலும் புல் தின்னுது.
2. சேற்றிலே செந்தாமரை முளைத்தது.
3. கண் கெட்டபின் சூரிய நமஸ்காரமா?
4. சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுத வேண்டும்.
5. வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?
6. கொல்லத் தெருவில் ஊசி விற்பது போல்.

இப் பழமொழிகளை அடியிற் காணும் வாக்கியங்களுக்கு ஏற்ற வகையில் பொருத்துக.

1. இந்தியாவிலே பிறந்தவர்கட்கு உழவுத் தொழிலின் பெருமையைக் கூறவேண்டுமோ?
2. பருத்தி இருக்கத் துணியில்லை என வருந்துவதேன்?
3. அரிச்சந்திரன் பல துன்பங்கள் அடைந்தும் பொய் பேசவில்லை.
4. பிரகலாதன் இரணியனுக்கு மகனுய்த் தோன்றினன்?
5. கல்வி கற்பதற்குத் தேகப் பயிற்சி அவசியம்.
6. பரீட்சையில் தவறியபின் ஒரு மாணவன் படிப்பில் ஊக்கங் கொண்டான்.

II. கீழ் வரும் பழமொழிகட்குத் தக்கபடி வெவ்வேறு வாக்கியங்கள் எழுதுக.

1. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது.
2. நிறை குடம் நீர் தளும்பாது.
3. பானையில் இருந்தால் அகப்பையில் வரும்.
4. சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.
5. குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொண்டதுபோல்.

26. உலகத்தோடு ஒத்துவாழ்

புதிய பதங்கள் : கொச்சை, புலமை, கழறுதல், குழுமி, பணித்தார், விதி, உவகை.

அருந்தொடர் : பிழையற, வாக்களித்தல், தலைப்படுதல், கற்று, கொணு, ஈமக்கடன்.

ஒரு தமிழாசிரியரிடம் சில மாணவர்கள் தமிழ்ப்பாடம் படித்து வந்தார்கள். அவர்கட்குத் தம் தாய்மொழியாகிய தமிழின்மீது விருப்பம் அதிகம். தாய் மொழியை நன்கு கற்ற பின்னரே பிறமொழிகளைக் கற்க முயலவேண்டும் என்று அவர்கள் எண்ணினர்கள். அவர்கள் விருப்பப் படியே அந்தத் தமிழாசிரியர் அவர்கட்கு அறப்பளீச்சுர சதகம், அரிச்சந்திர புராணம், நாலடியார், திருக்குறள், பாரதம், கம்பராமாயணம் முதலிய நூல்களைப் பாடம் சொல்லிக்கொடுத்து வந்தார்.

ஒருநாள் அவ்வாசிரியர் அவர்கட்கு நன்னூல் என்னும் இலக்கண நூலைப் போதித்துக் கொண்டிருந்தார். பாடம் முடிந்ததும் அவர்கள் பொழுதுபோக்காகத் தமக்குள்

விநோதமாய் ஏதேதோ பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் பேச்சில் சொற்பிழை வாக்கியப் பிழை முதலிய பிழைகள் மலிந்திருக்கக் கண்ட அவ் வாசிரியர், "பிள்ளைகளே, நீங்கள் இலக்கண இலக்கியங்களை யெல்லாம் பிழையறக் கற்றும் யாது பயன்? கற்ற வண்ணம் நடக்க வேண்டாவா? உங்கள் பேச்சில் இலக்கணப் பிழைகள் பெரிதும் காணப்படுகின்றனவே! கல்வி யறிவில்லாதவர்கள் கொச்சையாகப் பேசுவது இயல்பு. இலக்கணம் கற்கும் நீங்கள் இனியேனும் பிழையின்றிப் பேசப் பழகுங்கள்," என்று அவர்கட்கு நன்மதி புகட்டினர். அந்த மாணவர் களும் இனி அவ்விதமே பேசப் பழகுவதாக வாக்களித்துச் சென்றனர்.

பிழையின்றிப் பேசுதல் என்பது அந்த மாணவர் களுக்கு முதலில் சிறிது கடினமாகவே இருந்தது. நாள் செல்லச்செல்ல அவர்கள் அனைவரும் இலக்கணப் பிழை சிறிதும் இன்றிப் பேச ஆரம்பித்து விட்டனர். அவர்கள் திருத்தமாகப் பேசுதல் கண்டு அந்தத் தமிழாசிரியர் மிகவும் மகிழ்வு கொண்டனர்.

மாணவர்கள் அவ்வளவோடு நில்லாது மேலும் மேலும் தங்கள் இலக்கணப் புலமையைக் காட்டத் தலைப்பட்டனர். அம்மாணவர், "இந்தப் பசுவினைப் பாருங்கள்," என்று கூற விரும்பவில்லை; "இவ்வாவினைப் பார்மின்," என்றே இயம்புவர்; கன்றையுடைய பசுவினைக் 'கற்று' என்றே கழறுவர்; நல்ல நீர் கொண்டுவா, என்பதற்கு 'நன்னீர் கொணு,' என்பர். அவர்கள் இவ்விதம் பேசுதலைக் கண்ட ஆசிரியர் அவர்கள்மீது யாதும் குறை கூறவில்லை: தமிழில் நல்ல புலமை பெறுதற்கு இஃது ஓர் நற்பழக்கமே என அவர் எண்ணினர்.

ஒரு நாள் அந்த மாணவர்களுள் ஒருவனுன **மார்த் தாண்டன்** என்பவன் பாடம் கேட்க ஆசிரியரிடம் வரவில்லை. ஆதலால், அவனை அழைத்து வருவதற்கு ஆசிரியர் ஒரு மாணவனை அவன் வீட்டுக்கு அனுப்பினர். மார்த்தாண்டன் தாய் அன்று காலை மார்பு நோயினல் வருந்தித் திடுமென இறந்தனள். மார்த்தாண்டனுக்கு அப்போது மிகுதியும் துயரம் உண்டாயிற்று. அவன், "அம்மாடி! அம்மாடி!" என்று கூவி, நிலத்தில் புரண்டு அழுதிருப்பான். படித்தவர்கள் ஒழுங்கீனமாக நடத்தல் தகாது என்ற காரணத்தால் அவன், 'என்றாயே—என்றாயே,' என்று வருந்திக்கொண்டிருந்தான். மார்த்தாண்டனை அழைத்துச் செல்ல வந்த மாணவன் தன் தோழன் தாய் இறந்து கிடத்தலையும், தன் தோழன் "என்றாயே" என்று அழுதலையும் கண்டான். "என் + தாய் என்பது என்றாய் என ஆதலால் என்தோழன் 'என்றாயே' என்று அழுகின்றான். இவள் எனக்கு என் + தோழன் + தாய் ஆவள்; ஆதலால், நான் '**என்றோழன் றாயே**' என்று கூறி வருந்துதல் வேண்டும்," என வந்த மாணவன் கருதினன்.

மார்த்தாண்டனை அழைத்து வரச் சென்ற மாணவனும் வராதது கண்ட ஆசிரியர், மற்றொரு மாணவனுன **மணிவண்ணனை** அனுப்பினர். மணிவண்ணன் மார்த்தாண்டன் வீட்டுக்கு விரைந்து சென்றான். மார்த்தாண்டன் தாய் இறந்து கிடத்தலையும், மார்த்தாண்டன் 'என்றாயே' என்று அழுதலையும், அவன் தோழனாகிய **தாண்டவராயன்**, 'என்றோழன்றாயே!' என்று வருந்துதலையும் கண்ட மணிவண்ணன், '**என் றோழன் றோழன் றாயே!**' என்று கதறி அழ ஆரம்பித்தான். மணிவண்ணன் தாண்டவராயனுக்குத் தோழன், தாண்டவராயனல் மணிவண்ணன் மார்த்தாண்ட

னுக்குத் தோழனானன். ஆதலால் 'என் றோழன் றோழன் றாயே,' (என் + தோழன் + தோழன் + தாயே) என்று மணி வண்ணன் அழுதான்.

நெடுநேரமாகியும் அந்த இருமாணவருள் ஒருவனே னும் திரும்பிவராதது கண்ட ஆசிரியர், தாமே மார்த்தாண் டன் வீட்டை அடைந்தார். அங்கே மார்த்தாண்டன் தாய் உயிர் துறந்ததன் காரணமாக, 'என்றாயே!' என்றும் 'என்றோழன்றாயே' என்றும், 'என்றோழன்றோழன்றாயே!' என்றும் மாணவர் மூவரும் அழுதலையும், அந்த விநோதத் தைக் காணப் பலர் குழுமியிருத்தலையும் ஆசிரியர் கண்டார். அம்மாணவரின் அறியாமையினை அறிந்த ஆசிரியர், அப்போது மிகுதியும் மனம் வருந்தினார். பிறகு அவர் அம்மூவரையும் தேற்றி, இறந்தோர்க்குச் செய்ய வேண்டிய கடன்களைச் செய்து முடிக்கப் பணித்தார்.

மார்த்தாண்டன் தன் தாய்க்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்கள் பலவும் செய்துமுடித்ததும் வழக்கம்போலப் பாடம் கேட்க ஆசிரியன் இல்லம் அடைந்தான். மணி வண்ணன், தாண்டவராயன் முதலியோரும் அவ்விதமே வந்திருந்தனர். அப்போது ஆசிரியர் அவர்களை நோக்கி, "மாணவர்களே, ஒருவன் எவ்வளவு கற்றிருந்தாலும் உலகத்தோடு ஒத்து வாழத் தெரிந்திருத்தல் வேண்டும். நம் பெரியோர்கள், சொற்களை வழக்கு, செய்யுள் என இரண் டாகப் பிரித்திருக்கின்றார்கள். வழக்கு என்பது பேசு வதற்குப் பயன்படும் வார்த்தைகளைக் குறிக்கும். செய்யுள் என்பது நூல் எழுதுதற்கே பயன்படும் வார்த்தைகளைக் குறிக்கும். மயில், கிளி என்பன பேசுதற்குப் பயன்படும் வார்த்தைகள். மஞ்ஞை, தத்தை என்பவை செய்யு

ளுக்கே பயன்படும் வார்த்தைகள். இவ்வாறே பிற இலக்கணங்களும் அமைந்துள்ளன. சில இலக்கண விதிகள் செய்யுளுக்கே உபயோகப்படுகின்றன. அவைகளை நாம் பேச்சில் பயன்படுத்தல் இல்லை. என்+தாயே—என்றாயே என்று ஆகுதல் நியாயமாயினும், நாம் அதனைப் பேச்சில் உபயோகப் படுத்துவதில்லை. அவ்விதமே என்றோழன் என்றும் நாம் வழங்குவதில்லை. அன்றியும் அழுகை, உவகை முதலியன உண்டாகுங் காலத்து நாம் இலக்கண விதியைக் கவனிப்பதில்லை,'' எனப் பலவாறு நன்மதி புகட்டினர்.

அன்று முதல் அந்த மாணவர்கள் கல்வியில் சிறந்திருக்க முயன்றதோடு, உலக இயல்பு அறிந்து வாழவும் தலைப்பட்டார்கள்.

வினா: 1. தாய்மொழி என்றால் என்ன? உங்கட்குத் தாய்மொழி எது?

2. நாம் பிறமொழிகளை எப்போது கற்றல் வேண்டும்? உன் தாய்மொழி அல்லாத பிறமொழிகளுள் இரண்டின் பெயரினைக் கூறு.

3, அரிச்சந்திரன் கதை உனக்குத் தெரியுமா? அக்கதையினால் நீ உணர்ந்துகொண்டது யாது?

4. பாண்டவர்களின் வரலாற்றை அறிய விரும்பினால் நாம் எந்த நூலைப் படிக்கவேண்டும்?

5. பழைய தமிழ் நூல்களுள் நான்கின் பெயர் கூறு.

6. இலக்கணம், இலக்கியம்—வித்தியாசம் கூறு.

7. 'இஃது ஓர் நற்பழக்கமே'—எஃது?

8. என்றாயே, என்றோழன்—இவைகளைப் பதம் பிரித்து எழுது.

9. மஞ்ஞை, தத்தை—பொருள் கூறு.

27. புணர்ச்சி இலக்கணம்

1. மா-இலை சேர்ந்திடின் மாவிலையாம்
மாவிலை கட்டுதல் மங்கலமாம்.

2. பூ-இதழ் சேர்ந்திடின் பூவிதழாம்
பூவினிற் சிறந்தது தாமரையாம்.

3. மணியும் ஒளியும் மணியொளியே
மணிகளில் நித்திலம் மாண்புறுமே.

4. கலை-அழ கென்பவை கலையழகாம்
கலையுணர்ந் தொழுகுதல் தலையழகாம்.

5. வெண்மை நிறமே வெண்ணிறமே
வெண்ணிற உடைமிகு கண்ணியமே.

6. கருமை-பலகை கரும்பலகை
கல்வியில் வல்லமை தரும்பலகை.

7. நன்மை நூலே நன்னூலே
நன்னூல் கற்பவர் நல்லோரே.

8. செம்மை கோலே செங்கோலே
செங்கோ லுக்கெதிர் கொடுங்கோலே.

9. மண்ணும் குடமும் மட்குடமாம்
மட்குட மதற்கெதிர் பொற்குடமாம்.

10. தண்மை நீரே தண்ணீரே
தண்ணீர் காய்ந்திடில் வெந்நீரே.

கவனிப்பு : மா + இலை = மாவிலை ; பூ + இதழ் = பூவிதழ் ;
மணி + ஒளி = மணியொளி ; கலை + அழகு = கலையழகு ;
வெண்மை + நிறம் = வெண்ணிறம் ;
கருமை + பலகை = கரும்பலகை.

28. தைரியமுள்ள சிறுவன்

கதைப் படம் :

கதை எழுதுதற்குக் குறிப்புக்கள்:

நல்ல மழை—வெள்ளம்—தண்டவாளம்— இடம் விட்டு விலகி இருத்தல்—ஏழைச் சிறுவன் கவனித்தல்—புகை வண்டி—சிவப்புச் சட்டை—கொடி காட்டுதல்—வண்டி நிற்றல்—மக்கள் காப்பாற்றப் படல்—பொருள் பரிசு—சிறுவன் சந்தோஷம்—நீதி.



29. என் கடற் பிரயாணம்

கடிதம் : எண் 53, 118-ஆம் தெரு,

இரங்கூன், 15-1-37

அன்பு மிக்க தங்கை திரு. பார்வதிக்கு இறைவன் அருளால் எல்லா நன்மைகளும் உண்டாவதாக.

அருங்குணச் செல்வியே,

நலம். நின் நலத்தினையும், நம் பெற்றோர் நலத்தினையும் அறிய ஆவல். சென்ற 25-12-'36 வெள்ளிக் கிழமை யன்று சுமார் 11 மணிக்குப் புறப்பட்ட கப்பல் இரவும் பகலும் ஓயாமல் ஓடி 28-12-1936 திங்கட் கிழமை மாலை சுமார் மூன்று மணிக்கு இரங்கூன் வந்து சேர்ந்தது.

5—H.

நான் இதற்கு முன் கப்பற் பிரயாணம் செய்ததில்லை யாதலின், வெள்ளிக் கிழமையன்று இரவு வரையில் எனக்குச் சற்று மயக்கமாகவே இருந்தது. அன்று முழு வதும் நான் பெரும்பாலும் படுக்கையிலேயே இருந்தேன். ஆயினும், பொழுது சாய்ந்தவுடன் நான் கப்பலின் மேல் தட்டுக்குச் சென்றேன். எந்தப்புறம் பார்த்தாலும் கடல் தான் என் கண்களுக்குப் புலப்பட்டது. மரஞ் செடி மாளிகைகளேனும், சமுத்திரக்கரையேனும் ஒரு புறமும் தோன்றவே யில்லை. காற்றுமட்டில் குளிர்ந்து வீசிக் கொண் டிருந்தது. சிறிது நேரத்திற்குள் நிலவும் ஒளி வீச ஆரம்பித்தது. அந்நிலவின் ஒளியில் கடல் நீர் மினு மினு வென்று மின்னிக்கொண் டிருந்தது. அவ்வேளையில் சிறு சிறு மீன்கள் சட்டெனப் பறந்து, ஏழு அல்லது எட்டடித் தூரம் கடந்து, உயர எழும்பும் அலைகளில் மோதி, நீரில் மறைந்தன. இந்த விநோதத்தைப் பார்த்துக்கொண் டிருந்த நான் என்னையும் மறந்து இன்புற்றிருந்தேன். நிலவின் அழகும், நீரின் வனப்பும், குளிர்ந்த காற்றின் இனிமையும் எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்தன.

மறுநாள் சனிக்கிழமை காலை சுமார் ஐந்தரை மணிக்கு நான் உறக்கத்தினின்றும் விழித்துக்கொண் டேன். அதே சமயத்தில் மேலிருந்து ஒரு பேரோசை கேட்டது. ஆதலின், அதன் காரணம் அறிய நான் கப்ப லின் மேல் தட்டுக்குச் சென்றேன். அங்கே கப்பலில் வேலை செய்பவர்கள் கடலின் நீரைக்கொண்டு கப்பலைக் கழுவிக்கொண்டிருந்தார்கள். அவர்களை விசாரித்ததில், கப்பல் பிரயாணஞ் செய்யுங் காலங்களில் அவர்கள் அதனைத் தினந்தோறும் அவ்வாறு சுத்தம் செய்வது வழக் கம் எனத் தெரியவந்தது. இதற்குள் கீழ்த் திசையில்

வானம் சிவந்து தோன்றிற்று. சற்று நேரத்திற்கெல்லாம் சூரியன் 'தக தக' வென்று பெரிய நெருப்புப் பந்து போலக் கடலினின்றும் வெளிக் கிளம்பினன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கப்பல் வேலையாட்களுள் ஒருவன் விளையாட்டுக்குரிய சில கருவிகளைக் கொண்டு வந்து அங்கே வைத்துச் சென்றான். முதல் வகுப்பு இரண்டாவது வகுப்புப் பிரயாணிகளிற் சிலர் பொழுது போக்குக்காக அக்கருவிகளைக் கொண்டு சிறிது நேரம் விளையாடிக் கொண் டிருந்தனர். அன்று பகல் சுமார் ஒரு மணிக்குக் கப்பற் பிரயாணிகள் கூடும் ஒரு பொதுவிடத்துக்கு நான் சென்றேன். அங்கே ஓர் அறிக்கையில் கப்பல் அன்று பகல் பன்னிரண்டு மணி வரையில் முந்நூற்றறுபது மைல்கள் பிரயாணம் செய்ததென்றும் மேலும் பிரயாணம் செய்யவேண்டிய தூரம் அறுநூற்று முப்பத்தாறு மைல்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கொண்டு சென்னைக்கும் இரங்கூனுக்கும் சுமார் ஆயிரம் மைல் தூரம் உள்ளதென்றும், கப்பல் மணியொன்றுக்குச் சுமார் பதினன்கு அல்லது பதினைந்து மைல் தூரம் பிரயாணம் செய்ததென்றும் ஊகித்துக்கொண்டேன்.

அன்று பிற்பகல் மப்பும் மந்தாரமுமாக விருந்தது. காற்றும் சிறிது மும்முரமாக வீசத்தொடங்கியது. ஆகவே, கப்பலும் சற்று அதிகமாக ஆடத் தலைப்பட்டது. வழக்கமாகப் பிரயாணஞ் செய்பவர்கள் கூடத் தங்கள் அறையை விட்டு வெளியே வரவில்லை. முதன் முறையாகப் பிரயாணம் செய்தோர் பலர் மயக்கத்தினல் மிகுதியும் துன்புற்றனர். கப்பலும் வழக்கமாகச் செல்லும் வேகத்தினும் சற்று மெதுவாகவே சென்றது. அன்று இரவு பலர் உணவு கொள்ளவில்லை. ஆகவே, கப்பலிலுள்ள சாப்பாட்டுக்

கடையில் சமைத்து வைத்தசோறு முதலியனவும் சரியாகச் செலவாகாமல் மிச்சமாயின. அவை யாவும் காலையில் கடலில் கொட்டப்பட்டன. பிரயாணிகள் அனைவரும் இரவு எட்டு மணிக்கெல்லாம் படுக்கைக்குச் சென்றனர்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலை கடல் மிகவும் அமைதியாகவே இருந்தது. பிரயாணிகள் அனைவரும் வழக்கம்போல மேல்தட்டில் வந்து கூடினர். அவரவர் முன்னாள் இரவு அனுபவித்த துன்பங்களைக் குறித்து ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டனர். அன்றைப் பொழுது கழிவது அவர்களுக்குச் சிரமமாகத் தோன்றவில்லை. மறுநாள் இரங்கூன் போய்ச் சேருவோம் என்றெண்ணி அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுட னிருந்தனர். நேரம் செல்லச் செல்ல இரவு எவ்வாறு கழியுமென்றும், பொழுது எப்போது விடியுமென்றும் ஒவ்வொருவரும் எதிர்பார்த்தனர்.

பொழுதுவிடிந்தது. திங்கட்கிழமையும் தொடங்கியது. கப்பலெங்கும் ஒரே ஆரவாரமாக விருந்தது. பிரயாணிகள் தங்கள் மூட்டை முடிச்சுகளையெல்லாம் ஒழுங்காகக் கட்டி வைத்தார்கள். பின்பு எல்லோரும் கப்பலின் மேல் தட்டுக்கு வந்து இரங்கூன் எப்போது கண்களுக்குப் புலப்படும் என எதிர்பார்த்திருந்தனர். கடல் நீர் சிறிது சிறிதாக நிறம் மாறியது. காலை சுமார் எட்டு மணிக்கு நீல நிறம் மாறித் தண்ணீர் கொஞ்சங் கொஞ்சமாக வெளுக்க ஆரம்பித்தது. அது ஐராவதி ஆற்று நீர் என்றும் சிறிது நேரத்திற்கெல்லாம் கப்பல் ஐராவதியில் செல்லுமென்றும் என் புதிய நண்பர் ஒருவர் எனக்குக் கூறினார்.

சுமார் ஒன்பது அல்லது ஒன்பதரை மணிக்கு இரங்கூன் மேகம் போலக் கண்களுக்குப் புலப்பட்டது;

பின்னர் அஃது ஒரு தோப்புப் போல் தோன்றிற்று; அதன் பின்னரே அது பல கட்டடங்களுடன் கூடிய ஊராகத் தென்பட்டது. கப்பல் ஐராவதி நதியிற் செல்ல ஆரம்பித்தது. அந்நதியின் இரு புறங்களிலும் வயல்கள் காணப்பட்டன. சிற்சில இடங்களில் கட்டடங்களும் தென் பட்டன. கப்பலும் மெதுவாக ஆற்றைக் கடந்து மாலை சுமார் மூன்று மணிக்கு இரங்கூன் துறைமுகத்தை நெருங்கியது. எனினும், கப்பலைக் கரை சேர்த்துப் பிர யாணிகளைக் கீழே இறக்குதற்கு மணி நான்கடித்து விட்டது.

இரங்கூன் துறைமுகம் ஆற்றோரத்தில் இருப்பதால், அங்கே அதிகமான கப்பல்கள் தங்குவதற்கு வசதியுண்டு. இத் துறைமுகத்தில் கப்பல்கள் தங்கியில்லாத நாளே இல்லை யாம். இது மிகவும் பெரியதே யாயினும், சென்னையி லுள்ள துறைமுகத்தைப் போலப் பார்வைக்கு அவ்வளவு அழகாகக் காணப்படவில்லை.

கப்பலை விட்டிறங்கியதும் நான் வெளியே வந்து வண்டியேறி, என் நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றேன். நான் இப்போது அவர் வீட்டிலேதான் தங்கியிருக்கின் றேன். அடுத்த கடிதத்தில் நான் இரங்கூனின் சிறப் பினைக் குறித்துவிளக்கமாக எழுதுகின்றேன். நின் கடிதங் காண ஆவல். என் நலத்தினை அனைவர்க்கும் தெரிவிக்கவும்.

இங்ஙனம்:

நின் அன்புமிக்க தமயன்,

மணி.

30. முயற்சி திருவினை ஆக்கும்

அந்தகக்கவி வீரராகவ முதலியார் :

குறிப்பு : சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னே, செங்கற்பட்டு ஜில்லாவைச் சார்ந்த பொன் விளைந்த களத்தூரிலே வடுகநாத முதலியார் என்னும் வேளாளர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பிறவிக் குருடராக ஒரு புதல்வர் பிறந்தார். அப் புதல்வர் பெயர் அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பது. ஆதலால் அவர், எழுத்துக்களைத் தம் முதுகில் எழுதச் சொல்லிக் கற்றுக் கொண்டனராம். பல அரிய பெரிய நூல்களை யெல்லாம் பிறர் வாயினுற் சொல்லக் கேட்டே நெட்டுருப்போட்டுப் பெரும் புலவராக விளங்கினுர் நமது முதலியார்.

வீரராகவ முதலியார் ஒரு முறை எங்கோ சென்றிருந்து தம் இல்லம் திரும்புதல் கண்ட சிலர், "முதலியார் வருகின்ருர்" என்று அவர்தம் மனைவிக்கு அறிவிக்க, அவ்வம்மையார், "வந்தால் என்ன ? அவர் யானைக் கன்றும் வளநாடும் பெற்று வந்தாற்போல் கூறுகின்றீர்களே" என்று பரிகாசமாகச் சொல்ல, முதலியார் அதனை இகழ்ச்சிக் குறிப்பாக எண்ணி, "அப்படியானுல் யானைக் கன்றும், வளநாடும் பெற்ற பின்னரே நான் இல்லம் புகுவேன்," என்று சூளுரைத்து யாத்திரை செய்யப் புறப்பட்டனராம். வீரராகவ முதலியார், மன்னர் பலராலும் பெரிதும் பாராட்டப் பட்டார். ஈழநாட்டு அரசனுகிய பரராச சிங்கம் என்பவன் இவருக்கு யானைக் கன்றும், வளநாடும் அளிக்க அவைகளைப் பெற்ற பின்னரே இவர் இல்லம் சென்றனர் என்பர். சிலர் இவர் தம் தமயனுர் மனைவி இவ்விதம் புகன்றதாகவும், அதன்பின்னரே இவர் படித்துப் பரிசுகள் பலவும் பெற்றதாகவும் கூறுவர்.

இயற்கையிலேயே குருடராகப் பிறந்தும் தமது முயற்சியினுல் பெரும்புலவராகிப் பல அரிய நூல்களை இயற்றிய இப்பெரியார் சரிதத்தை மாணவர் என்றும் தம் மனதிற் கொண்டிருத்தல் வேண்டும்.

தொண்டைநன் னுட்டைச் சார்ந்த தொல்புகழ் களத்தூர் தன்னில்
பண்டைநற் றவத்தி னுலோர் பாலகன் பிறந்தான்; மற்றுக்
கண்டவர் கலக்க முற்ருர் கண்ணிலாக் குழவி யென்றே;
மண்டலம் புகழ வந்த மாதவச் சேயி தாமே. 1

தந்தையாம் வடுக நாதர் தநயனைக் காணுந் தோறும்
சிந்தைநைந் தயர்ச்சி கொள்வார்; செய்வகை யாதோ என்பார்;
'எந்தையே! இசா!' என்றே இறைவனை இறைஞ்சி நிற்பார்;
மைந்தனும் மாசில் வீர ராகவன் மகிமை ஓரார். 2

மந்திரம் தந்தி ரங்கள் மருத்துவம் முதலா வுள்ள
முந்தையோர் முறைகள் யாவும் முயன்றனர் வடுக நாதர்;
சுந்தரச் சிறுவன் கண்தாம் சுகமுறக் காண வில்லை!
'விந்தையோ! வினையோ!' என்றே விம்மினள் அன்னை அந்தோ! 3

விலையிலா மணியாய் வந்த வீரரா கவன்தன் பேச்சாம்
வலையினுல் அன்பால் இன்பால் வயங்குநற் செயல்கள் தம்மால்
நிலைதிரிந் திருந்த பெற்ருேர் நீங்கினர் துன்பம் அம்மா!
மலையெனும் துன்ப மேனும் மறந்திடல் இயற்கை யன்ருே? 4

எழுத்தறி பருவத் தோர்நாள் இராகவன் தன்பெற் ருேரை
அழைத்தக மலர்ந்து 'கல்வி அறிந்திட ஆசை' என்றே
வழுத்திடத் தந்தை தாயார் வாட்டம துளத்திற் கொண்டு
விழித்திட லானுர் 'என்னே விளம்புவ திவனுக்' கென்றே. 5

"அம்மையே அப்பா, என்னை அன்புடன் கல்விச் சாலைக்
கிம்மையே அனுப்பு வீரேல் என்றன்ஆ சிரியர் தம்மை
மும்முறை எழுத்தை எல்லாம் முதுகினில் எழுதச் சொல்லிச்
'செம்மையே கற்பன்" என்றே செப்பினன் செல்வ மைந்தன். 6

மதலைதன் மாற்றங் கேட்டே மகிழ்ந்தனர் தந்தை தாயர்
சுதனுமவ் வாறே சென்று சூழ்ச்சியிற் கற்க லானுன்



நிதமுமவ் வாசான் சொல்லும் நீதிநூல் நிகண்டடங் காதி
சதகநூற் புராண மோடு சாத்திரத் தொகுதி எல்லாம். 7

முதுகினில் எழுதக் கற்றும் முறைமையிற் சொல்லக் கேட்டும்
மதுகையாற் பாடல் யாவும் மனத்தினிற் பாடஞ் செய்தும்
எதுகையும் மோனை யுங்கொள் இனியநற் பாடல் யாத்தும்
சதுரராய்த் திகழ லானுர் சற்குணச் செல்வர் அம்மா ! 8

வேளிர்தம் குலத்து வந்த வீரரா கவராம் செம்மல்
காளையாம் பருவ முற்ருர், கடிமண மதுவும் பெற்ருர்,
வாளைபாய் வயல்கள் நீடு வளத்தினூர் களத்தூர் தன்னில்
கேளிரும் நட்புஞ் சூழக் கேண்மையின் வாழ்ந்து வந்தார். 9

இன்சொலும் இகை யுங்கொண் டிருவரும் வாழும் போது
நன்சொலே ஆய்ந்து கூறும் நங்கைவாய் தவறி ஓர்நாள்
புன்சொலொன் றியம்பி னுளால் புலவரும் பொறுக்க லாற்ருர்
நின்சொலே காப்பன் என்றே நீங்கினுர் ஊரை விட்டே. 10

கண்ணிலாக் குறையி னுலே காதலி அவம தித்தாள்
பெண்ணவள் பகர்ந்த வண்ணம் பெருவள நாடு வேழம்
திண்ணம்நான் கொணர்ந்த பின்னே திரும்புவன் களத்தூர் என்ருர்
எண்ணுவார் எண்ணிச் செய்யின் இயற்றலாம் யாவும் அன்றே? 11

நூலெலாம் ஆய்ந்து கற்ற நுண்ணறி வுடைய ரேனும்
மாலுலாம் உலகம் என்றும் மதிக்குமோ பொருளி லாரை ?
கோலினுல் குறிக்கொண் டேனும் கொணர்தலே தகுதி என்றே
காலினுல் நடந்து சென்ருர் கல்வியில் வீர ரானுர். 12

அந்தகர் இவர்தாம் என்றே அவமதித் திருந்தோ ரெல்லாம்
சுந்தரப் பாடல் கேட்டே சொல்லொணு வியப்பில் நின்ருர் ;
வந்தவர் புலமை கண்டே வழங்கினுர் வரிசை மன்னர்
தந்தஅப் பரிசில் பெற்றே தாமும்ஊர் திரும்பி னுரே. 13

புண்ணியப் புலவர் தாமும் புகழ்பெறு களத்தூர் வந்தே
" எண்ணிநீ உரைத்த வாறே யானையும் நாடும் பெற்றேன் ;
பெண்மணி பாராய்," என்னப் பேதைஅம் மனைவி தானும்
கண்ணினில் அருவி பாயக் கணவனார் காலில் வீழ்ந்தாள். 14

" பெற்றஇச் செல்வ மெல்லாம் பேசில்நின் மொழியா லன்றோ?
குற்றமொன் றில்லை" என்றே கூறினார் புலவர் தாமும்
கற்றனம் பலவே நீதி கவிஞர்தம் சரிதத் தாலே
முற்றும்நீர் முயன்று சொல்வீர் முழுமனப் பொறுமை கொண்டே. 15

வினா: 1. இப்பாடலில் உள்ள புதிய பதங்களையும், அருந்தொடர்களையும் வேறுவேறு எடுத்து எழுது.

2. வீரராகவ முதலியார் பிறந்த ஊர் எது? அது எங்குளது?

3. இவர் சரிதத்தால் நீங்கள் அறிந்து கொண்டவை யாவை?

4. வடுகநாதர் ஏன் அயர்ச்சி கொண்டார்?

5. இராகவன் தன் பெற்றோரை அழைத்துக் கூறியவைகளை உரைநடையில் எழுது.

6. களத்தூர் இப்பாடத்தில் எவ்வாறு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது?

7. உலகம் மதிக்குமோ பொருளில்லாரை— சந்தர்ப்பம் கூறு.

8. 96-ஆம் பக்கத்தில் உள்ளபடம் இக்கதையில் எவ்விஷயத்தைக் குறிக்கிறது?

9. குற்றமொன்றில்லை என்றே கூறினார் புலவர்—காரணம் கூறு.

31. படித்துப் பயிர்த்தொழில் செய்

இப்படங்களைக் கூர்ந்து கவனித்து ஓர் கதை எழுது.

குறிப்பு: படிப்பு - பட்டம் - உத்தியோகம் இன்மை - சிந்தனை - பயிர்த்தொழில் - பயன் பெறல்.

32. கட்டுரைப் பயிற்சி II

உவமைகள் :

I. 1. ஸ்ரீ ராமபிரானைக் கண்டதும் சீதா தேவியின் முகம் பூரண சந்திரனைப்போல் விளங்கிற்று.

சீதாதேவியின் முகத்துக்குப் பூரண சந்திரன் உபமானம்.

2. கிருஷ்ணன் கண்கள் செந்தாமரை மலர்போல் அழகாய் இருந்தன.

கிருஷ்ணன் கண்களுக்குச் செந்தாமரை மலர்கள் உபமானம்.

3. பூனையைப்போலப் பதுங்கியிருந்த சிவாஜி பகைவர்களைக் கண்டதும் புலிபோலப் பாய்ந்தான்.

பூனையும் புலியும் சிவாஜியின் குணத்திற்கு உவமைகள்.

II. கீழே வரும் வாக்கியங்களிலுள்ள உவமைகளைக் கோடிட்டுக் காட்டுக.

1. மயில்போன்ற சாயலையுடைய வள்ளி தன் குயில் போன்ற குரலினால் பாட ஆரம்பித்தாள்.

2. மலைபோன்ற தோள்களையுடைய அனுமார் யானை போன்ற கற்களைத் தூக்கிக் கடலில் எறிந்தார்.

3. நாம் குபேரனைப்போலப் பணங் குவித்துக் கர்ணனைப்போலப் பலர்க்கும் வழங்கவேண்டும்.

4. மன்மதனைப் போன்று அழகு வாய்ந்த நளனைக் கண்டதும் தமயந்தி அன்னம்போல் நடந்து வந்து அவனுக்கு மாலையிட்டாள்.

III. தருமர், கொலம்பஸ், கும்பகர்ணன், அரிச்சந்திரன், ஆந்தை, கிளிப்பிள்ளை—இப் பதங்களை அடியிற் கண்ட வாக்கியங் களில் தக்க இடங்களில் அமைக்க.

1. காலையில்——— போல் உறங்குகின்றவர்கள் பரீட்சையில் ——— போல் விழிப்பார்கள்.

2. ——— போல் சொன்னதைச் சொல்லுபவர்கள் ——— போல் புதிதாக யாதும் கண்டுபிடிக்க முடியாது.

3. ——— போல் பொறுமையும், ——— போல் வாய்மையும் உடையவர்கள் இவ்வுலகில் பேரும் புகழும் பெறுவார்கள்.

IV. மொழி, வீரம், கல்வி, குணம், வாய், பற்கள்—இப் பதங்களை அடியிற் கண்ட வாக்கியங்களில் தக்க இடங்களில் அமைக்க.

1. ஜானகி முத்துப்போன்ற ——— யும், பவளம் போன்ற ——— யும் உடையவள்.

2. நமக்குக் கம்பனைப்போல் ——— யும், விஜயனைப் போல் ——— உம் வேண்டும்.

3. பொன்போன்ற ——— உடையவர் என்றும் தேன் போன்ற ——— இயம்புவர்.

V. 1. பால்போல் வெண்மை. 2. சிங்கத்தைப்போல் ஆண்மை. 3. எறும்பைப்போல் சுறுசுறுப்பு. 4. வீமனைப்போல் வன்மை. 5. பந்தயக் குதிரை போல் வேகம்.

இவ் வுவமைகளை வெவ்வேறு வாக்கியங்களில் அமைத்து எழுது.

33. நன்மணி

புதிய பதங்கள் : **பகருவர், சால, விக்கிரகம்.**

அருந்தொடர் : **தனிச்சிறப்பு, இடைவிடாது.**

முத்து, பவளம், வைடூரியம், புஷ்பராகம், கோமேதகம், நீலம், மரகதம், பதுமராகம், வச்சிரம் ஆகிய இவைகட்கு நவமணிகள் என்று பெயர். இவைகளை நவரத்தினங்கள் எனவும் மக்கள் பலரும் பாராட்டிக் கூறுவர். இவைகளுள் முத்தும் பவளமும் கடலிலே அகப்படுவன. மற்ற மணிகள் கனிகளினின்றும் வெட்டி எடுக்கப்படுவன. முத்து, பவளம் இவ்விரண்டினுள்ளும் முத்தினுக்குத் தனிச் சிறப்பு உண்டு.

பிற மணிகளைப்போல முத்தினைச் சாணைபிடித்துச் செப்பனிடுவதில்லை. ஆதலின் இதனை **இயற்கை மணி** எனவும், **சூளாமணி** எனவும் பலரும் பாராட்டிக் கூறுகின்றனர். தூய்மையைக் குறிக்கும் வெண்ணிற வொளியும், குளிர்ந்து திகழும் தன்மையும் உடைமை பற்றி முத்தினை **நன்மணி** எனவும் பெரியோர் பகருவர். இதற்கு **நித்திலம்** என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. முத்துமாலையைக் கழுத்தில் இடைவிடாது அணிந்திருப்போரைத் தொழுநோய் முதலிய கொடிய நோய்கள் என்றும் அணுகாவாம். இத்தகைய சிறப்புக்கள் வாய்க்கப்பெற்ற முத்து என்னும் நன்மணி நமக்கு எங்கிருந்து கிடைக்கின்றது, எவ்வாறு உண்டாகின்றது என நாம் தெரிந்து கொள்வது அவசியமே யாகும்.

இருபது இடங்களில் முத்துக்கள் பிறக்கும் என்று நம் முன்னோர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். அவை வருமாறு: சங்கு, சிப்பி, நத்தை, தாமரை, நெல், நல்ல பாம்பு, பசு,

பன்றி, பாக்கு மரம், மீன், முதலை, மூங்கில், மேகம், சந்திரன், உடும்பு, கரும்பு, கொக்கு, யானை, வாழை, பெண்களின் கழுத்து. இவைகளுள் வலம்புரிச் சங்கினின்றும் பிறக்கும் முத்தே சாலச் சிறந்தது. எனினும் நத்தையினத்தைச் சார்ந்த சிப்பி என்னும் ஒரு வகைச் சீவராசியினின்று கிடைக்கும் முத்தினையே நாம் பெறுகின்றோம். ஆதலின் நாம் அதன் வரலாற்றினை முதலில் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

முத்துச் சிப்பி என்னும் சீவராசிகள் உஷ்ணப் பிரதேசத்தைச் சார்ந்த கடலின் அடிப்பாகத்திலேதான்



மிகுதியாக வசிக்கின்றன. 'நத்தை வயிற்றில் முத்துப் பிறந்ததுபோல்' என்னும் முதுமொழியினை உங்களிற் பலர் கேள்வியுற்றிருக்கலாம். நத்தை யினத்தைச் சார்ந்த முத்துச் சிப்பியினின்று முத்து உண்டாகும் விதம் மிகவும் விநோதமானதே. சிப்பி என்பது இரு கிழிஞ்சல்கள் ஒன்று சேர்ந்துள்ள வடிவத்தை யுடையது. மிகவும் மிருதுவான தசையினையுடைய இதனை அவ்விரு கிழிஞ்சல்கள் பாதுகாத்

துக்கொள்கின்றன. கடல் நீரில் கலந்துள்ள மிக நுண்ணிய பொருள்களே முத்துச் சிப்பியின் முக்கிய ஆகாரம். ஆகாரத்தின் பொருட்டு முத்துச்சிப்பி, தனக்கு வாய் போன்று அமைந்துள்ள கிழிஞ்சலைச் சிறிது திறக்கும். அப்போது ஒரு சிறு மணலோ, மீன் முட்டையோ அன்றி இவைபோன்ற வேறு யாதேனும் நுண்பொருளோ அதன் வயிற்றில் புகுந்து கொள்ளுமானல் அதனை வெளியே உமிழ்ந்துவிட அதனல் இயலுவதில்லை. மிகவும் மிருதுவான தசையினையுடைய அச்சிப்பி அப்பொருளால் தனக்கு ஊறு நேராமல் இருக்க அதன்மேல் ஒருவகைப் பசையினைத் தடவி அதனை மிருதுவாக்க முயலும். இம்முயற்சியே சிப்பியின் வயிற்றில் முத்துப் பிறத்தற்குக் காரணமாகின்றது. இவ்விதம் முத்துச் சிப்பி அந்த நுண் பொருள்மீது எவ்வளவு பசையினைத் தடவுகிறதோ அவ்வளவு பெரிய முத்தாக அப்பொருள் மாறுகிறது. இதனலேயே முத்துக்கள் உள்ளிப்பூண்டைப் போன்ற பல புரைகளை உடைத்தாயிருக்கின்றன.

கடலில் மூழ்கி முத்தெடுக்கும் தொழிலுக்கு முத்துக் குளித்தல் என்று பெயர். முத்துக் குளிப்பவர் ஒரு படகில் ஐந்தாறு பேர் விகிதம் ஏழெட்டுப் படகுகளில் ஏறிக் கொண்டு முத்துக் கிடைக்கும் இடத்தை நாடிச் செல்வர். அவர்கள் அவ்விடத்தை யடைந்ததும் ஒவ்வொரு படகினின்றும் இரண்டொருவர் ஒரு நீண்ட பாறையில் இரு முனைகளிலும் கயிற்றைக் கட்டி அதன் நடுவில் நின்று கொண்டு, மூக்கினையும் காதினையும் பஞ்சினல் மூடிக் கொண்டு தண்ணீருக்குள் இறங்குவர். அவர்கள் அவ்விதம் இறங்கும்போது பனையோலையால் முடையப்பெற்ற கூடையினையோ அன்றி வேறு வகையான பையினையோ

இடுப்பில் கட்டிக்கொண்டு கூர்மையான ஆயுதம் ஒன்றினையும் கையில் எடுத்துச் செல்வார்கள். நீரின் அடிப்



புறத்தே தங்கியுள்ள முத்துச் சிப்பிகளை அவர்கள் உடனே தம் கூடைகளில் நிரப்பிக்கொண்டு படகில் உள்ளவர்களுக்குக் கயிற்றை அசைத்து எச்சரிக்கை செய்வார்கள். படகில் உள்ளவர்கள் உடனே அக்கயிற்றை இழுத்து அவர்களைப் படகில் ஏற்றிக்கொள்வார்கள்.

இவ்விதம் முத்துச்சிப்பிகளைச் சேகரிக்கும்போது நீரில் வாழும் சுறு முதலிய கொடிய சீவராசிகள் துன்புறுத்தற்கு வருமானல் அவைகளிடம் போராடுவதற்கு அவர்கள் கையிலுள்ள ஆயுதம் பெரிதும் பயன் படுகின்றது. நீரின் அடிப்புறத்திலே ஒன்றிரண்டு நிமிடங்களுக்கு மேல் அவர்கள் இருக்கமாட்டார்கள். வெளியே வந்தபின்னரும் சிறிது இளைப்பாறிய பிறகே அவர்கள் தங்கள் வேலையை மறுபடியும் தொடங்குவார்கள்.

நம் நாட்டு முத்துக்குளிப்பாளிகள் இம்முறையினையே நெடுங்காலமாகக் கையாண்டு வருகின்றனர். கடலில் மூழ்கி முத்துச் சிப்பிகளைச் சேகரிப்பதற்கு முகமூடியுடன் கூடிய சிறந்த யந்திரங்கள் இக்காலத்தே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவைகளின் உதவியால் சிறிதும் சிரமமின்றி முத்துச் சிப்பிகளைச் சேகரித்தலைப் படத்தில் பார்க்கலாம்.



மழைத்துளியில் சிறிது முத்துச் சிப்பியின் வயிற்றில் புகுவதால் முத்து உண்டாகிறது என்பது முன்னோரது கொள்கை. அது தவறான கொள்கை என்பதை இக்கால அறிஞர்கள் நேரில் நிரூபித்துக் காட்டுகின்றனர். சீன தேசத்து அறிஞர் ஒருவர் முத்துச் சிப்பியினை உயிரோடு பிடித்து அதன் வயிற்றுள் மிகச் சிறிய புத்த விக்கிரகத்தை வைத்து மூடிவிட அந்தச் சிறு விக்கிரகம் முற்றிலும் முத்தாக மாறிவிட்டதாம். அஃது அமெரிக்

காக் கண்டத்தில் உள்ள ஓர் கண்காட்சிச் சாலையில் இப்போதும் இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

முத்து வெண்மையும் ஒளியும் உடையதாய் உருண்டு திரண்டு எவ்வளவுக் கெவ்வளவு பெரியதாய் உளதோ அவ்வளவுக்கவ்வளவு விலையில் உயரும். ஒரு முத்து அரேபியாவில் பதினொரு லக்ஷம் ரூபாவுக்கு வாங்கப்பட்டதாம்.

இலங்கையைச் சுற்றியுள்ள நீர்ப்பாகங்களிலும், பசிபிக்கு, இந்துமகா சமுத்திரங்களில் உள்ள தீவுகளுக்கு அருகிலும் முத்துச் சிப்பிகள் அகப்படுகின்றன. ஐக்கிய மாகாணத்தில் உள்ள ஆறுகளிலும் முத்துக்கள் எடுக்கின்றார்கள். எனினும் கடலில் அகப்படும் முத்துக்களே விலையேறப் பெற்றவையாகும்.

வினா: 1. நவமணிகள் யாவை?

2. நன்மணி என்பது எது? காரணம் கூறு.

3. நித்திலம் என்பதற்குப் பொருள் என்ன? இப்புத்தகத்திற்கு நித்திலவாசகம் என்று ஏன் பெயரிடப்பட்டது?

4. முத்து எவ்விதம் உண்டாகிறது?

5. முத்துக் குளிப்பவர் தம் கையில் ஆயுதம் கொண்டு செல்வது என்?

6. 2, 3, 6, 7 இவ்வேற்றுமைகட்கு இப்பாடத்தினின்று உதாரணம் தருக.

34. பிழையின்றி எழுதுதல்

ஒருவன், வெளியூரிலிருந்த தன் நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதினனும். அதில் அவன் பல விஷயங்கள் எழுதுகையில், "உங்கள் தங்கையின் நவலே உடைந்து விட்டது" என்று எழுதவேண்டியதை, "உங்கள் தங்கையின் நலே உடைந்துவிட்டது" என்று தவறுதலாக எழுதி விட்டானும். அக்கடிதத்தைக் கண்டதும் அந்த நண்பரும் அவர்தம் சுற்றத்தாரும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதார்களாம். அவர்கள் உடனே அவ்வூரிலிருந்து புறப்பட்டு வந்தபிறகே உண்மை தெரியவந்ததாம். இவ்விதமே **இரந்தான்** என்பதற்கு **இறந்தான்** என்று எழுதி விட்டாலும், **கோரல்** என்பதற்குக் **கோறல்** என்று எழுதி விட்டாலும் விஷயம் முற்றிலும் விபரீதமாகிவிடுகிறது. இரந்தான் என்றுல் பிச்சையெடுத்தான் என்றும், இறந்தான் என்றுல் செத்தான் என்றும் பொருள்படும். கோரல் என்பதற்கு விரும்புதல் என்பது பொருள் ; கோறல் என்பதற்குக் கொல்லுதல் என்பது பொருள். ஆதலால் நாம் பிழையின்றி எழுதப் பழகுதல் மிகவும் அவசியம்.

'பிழையின்றி எழுதுதல் எவ்வாறு?' என நீங்கள் வினவலாம். இதற்கு ஓர் ஒழுங்கான முறையினை வகுத்துக் கூறுதல் மிகவும் சிரமமே. எனினும் பொதுவாகக் கவனிக்கவேண்டிய சில விஷயங்களையேனும் மனதில் வைத்துக்கொண்டால் நாம் பெரும்பாலும் பிழையின்றி எழுதலாம். தங்கள் பாடத்தைக் கருத்தூன்றிப் படிக்கும் பழக்கமில்லாதவர்களே எழுதும்போது பெரிதும் பிழைபடுகின்றூர்கள். அவ்விதம் படிக்கும்போது உரத்த குரலில்

ண - ன, ள - ல, ழ - ள, ர - ற முதலியவைகளின் பேதம் விளங்கும்படி நன்ருக உச்சரிக்கவேண்டும். **கண்ணன்** என்பதைக் **கன்னன்** என்றும், **வெள்ளம்** என்பதை **வெல்லம்** என்றும் வாசிப்பவர்கள் எழுதும்போதும் அவ்வாறு தவருகவே எழுதிவிடுவார்கள்.

நம் கண்கள் ஒரு புகைப்பட யந்திரத்தைப்போல் நாம் கருத்தூன்றிப் பார்க்கும் எதனையும் நன்ருகப் படம் பிடித்து வைத்துக்கொள்கின்றன. பிறகு நாம் அதனை நினைக்கும்போது அது நம் கண்ணெதிரிலே வந்து நிற்கிறது. உதாரணமாக நீங்கள் "அறஞ்செய விரும்பு" என்னும் நீதி வாக்கியத்தையேனும், காக்கை அல்லது குருவி முதலியவைகளையேனும் ஒரு முறை நன்ருகக் கருத்தூன்றிப் பார்த்துவிட்டுப் பிறகு உங்கள் கண்களை மூடிக் கொள்ளுங்கள். நீங்கள் அதனை எவ்வளவு கவனித்துப் பார்த்தீர்களோ அவ்வளவு விளக்கமாக அது உங்கள் முன்னிலையில் வந்து நிற்கும். இந்த முறையினைக் கடைப் பிடித்தால் நாம் எழுதும்போது நமக்கு நேரும் சந்தேகங் களை யெல்லாம் இலகுவில் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

இதற்கு அடுத்தபடியாக நாம் கவனிக்கவேண்டுவது நம் கையெழுத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதலே யாகும். எழுத்துக்களை ஒழுங்குபெற எழுதுகின்றவர் பெரும்பாலும் எழுத்துப் பிழை செய்யார். கையெழுத்து அச்செழுத்துப் போன்று அழகுபெற இருத்தல் வேண்டும் என்பது கட்டாயம் அன்று. நாம் எழுதும் எழுத்துக்கள் யாவும் கூடுமான வரையில் விளக்கமாக இருத்தல் வேண்டும். சிலர் எழுதும்போது ள - ன - ற இவைகளின் வித்தியாசம் தெரிவதே இல்லை. இவ்விதமே இது 'அ' என்னும் எழுத்தோ அன்றிச் 'சு' என்னும் எழுத்தோ என்று பிறர்

சந்தேகிக்கும்படி நாம் எழுதுதல் கூடாது. சிலர் தாம் எழுதும்போது எழுத்துக்களை மிகவும் நுணுக்கிவிடுகின்ற னர். அதனால் அவர்கள் புரியும் பிழைகள் அவர்கட்கே விளங்குவதில்லை.

ஒருவன் உடையைக் கண்டு, 'இவன் மிகவும் சிக்கனக் காரன்; இவன் பெரிதும் ஆடம்பர வாழ்க்கையுடையவன்,' என்று எவ்விதம் நாம் அறிந்துகொள்ளுகிறோமோ, அவ் விதமே ஒருவன் கையெழுத்தைக் கொண்டும் 'இவன் மிக வும் அவசரக்காரன்; இவன் மிகவும் பொறுமைக் குண முடையவன்' என்பன போன்ற பல விஷயங்களை நாம் உணர்ந்துகொள்ளலாம். ஆதலால் எழுத்துக்களை ஒழுங்கு பெற எழுதுவதால் நாம் செய்யும் எழுத்துப் பிழைகளைக் கவனிக்க இடமுண்டாவதோடு நமக்குப் பல நல்ல குணங் கள் ஏற்படுவதற்கும் காரணமாகிறது. அவ்விதம் எழுதும் போது பதம் பிரித்தும் எழுதுதல் வேண்டும். அல்லாவிடின் சுக்கு மிளகு திப்பிலி என்பதைச் சுக்குமி ளகுதிப் பிலி என்று படித்தவன் கதையாய் முடியும்.

நாம் கவனிக்கவேண்டியவைகள்:

மனை	கலை	கொல்	குழவி
மணை	களை	கொள்	குளவி
மனம்	வலை	குலம்	வாழை
மணம்	வளை	குளம்	வாளை
அன்பு	புலி	கலம்	வேழம்
அம்பு	புளி	களம்	வேஷம்
தன்மை	காலை	விலக்கு	பக்ஷி
தண்மை	காளை	விளக்கு	கக்ஷி
வன்மை	தோல்	அஞ்சல்	காட்சி
வண்மை	தோள்	மஞ்சள்	ஆட்சி.

அருமை	அயர்ச்சி	அடுப்புக் கரி
வறுமை	உயர்ச்சி	காய் கறி
கருமை	அவர்க்கு	அரை யணு
கறுப்பு	அதற்கு	வீட்டின் அறை
நெருப்பு	முயற்சி	காஞ்சி புரம்
பொறுப்பு	பயிற்சி	நாட்டுப் புறம்
திரும்ப	இந்நாள்	குளக் கரை
நிறைய	நன்னாள்	இரத்தக் கறை
பெரியவர்	முந்நூறு	நெற் பொரி
சிறியவர்	நானூறு	நெருப்புப் பொறி.

இவன் ஒரு துரை மகன்.
இது கப்பல் துறைமுகம்.
ஏரி கரையின்மேல் ஏறி இறங்கு.
ஏழையைக் கண்டு மனம் இரங்கு.
நனைந்த விறகு எரியாது.
நாயைக் கல்லால் எறியாதே.
உறியில் வைத்தான் பலாப்பழம்.
உரித்துத் தந்தான் வாழைப்பழம்.
கத்தரிக் காயை அரிந்தாள்.
கறி சமைக்கவும் அறிந்தாள்,

வினா: 1. கோரல்—கோறல் வித்தியாசம் கூறு:

2. எழுத்துக்களை ஏன் நன்றாக உச்சரிக்கவேண்டும்?

3. எம்முறையினைக் கடைப்பிடித்தால் பிழையின்றி எழுதலாம்?

4. மனை-மணை, புலி-புளி, கரி-கறி இவைகளின் வித்தியாசம் விளங்க ஒவ்வோர் வாக்கியம் எழுது.

அருந்தமிழ்ச் செய்யுள்

பணம் :

பணந்தானே அறிவாகும்; பணந்தானே
வித்தையுமாம்; பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும்; பணமில்லா
தவர்பிணமாம் பான்மை சேர்வர்;
பணந்தானே பேசுவிக்கும்; தண்டலைநீள்
நெறியாரே, பாரின் மீது
பணந்தானே பந்தியுறும் குலங்கீழாக்
குப்பையிலே படுக்குந் தானே.

உழவு :

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தில் வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரஎளிதாய்ச் செய்வாரும் கேட்கில்
என்றும் உழவே இனிது.

கல்வி :

வெள்ளத்தே போகாது, வெந்தணலில் வேகாது,
வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் நிறைவன்றிக்
குறைவு றாது,
கள்ளர்க்கும் மிகஅரிது, காவலோ மிகஎளிது,
கல்வி என்னும்
உள்ளத்தே பொருள்இருக்க ஊரெல்லாம் பொருள்தேடி
உழல்வ தென்னே !

36. முறையீடு

திருவும் அறிவும் திறனும் வலிவும்
உருவும் எழிலும் உயர்நன் னடையும்
பரிவும் கொடையும் பணிவும் புகழும்
மருவும் வரம்நீ இறைவா, தருவாய். 1.

ஏழை எளியோர்க் கிரங்குங் குணமும்
ஊழைக் கடக்கும் உரமார் உளமும்
கோழைத் தனமாம் கோதில் மனமும்
பேழைப் பொருள்போல் பெரிதே தருவாய்.

சீரும் சிறப்பும் செம்பொற் குவையும்
பேரும் திகழும் பெருநல் வாழ்வும்
ஊரும் எறும்பின் ஒருமைக் குணமும்
ஏரும் நிலனும் யாவும் தருவாய். 3.

கலையின் நிறைவும் கலங்கா நிலையும்
மலையின் உயர்வும் மணியின் தெளிவும்
துலையின் நிறைபோல் துகளில் மொழியும்
தலைவா, எமக்கே தருவாய் தருவாய். 4.

வாய்மை வீரம் வண்மை முறைமை
தாய்மைத் தமிழில் தனிநற் புலமை
தூய்மை இவைதாம் தொழுவோம்தரவே
சேய்மைப் பொருளே செவிசாய்த் தருளே. 5.

37. மூதுரையும் நல்வழியும்

மூதுரை, நல்வழி ஆகிய இவ்விரண்டு நீதி நூல்களும் அவ்வையாரால் இயற்றப்பட்டன. ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலியனவும் இவ் வம்மையார் இயற்றியனவே. இவை களே அன்றி இவரால் அவ்வப்போது பாடப்பெற்ற தனிப் பாடல்களும் பல வுள. இவை யாவும் மக்கள் பலரா லும் விரும்பிப் போற்றப் படுகின்றன. இவர் பெயரை அறியாதார் தமிழ் நாட்டிலே ஒருவரும் இலர். இவரது கல்வித் திறமையைக் கண்டு இவரைச் சரஸ்வதியின் அவதாரம் என்றும் பெரியோர் புகழ்ந்து கூறுவர்.

மூதுரை :

அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 1.

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. 2.

அடக்க முடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு. 3.

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். 4.

நல்வழி :

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி. 1.

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 2.

ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளைக் கேல்என்றால் ஏலாய்—ஒருநாளும்
என்னோ அறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது. 3.

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 4.

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். 5.

கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். 6.

குறிப்பு:

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் சிற்சில வினுக்கள் பலவேறு வகைகளில் கொடுத்திருப்பதன் காரணம் அப்பலவேறு வகைகளையும் ஆசிரியர் ஒவ்வொரு பாடத்திலும் கையாள வேண்டும் என்பதே யாகும். கீழ் வரும் குறிப்புக்களையும் அவ்விதமே கொள்ளுதல் வேண்டும். ஆங்காங்கே கொடுக்கப்பட்டிருக்கும் அருந்தொடர், புதிய பதங்கள் ஆகிய இவைகளை மாணவர்கள் வெவ்வேறு வாக்கியங்களில் அமைத்து எழுதும் பழக்கத்தை அடைய ஆசிரியர் அவர்களைப் பழக்குதல் நலம். இலக்கணப் பாடங்கட்கு இப்புத்தகத்திலிருந்தே பல உதாரணங்களை மாணவர்கள் ஆய்ந்தெடுக்கும்படி செய்தல் பெரிதும் நலம். கதை எழுதுதல், கட்டுரை வரைதல் முதலியவைகளை முதலில் மாணவர்களைத் தம் வாய் மொழியில் சொல்லச் செய்து பிறகு அவைகளை எழுதச் செய்யலாம்.

1. காலைப் பொழுதை அறிவிப்பன யாவை என வினவுதல். மாலைப் பொழுதை வர்ணிக்கச் சொல்லுதல். திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை முதலிய பாடங்களுள் இரண்டொன்று பாடிக் காட்டுதல். காலையில் எழுவதால் உண்டாகும் நன்மைகளைக் கூறச் செய்தல். வைகறை - அதிகாலை (சுமார் நான்கு மணி முதல் ஆறு மணி வரை).

2. தவிர்த்து - நீக்கி. தயங்குதல் - மயங்குதல். முற்றம் - வீட்டின் முன் புறம். இசைதல் - சம்மதித்தல். ஏழைகட்கு உதவ வேண்டிய அவசியத்தை விளக்குதல். கிருஷ்ணன் கதையினைச் சுருக்கிக் கூறல். சிகாமணி - சிரசில் அணியும் மணி; அம்மணிபோல் சிறந்த குணமுடையவன் என்பது பொருள்.

3. செருக்கு - பெருமிதம். மேதினி - பூமி. மல்லர் - குத்துச்சண்டை செய்வதில் வல்லவர். உரம் - வன்மை. பொற்குணம் - பொன்போன்ற சிறந்த குணம். (அல்லும் பகலும்) அல் - இரவு. வீமன், இராமன், இராவணன் இவர்களின் சிறப்பை விளக்குதல். சேவலைப்போல் நிமிர்ந்து நடக்கவேண்டும் என்பதைத் தெரிவித்தல். உலகு அஞ்சும் - இங்கே அஞ்சுதல் அறியாமை மிகுதி நோக்கி; உலகு - உலகில் உள்ள பெரியோர். வித்தியா சாகரர், பச்சையப்பர் முதலானோர் குணங்களை விளக்குதல்.

5. சேர சோழ பாண்டிய நாடுகளைப் பிள்ளைகட்குப் படத்தில் குறிப்பாகக் காட்டுதல். இப்போதுள்ள பலவிதக் கொடிகளையும், அக்கொடிகளின் கருத்துக்களையும் விளக்குதல். பாரி, குமணன், அதியமான் இவர்கள் சரிதங்களைக் கூறுதல். ஆத்தி - ஒரு வகை மரம்; இங்கே அதன் மலரினைக் குறிக்கும். தோகை - மயிற்பீலி. போர் முனை - போர் மிகுதியாக நிகழும் பக்கம்.

7. பிணக்கு - கருத்து வேறுபாடு. ஆரவாரப் பேச்சு - உரத்த ஒலியுடன் கேட்போர் அஞ்சும்படி பேசுதல். வாயார வாழ்த்து தல் - வாயினல் பெரிதும் வாழ்த்துதல். இதனை நாடகமாகவும் நடிக்கச் செய்யலாம்.

8. நாலும் இரண்டும் - நான்கடிகளையுடைய நாலடியார் என் னும் நூலும், இரண்டடிகளையுடைய திருக்குறள் என்னும் நூலும். கேண்மை - நட்பு. தின்றற்று - தின்ருற் போன்றது. கைத்து - கையினிடத்து. கரவாது - ஒளிக்காது. நல்கூர்ந்தார் - தரித்திரர். சகடம் - வண்டி. அணிகலம் - ஆபரணம். கண்ணேட்டம் - தாட் சண்யம்.

9. இறுதி - முடிவு. போதிய - போதுமான. செப்பனிடு தல் - புதியதாகச் செய்தல். மாணவர்கள் பொது நலத்தின் பொருட்டுப் பல வகைகளிற் பாடுபட வேண்டிய அவசியத்தை விளக்குதல்.

10. மெய்ப்பித்தல் - உண்மையை விளக்கிக் காட்டுதல். விழை தல் - ஆசைப்படுதல். சோமகாந்தன் குறிப்பில் காணும் முக்கிய சம்பவங்களை வினவுதல். நாட்குறிப்புப் புத்தகம் எழுதப் பழக்கு தல்.

11. விழுமிய - சிறந்த. சான்று - அத்தாட்சி. பிரசுரம் - வெளியீடு. தலைக்கடை - வீட்டின் முன் பக்கம். கர்ண பரம்பரை - பிறர் சொல்லக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் முறையில் பல தலை முறையாக வழங்கி வருதல். குணு குணம் - நன்மை தீமை. இப் பழமொழிகளைக் கொண்டு வேளாண்மையைக் குறித்து வியாசம் எழுதப் பழக்குதல்.

13. ஊதியம் - இலாபம். அரற்றல் - சொன்னதையே திரும் பத் திரும்பச் சொல்லுதல். சின்னஞ்சிறு - மிகவும் சிறிய. எத் தகைய ஏழைகளும் பிறர்க்கு உதவி செய்து பேறெடுக்கலாம் என் பதை விளக்குதல்.

15. சோமன் - துணி. மோழை - தொழில் செய்ய வகை யில்லாதவன். கோது - குற்றம். ஊழ் - இங்கே தீவினையைக் குறிக்கும். சேய்மொழி - தூர தேசத்துப் பாஷைகள். நம் நாட் டில் உள்ள குறைகளையும், நாம் செய்ய வேண்டுவனவற்றையும் பிள்ளை களையே சொல்லச் செய்தல்.

16. கிடை - ஆடு அடைத்து வைக்கும் இடம். குதூகலம் - மிக்க சந்தோஷம். பெரு வழக்கு - பெரிதும் பேசப்படுவது. வழி பாடு - வணங்குதல், பிரார்த்தித்தல் முதலிய தொழில்கள். பிர தேசம் - இடம். காப்பிக் கியாழத்தின் நன்மை தீமைகளைக் குறித்து ஒருவருக்கொருவர் வினு விடைகளால் வாதம் நிகழ்த்தப் பிள்ளை களைப் பழக்கலாம்.

18. தமிழில் சிறந்த நூல்கள் இவை இவை என்றும் அந்நூல்

களை இயற்றினோர் இவர் இவர் என்றும் மாணவர் இள வயதிலேயே அறிந்திருத்தல் வேண்டும் என்பதே நோக்கம் ஆதலின் இப் பாடத்தில் வராத வேறு இன்றிமையாத சில புத்தகங்களைக் குறித் தும் ஆசிரியர் அவர்கட்கு எடுத்துரைத்தல் நலம்.

19. நிறுவிய - இயற்றிய. பரிவு - இரக்கங் காரணமாக வந்த அன்பு. நல்கிய - தந்த. திறம் - வல்லமை.

21. மேதாவி - அறிவாளி. வாளா - வீணுக. ஆன்றோர் - பல சிறந்த குணங்கள் அமையப்பெற்ற பெரியோர். இடையூறு - துன்பம். நம்முடன் வாழும் சிறு சீவராசிகளாய எறும்பு, ஈ முதலியவைகளின் வாழ்க்கை நிலைகளையேனும் பிள்ளைகள் தாங்களே நேரில் கவனித்தல் நலம். அவைகளின் வாழ்க்கை நிலைகளைக் கொண்டு பல அரிய நீதிகளையும் மாணவர் உணரலாகும்.

22. தேறுதல் - தெளிதல். வருவாய் - சம்பாதனை. பொருளின் அவசியத்தையும், அதனைச் சிறுகச் சிறுகச் சேர்க்கும் வழியினையும், உதவி செய்யும் குணத்தினையும் விளக்குதற்கு இக்காலத்தில் மேல் நாடுகளில் உள்ள பல பெரியோர்களின் சரிதங்களை எடுத்துக் கூறலாம்.

23-24. அவா - ஆசை. சமர்த்து - சாமர்த்தியம். இப்பாடம் போதிக்கும்போது பிள்ளைகளை மிருகக் காட்சிசாலைக்கு அழைத்துச் செல்லுதல் நலம். இணைத்தல் - சேர்த்தல். திறமை - வல்லமை. பூரண சுதந்திரம் - முற்றிலும் சுயேச்சை.

26. கொச்சை - இலக்கண அமைதி இல்லாத பதம். புலமை - அறிவு. கழறுதல் - சொல்லுதல். குழுமி - ஒன்று சேர்ந்து. பணித்தார் - கட்டளை யிட்டார். விதி - சட்டம். உவகை - சந்தோஷம். கொணு - கொண்டுவா. ஈமக்கடன் - இறந்தோர்க்குச் செய்யவேண்டியவைகள்.

29. கடிதம் எழுதும் முறை, தபால் நடைபெறும் வகை, கப்பல் யாத்திரை முதலியவைகளை இதன் சம்பந்தமாகப் போதிக்க லாம். இரங்கூன் இருக்கும் இடத்தினைப் பிள்ளைகட்குத் தேச படங் கொண்டு விளக்குதல் நலம்.

30. (1) பண்டை - பழமை. மண்டலம் - பூமி. சேய் - குழந்தை. தநயன் - புதல்வன் (தநயை பெண்பால்) (2) அயர்ச்சி - துன்பம். மாசு + இல் (மாசு- குற்றம்). இறைஞ்சி - வணங்கி. ஓரார் - எண்ணார். (3) முந்தையோர் - பழைய பெரியோர். விந்தை - புதுமை. (4) வயங்குதல் - விளங்குதல். (5) வழுத்திட - சொல்ல. (6) இம்மை - இப்பொழுது. (7) மாற்றம் - சொல். சுதன் - மகன். நிதம் - தினந்தோறும். (8) மதுகை - ஆசை. யாத்தல் - கட்டுதல். சதுரர் - வல்லவர். (9) வேளிர் - வேளாளர். (10) செம் மல் - பெரியோன். கடி - சிறப்பு. கேளிர் - சுற்றத்தார். கேண்மை - நட்பு. நங்கை - பெண். புன்சொல் - இழிவான சொல்.

(11) பகர்ந்த - சொன்ன. வேழம் - யானை. திண்ணம் - நிச்சயம். கொணர்ந்த - கொண்டு வந்த. (12) மால் - அறியாமை. குறிக்கொண்டு - அடையாளமாகக் கொண்டு. (13) அந்தகர் - குருடர். வியப்பு - ஆச்சரியம். வரிசை - வெகுமதி. (14) அருவி பாய - சிறு ஆறு போல் கண்ணீர் வழிந்தோட. (15) கவிஞர் - புலவர்.

33. பகருவர் - சொல்வர். சால - மிகவும். விக்கிரகம் - சிலை. முத்து,முத்துச்சிப்பி இவைகளை நேரில் காட்டிப் போதித்தல் நலம்.

34. இப்பாடத்தின் முடிவில் உள்ள சொற்களையும், சொற்றொடர்களையும் மாணவர்கள் பல முறை படித்தல் வேண்டும். இவை போன்ற வேறு சில சொற்களையும், சொற்றொடர்களையும், ஆசிரியர் மாணவர்க்கு ஆய்ந்தெடுத்து உதவின் பெரிதும் நலம்.

35. பரிந்து - ஆசையோடு. பான்மை - தன்மை. தண்டலை - இஃது ஓர் ஊர். பார் - பூமி. தணல் - நெருப்பு. உழல்வது - வருந்தித் திரிவது. இப்பாடல்களை மாணவர் மனப்பாடம் பண்ணுதல் வேண்டும்.

36. (1) திரு - செல்வம். எழில் - அழகு. பரிவு - இரக்கம். மருவும் - சேர்ந்திருக்கும். (2) ஊழ் - நல்வினை தீவினைகள். உறம் - வன்மை. கோது - குற்றம். பேழை - பெட்டி. (3) ஒருமை - ஒற்றுமை. (4) கலை - சாத்திரம். துலை - திராசு. துகள் - குற்றம். (5) வண்மை - கொடுக்கும் தன்மை. தாய்மை - தாய்போன்ற தன்மை. தனி - ஒப்பற்ற. சேய்மை - தூரம். செவி சாய்த்தல் - கேட்டல்.

37. மூதுரை: (1) அட்டாலும் - காய்ச்சினாலும். குன்றாது - குறையாது. அளவளாய் - கூடிக்கலந்து. நட்டாலும் - சிநேகித்தாலும். நண்பு அல்லார் - நட்புக்குணம் இல்லாதவர். மேன்மக்கள் - சிறந்த குணமுடையவர்கள். (2) ஆங்கே - அவ்வாறே. பொசியும் - பாயும். தொல் - பழமையாகிய. (3) மடைத்தலை - வயலுக்கு ஏரி குளங்களிலிருந்து நீர் வரும் வழி. உறுமீன் - தனக்கு வேண்டிய மீன். (4) சாந்தனையும் - சாகுமளவும். ஆந்தனையும் - ஆனமட்டும். மாந்தர் - மனிதர். கண்டீர் - முன்னிலை அசை.

நல்வழி: (1) நீதி வழுவா நெறிமுறையின் - நீதி வழுவாத நன்னெறி முறையின்படி. மேதினி - பூமி. பெரியோர் - உயர் குலத்தோர். பட்டாங்கு - நீதி சாத்திரம். இறுதியடி ஒரு வாக்கியம். (2) ஏற்றவர்க்கு - இல்லை என்று கேட்டவர்க்கு. நல்கூர்ந்தார் - ஏழைகள். இசைந்து - சம்மதித்து. (3) ஏல் - ஏற்றுக்கொள். நோ - துன்பம். இடும்பை - துன்பம். கூர் - மிகுந்த. அரிது - கஷ்டமானது. (4) மானம் - பெருமை. போன திசை - சென்ற இடங்களில். நல்லார் - நல்லவர் அல்லது பெண்கள். நாடு - தெரிந்துகொள். (5) கற்றா (கன்று + ஆ) - கன்றையுடைய பசு. உற்றார் - பந்துக்கள். (6) இல்லாள் - மனைவி. மற்று - அசை.

8